
திருமலை திருப்பதி தேவஸ்தானம்
ஸப்தகிரி
சமய மாத இதழ்
செப்டம்பர் 2019, விலை ரூ.5/-
04-10-2019
வெள்ளிக்கிழமை
இரவு
கருடவாகனம்
திருமலையப்ப ஸ்வாமி
வருடாந்திர பிரம்மோத்ஸவம்
30-09-2019 முதல் 08-10-2019 வரை

# 2019 ஜூலை 13,14 தேதிகளில்
# மேதகு இந்தியக்குடியரசுத்தலைவர்
# திரு. ராம்நாத் கோவிந்த் அவர்கள் குடும்பத்தாருடன்
# திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி,
# திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார்,
# திருமலை ஸ்ரீவராஹ ஸ்வாமி மற்றும்
# திருவேங்கடமுடையானை
# தரிசித்த காட்சிகள்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்


















*த்$_3$ருஷ்ட்வா து பாண்ட$_3$வாநீகம்*
*வ்யூட$_4$ம் து$_3$ர்யோத$_4$நஸ்தத$_3$ா ।*
*ஆசார்யமுபஸங்க$_3$ம்ய*
*ராஜா வசநமப்$_3$ரவீத் ॥*

"அப்பொழுது ராஜா துரியோதனன்
அணிவகுத்து நிறுத்தப்பட்டிருந்த
பாண்டவர் படையைப் பார்த்ததும்
குருவாகிய துரோணாசார்யரை
அணுகி, இந்த வார்த்தையைக்
கூறலானான்"

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–2*



*பிரானென்றுநாளும் பெரும்புலரியென்றும்*
*குராநற்செழும்போதுகொண்டு - வராகத்து*
*அணியுருவன் பாதம்பணியுமவர்கண்டீர்*
*மணியுருவம் காண்பார்மகிழ்ந்து*

மஹோபகாரங்கள் பண்ணினவனே!
என்றும், இன்றே "நல்விடிவு" என்றும்
(கொண்டாடிக் கொண்டு), நாள்தோறும்
மணம் மிக்க அழகிய குரா மரப்
புஷ்பங்களைக் கொண்டு, அழகிய
வராஹவுருக்கொண்ட பெருமானுடைய
திருவடிகளை வணங்குபவர்களே,
(அப்பெருமானுடைய) திவ்ய மங்கள
விக்ரஹத்தை உகப்புடன் ஸேவிப்பார்கள்

*- இரண்டாந்திருவந்தாதி*

# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம் ஆவணி/புரட்டாசி மாதம் தக்ஷிணாயணம் வர்ஷருது சகவருஷம் 1941 கலியுகாதி 5120 செப்டம்பர் 2019

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 15 | ஞாயிறு | துவி/திரு | உத் | ஸ்ரீபலராம ஜயந்தி, ஸ்ரீவராஹ ஜயந்தி, க்ஷயதிதி, ஹரிதாளிகா கௌரி விரதம். |
| 2 | 16 | திங்கள் | சது | ஹஸ் | ஸ்ரீவிநாயக சதுர்த்தி, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் ஸ்ரீவிநாயகர் உற்சவம். |
| 3 | 17 | செவ் | பஞ் | சித்/சுவா | ரிஷி பஞ்சமி. |
| 4 | 18 | புதன் | சஷ் | விசா | சஷ்டி, தனிய நாள். |
| 5 | 19 | வியா | சப் | அனு | வைத்-சிரா அமுக்தாபரண ஸப்தமி |
| 6 | 20 | வெள்ளி | அஷ் | கேட் | ராதாஷ்டமி, தூர்வாஷ்டமி. |
| 7 | 21 | சனி | நவ | மூல | ஆவணி மூலம், திரிதினஸ் ப்ருக் (நட்), ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 8 | 22 | ஞாயிறு | தச | மூல | நீருள்ள பழங்கள், காய்கறிகள் பயிரிட, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 9 | 23 | திங்கள் | ஏகா | பூரா | பத்மநாப ஏகாதசி, சுக்ரன்-கன்னி, ரிஷிகேஷ் ஸ்ரீபார்வதி தேவி சமேத ஸ்ரீசந்திரமௌலீஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 10 | 24 | செவ் | துவா | உத்ரா | ச்ரவணம், வாமன ஜயந்தி, கல்கி த்வாதசி திருவோணம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம், ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு, தேவுனி கடபா ஸ்ரீலஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 11 | 25 | புதன் | திர | திவோ | பிரதோஷம், புதன்-கன்னி, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 12 | 26 | வியா | சசி | அவி | விருத்தி திதி, அனந்த சதுர்தசி, ஸ்ரீநடராஜர் அபிஷேகம், நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம், ரிஷிகேஷ் ஸ்ரீபார்வதி தேவி சமேத ஸ்ரீசந்திரமௌலீஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 13 | 27 | வெள்ளி | சசி | சத | பௌர்ணமி, உமாமஹேஸ்வர விரதம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம் நிறைவு, தேவுனி கடபா ஸ்ரீலஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு, நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 14 | 28 | சனி | பௌர் | பூரட் | கரி நாள். |
| 15 | 29 | ஞாயிறு | பிர | உத்ரட் | பாத்ரபத பஹுள., மஹாளயம் ஆரம்பம். |
| 16 | 30 | திங்கள் | துவி | ரேவ | இயற்கை பாதிப்பு. |
| 17 | 31 | செவ் | திரு | அஸ் | சங்கடஹர சதுர்த்தி, சூரியன் கன்னி ப.1ம.02நி. ஷடசீதி. |
| 18 | 1 | புதன் | சது | அஸ் | சனி வ.நிவர்த்தி மஹாபரணி. |
| 19 | 2 | வியா | பஞ் | பர | கிருத்திகை, சுக்ரன்,மே.உதயம். |
| 20 | 3 | வெள்ளி | சஷ் | கார் | சஷ்டி, வெண்ணிற மலர் செடிகள் பயிரிட. |
| 21 | 4 | சனி | சப் | ரோகி | சுக்ரன் மே.உதயம். |
| 22 | 5 | ஞாயிறு | அஷ் | மிரு | மத்யாஷ்டமி, ருத்ராஷ்டமி, காலாஷ்டமி, வ்ய-சிரா புதன். மே. உதயம் (மஹாவ்யதீபாதம்). |
| 23 | 6 | திங்கள் | நவ | திரு | மஹா நவமி /அவிதவா நவமி, பெங்களூரு ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 24 | 7 | செவ் | தச | புன | தோட்டம் சீர் செய்ய, அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 25 | 8 | புதன் | ஏகா | பூச | இந்திர ஏகாதசி, செவ்-கன்னி, அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 26 | 9 | வியா | துவா | ஆயி/மக | பிரதோஷம், தனிய நாள், பெங்களூர் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 27 | 10 | வெள்ளி | திர/சது | பூர | மாதசிவராத்ரி, க்ஷயதிதி, கடல் சீற்றம். |
| 28 | 11 | சனி | அமா | உத் | சர்வ மஹாளய அமாவாசை. |
| 29 | 12 | ஞாயிறு | பிர | ஹஸ் | ஆஸ்வீஜ சுத்த, நவராத்திரி ஆரம்பம். புதன்-துலாம், திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் நவராத்திரி உத்ஸவம் ஆரம்பம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் கலச ஸ்தாபனம், உபமாக ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 30 | 13 | திங்கள் | துவி | சித் | சந்திர தரிசனம், வைத்-சிரா., திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம், உபமாக ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம். |



# ஸப்தகிரி

## சமயமாத இதழ்

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

**செப்டம்பர் 2019** மலர் 50 இதழ் 04

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| **ஆழ்வாராசாரியர்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் ஆழ்வார்கள் கண்ட வாமனன்** - திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 7 |
| **ஸ்ரீபலராமர்** - திருமதி பிரேமா வரதன், புதுதில்லி. | 12 |
| **கம்பர் போற்றும் திருமலை** - திரு. ஆர்.வி. கமலக்கண்ணன், காஞ்சிபுரம். | 14 |
| **திவ்ய திருத்தலம் திருமலை** - திரு. வி. வெங்கடரமணா, திருப்பதி. | 17 |
| **நமது திருக்கோயில் : ஸ்ரீவராஹ ஸ்வாமி ஆலயம், திருமலை** - திருமதி. பி.காயத்ரி, கேரளா. | 20 |
| **புண்ணியம் அருளும் புரட்டாசி மாதம்** - திரு. டி.ஆர். பரிமளரெங்கன், திருச்சி. | 22 |
| **வெற்றி தரும் விநாயகர்** - திருமதி. கே. சுப்புலெட்சுமி, பரமக்குடி. | 24 |
| **பச்சை தோரணம் : ஆழ்வார்களும் ஆனந்த நிலையனும்** - திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி. | 31 |
| **பார்த்தனைக் காத்த சாரதி** - செல்வி. என். நித்தியா, மேல்படூர். | 36 |
| **பூரண வரமருளும் ஸ்ரீவராஹ பெருமாள், ஸ்ரீமுஷ்ணம்** -நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம். | 37 |
| **ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–பிருது மஹாராஜாவின் சரித்திரம்** - டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர். | 40 |
| **அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 43 |
| **108 திவ்யதேச வைபவம் – தில்லைத் திருச்சித்ரகூடம்** - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 46 |
| **பகவத் கீதை–இளைய சமுதாயம் ஆத்ம பலத்தை அறிந்து கொள்** - திரு. வ.ஒ. சுரேஷ், சத்திரவாடா. | 49 |
| **ஆயுர்வேதம் – புளி** - திருமதி. வி.உஷா, திருப்பதி. | 51 |
| **2019, செப்டம்பர் மாத ராசி பலன்** - திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர். | 53 |



சிறப்பு ஆசிரியர் :
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

பிரதான ஆசிரியர் :
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
**திரு. R.V. விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

ஓவியம் :
**திரு. P.சிவப்பிரஸாத் (ஓய்வு)**
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**



*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்.
-பிரதான ஆசிரியர்

**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : **திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை, திருமலை**

பின்னட்டை : **திருமலையப்ப ஸ்வாமி திருத்தேர், திருமலை**



உங்களுடன்...

# திருமலை பிரம்மோத்ஸவம்

திருமலையில் சுயம்புவாக எழுந்தருளி கொலுவீற்றிருக்கும் திருவேங்கடமுடையானுக்கு நடைபெறும் உத்ஸவங்களிலேயே சிறப்பானதும், மேன்மையானதும் பிரம்மோத்ஸவமேயாகும். உத்+ஸவம் = உத்ஸவம். “உத்” என்றால் “மேன்மை” என்றும், “ஸவம்” என்றால் “யக்ஞம்” என்றும் பொருள். சிறப்பான இந்த யக்ஞத்தை தொடர்ந்து பத்து நாட்களும் சதுர்முக பிரம்மாவால் நடத்தப்படுவதால் இதற்கு பிரம்மோத்ஸவம் என்று பெயர்.

இந்த பிரம்மோத்ஸவம் உலக நன்மைக்காகவும், நித்ய பூஜையில் ஏற்படும் குறை நிவர்த்திக்காகவும், நித்ய பூஜையின் தோஷ நிவர்த்திக்காகவும், சர்வ அசுப நிவர்த்திக்காகவும் செய்கின்றனர். அதுமட்டுமின்றி எம்பெருமானின் மூலமூர்த்தியின் (துருவபேரம்) சக்தியை மேம்படுத்தவும் இப்பிரம்மோத்ஸவத்தை நடத்துகின்றனர். அதனால் தான் இதற்கு மஹோத்ஸவம், திருநாள், கல்யாணோத்ஸவம் என்றும் பெயர்கள் உண்டு.

பிரம்மோத்ஸவம் ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்றது. ஊரெல்லாம் உற்சாகத்துடன் கொண்டாடுகின்றனர். அந்த ஆனந்த கொண்டாட்டத்தில் கடந்த கால நிகழ்வுகளை மறந்து விடுவது நம் சுபாவமாகும். அன்றைய காலத்திற்கும் இன்றைய காலத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம்! எவ்வளவோ மாற்றங்கள்! ஆதிகாலத்திலிருந்து எத்தனையோ அரசர்கள், ராணிகள் பிரம்மோத்ஸவத்தை வெகு வைபவமாக நடத்தி வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர். முற்காலத்தில் ஒவ்வொரு மாதமும் ஒரு பிரம்மோத்ஸவம் நடைபெற்றது. வருடத்திற்கு பதினோரு மாதம் பதினோரு பிரம்மோத்ஸவங்கள் நடைபெற்றன. அதற்கு விடாமுயற்சியே முதன்மை காரணமாகும். ஆதிகாலம் தொட்டு எத்தனையோ மகாபிரபுக்கள் எம்பெருமானுக்கு பிரம்மோத்ஸவங்களை நடத்தினர். பிரம்மோத்ஸவத்தின் மகிமைகளையும் நன்மைகளையும் உலகம் முழுவதும் பரப்பினர்.

அவ்வாறு அன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு மாதமும் நடைபெற்ற பிரம்மோத்ஸவம் தற்பொழுது ஒரே ஒரு பிரம்மோத்ஸவமாக அதுவும் புரட்டாசி மாதத்தில் சாட்சாத் பிரம்ம தேவனால் துவங்கப்பட்டதாகக் கூறப்படும் இப்பிரம்மோத்ஸவம் மட்டும் நிரந்தரமாக இன்றளவும் எம்பெருமானுக்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். இங்ஙனே அன்று முதல் இன்று வரை எம்பெருமானின் உத்ஸவங்களில் பிரம்மோத்ஸவத்திற்கு முன்னுரிமை உள்ளது. இந்த பிரம்மோத்ஸவத்தில் ஸ்வாமியை தரிசிப்பவர்களுக்கு மறுபிறவி என்பதே இல்லையாம். அதே போன்று எம்பெருமானின் வாகன சேவைகளை தரிசிப்பதால் முக்திக்கு அது வழிகோலுகிறது. இது குறித்தே திருமழிசையாழ்வார் “காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர ஓண விழவில் ஒலியதிர பேணி” என இப்பிரம்மோத்ஸவத்தைக் காண ஆசைப்பட்டார்.

சேஷ வாகனம் – குடும்ப நன்மை; ஹம்ச வாகனம் – பிரம்மபத பிராப்தி; சிம்ம வாகனம் – தைரிய சித்தி; முத்துப் பந்தல் வாகனம் – சகல சௌபாக்கிய சித்தி; கல்பவிருக்ஷ வாகனம் – மேலான பல பிராப்தி; சர்வபூபால வாகனம் – கீர்த்தி பிராப்தி; மோகினி அவதாரம் – மாய மோக நாசனம்; கருட வாகனம் – சர்வ பாப பிராயசித்தம்; அனுமன் வாகனம் – பகவத் பக்தி பிராப்தி; யானை வாகனம் – கர்ம விமுக்தி; சூர்யப்பிரபை வாகனம் – ஆயுள் ஆரோக்கிய பிராப்தி; சந்திர பிரபை வாகனம் – மானசீக சாந்தி பிராப்தி; திருத்தேர் – மனோவாஞ்சபல பிராப்தி; குதிரை வாகனம் – கலிகல்மஷ நாசனம்; சக்கர ஸ்நானம் – சகல பாப விமோசனம் போன்ற பலன்கள் இவ்வாகன சேவையை சேவிப்பதால் கிட்டும் என்பது புராண வாக்காகும். ஆதலால் இந்த வாகன சேவைகளில் அனைவரும் பங்கு கொண்டு எம்பெருமானின் அருளுக்கு பாத்திரமாகுங்கள் என “ஸப்தகிரி” வேண்டுகின்றது.

வாருங்கள் ! பிரம்மோத்ஸவத்தைக் காணுங்கள்!! மகிழுங்கள்!!!



# ஆழ்வார்கள் கண்ட வாமனன்



திரு.எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

பகவானின்அவதாரங்களில் வாமன அவதாரம் சிறந்ததொரு அவதாரம் ஆகும். அவதாரம் என்றாலே மேலே இருந்து கீழே இறங்கி வருவது. அவதாரங்களின் நோக்கம் தர்மத்தை நிலைநாட்டுவதாகும். வாமன அவதாரமும் திருவிக்கிரம அவதாரமும் ஒரே அவதாரத்தின் ஆதி அந்தங்கள். வாமனன் விதை என்றால் திருவிக்கிரமன் விருட்சம். வாமனன் மூன்றடி மாணிக்குறளன் எனில் திருவிக்கிரமன் ஓங்கி உலகளந்த உன்னத வடிவினன். ஆழ்வார்கள் இரண்டு அவதாரங் களைத் தனித்தனியாகவும் சேர்த்தும் பாடிப் பரவியிருக்கிறார்கள். பீஷ்மாச்சாரியார் தமது விஷ்ணு சகஸ்ர நாமத்திலே "வாமன", "திருவிக்கிரம" என்று இரண்டு திருநாமங்க ளையும் கொண்டாடுகின்றார். மிக முக்கிய மான துவாதச (பன்னிரண்டு) நாமங்களிலே இரண்டு திருநாமங்களும் இடம் பெற்றிருப் பது ஒன்றே இந்த அவதாரத்தின் மேன்மை யைப் புரிந்து கொள்ளப் போதுமானதாகும்.

பெரியாழ்வார் இந்த அவதாரத்தை வரிசையிட்டுச் சொல்ல வருகின்ற பொழுது *''அன்னமும் மீன் உருவும் அரியும் குறளும் ஆமையும் ஆனவனே''* என்று (பெரியாழ். திரு.1.7.11) பாடுகின்றார்.

சங்க இலக்கியத்திலேயே வாமனன் பெருமை பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. வாமன அவதாரம் நிகழ்ந்தது ஆவணி மாதம், திருவோண நட்சத்திரத்தில். இன்றும் இந் நன்னாள் கேரளத்தில் ஓணம் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான மதுரைக்காஞ்சியில் இது திருமாலின் திருநாள் என மாங்குடி மருதனார் விவரிக்கிறார்.

*''கணம் கொள் அவுணர் கடந்த பொலம் தார்*
*மாயோன் மேய ஓண நன் நாள்*

–மதுரைக்காஞ்சி அடிகள் 590 முதல் 592 வரை

இனி வாமன அவதாரத்தின் பின்புலத்தைக் காண்போம்.

மகபலிச் சக்கரவர்த்தி தீவிரமான விஷ்ணு பக்தனான பிரகலாதனின் பேரன். ஒருமுறை அவன் மிகப் பெரிய யாகம் ஒன்றை நடத்தினான். அந்த யாகம் தனக்கு ஆபத்தாக முடியும் என்று அஞ்சிய இந்திரன் மகா விஷ்ணுவிடம் முறையிட்டான். இந்திரனுக்காக விஷ்ணு கச்யபர் அதிதிக்கு மகனாகத் தோன்றி னார். மகரிஷிகள் அவருக்கு வாமனன் என்று திருநாமமிட்டு உப நயனம் செய்து வைத்தார்கள். உபசாரமாக கதிரவன் அவருக்கு காயத்ரி மந்திரத்தை உபதேசித்தான். பிரகஸ்பதி பிரம்ம



சூத்திரத்தை (பூணூல்) கொடுத்தார். சந்திரன் தண்டத்தை அளித்தார். பிரம்மா கமண்டலம் வழங்கினார். குபேரன் பிச்சை பாத்திரம் கொடுத்தான். உபேந்திரன் என்ற பெயரோடு குள்ளமான வாமன உருவத்துடன் யாகசாலைக்கு வந்தார்.

சியாமள மேனி. கையில் குடை. திருவடியில் பாதரட்சை. காதில் மகர குண்டலம். நெஞ்சிலே ஸ்ரீவத்சம். கைவளை. தோள்வளை. இடையிலே மேகலை. மஞ்சள் பட்டாடை. கழுத்திலே வண்டுசூழ் துளப மாலை கௌஸ்துப மணி. அவனை விட்டு என்றும் பிரியாத மகாலட்சுமித் தாயார் மார்பில் இருக்க அதனை மான் தோலால் மறைத்துக் கொண்டு யாக சாலைக்கு வந்தாராம். உடனே யாகசாலை ஒளிமயமானது. எங்கும் பிரகாசம். மகரிஷிகள் யாகம் செய்வதை நிறுத்தி விட்டு பகவானையே வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள்.

வாமன பகவான் மாவலியின் வேள்விச் சாலைக்கு எப்படி வந்தார் என்பதை,

*“கண்டவர்தம் மனம்மகிழ*
*மாவலி தன் வேள்விக்களவில் மிகு சிறு குறளாய்”*

–பெ.தி.

என்று வர்ணிக்கிறார் திருமங்கையாழ்வார்.

பலிச்சக்கரவர்த்தி அவரை அன்புடன் வரவேற்றான். அர்க்கிய பாத்யாதிகளை தந்து பூஜித்து முறையாக ஆசனம் அளித்தான்.

மகாபலியிடம் மூன்றடி மண் கேட்டார். எப்படிக் கேட்டானாம்? பிட்சையாகக் கேட்டானாம்.

*“மூவடி மண் என்று இரந்திட்டு”* என்கிறார் திருமங்கையாழ்வார். மிகுந்த செருக்குடன் இருந்த மகாபலி அம்மண்ணை தரச் சம்மதம் தெரிவித்தான். உடனடியாக பகவான் விண்ணுக்கும் மண்ணுக்குமாய் திரிவிக்கிரம அவதாரம் எடுத்து – ஒரு திருவடியால் மண்ணுலகையும், ஒரு திருவடியால் விண்ணுலகையும் அளந்து – மூன்றாவது அடியை, மகாபலி தலையில் வைத்து, அவனுடைய அகந்தையை ஒழித்து. அவனை பாதாள உலகத்துக்கு அனுப்பினார்.

ஆண்டாள் இவரை “உத்தமன்” (*ஓங்கி உலகளந்த உத்தமன்* – திருப்பாவை) என்று கொண்டாடுகிறாள். உலகத்தில் நான்கு விதமான மனிதர்கள் வாழ்கிறார்கள்.. பிறரையும் துன்புறுத்தி தானும் துன்பப்பட்டு கிடப்பவன் அதமா அதமன். தான் மட்டும் வாழ்பவன் அதமன். பிறரையும் வாழ வைத்து தானும் வாழ்பவன் மத்திமன். தன்னையே கொடுத்துப் பிறரை வாழ வைப்பவன் உத்தமன். இந்திரனுக்காக ஆயுதம் எடுக்காமல் சகல உலகங்களுக்கும் சகல செல்வங்களுக்கும் அதிபதியான பகவான் மாணிக்குறளனாய் (குள்ள உரு பிரமசாரி) தன் பெருமையை தாழ விட்டுக் கொண்டு வந்ததால், அவனை “உத்தமன்” என்று கொண்டாடி, அவனுடைய திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுகிறாள் கோதை நாச்சியார்.

திருமங்கையாழ்வார் காழிச்சீராம விண்ணகரம் (சீர்காழி திருத்தலத்துக்கு) வந்தவுடன், அவரை ஞான சம்பந்தர் ஒரு குறள் பாடுக என்று கேட்டவுடன், அதையே முதல் அடியாகக் கொண்டு, வாமன அவதாரத்தில் தொடங்கி திருவிக்கிரம அவதாரத்தில் முடிக்கிறார்.

*“ஒரு குறளாய் இருநிலம் மூவடி மண் வேண்டி*
*உலகனைத்தும் ஓரடியால் ஒடுக்கி ஒன்றும் தருக வெனா*
*மாவலியை சிறையில் வைத்த தாடாளன்”* என்று கொண்டாடுகின்றார்.

ஆண்டாள் தான் விரும்பிய திருவரங்கச் செல்வனை வாமனனாகவே காண்கின்றார்.

*“மச்சணி மாட மதிளரங்கர் வாமனர்”* என்பது நாச்சியார் திருமொழி.

வாமனனைப் பார்த்தவுடன் இவன் சிறுவன்தானே இவனால் எந்த அளவுக்கு நிலத்தை அளந்து கொண்டு விட முடியும். நம்மிடம் ஏராளமான நிலம் இருக்கிறதே என்று நினைத்த மாவலியின் கொட்டம் அடங்க அனைத்து உலகங்களையும் தான் அளந்து கொண்

டான். வந்தது ஒரு உருவம் (வாமனன்), கொண்டது வேறு ஒரு உருவம் (திருவிக்கிரமன்) என்பதினால் வாமன உருவத்தைப்பாடுகின்ற ஆண்டாள் செல்ல மாகப் *"பொல்லாக்குறள் உரு"* என்று பாடுகின்றார்.

*"பொல்லாக் குறள் உருவாய் பொய்கையில் நீரேற்று*

*எல்லா உலகும் அளந்து கொண்ட எம் பெருமான்."*

–நா.தி.

பொய்கை என்கிற பதத்தில் ஒரு சின்ன நயத்தையும் நாம் பார்க்கலாம். இந்த கை மெய்யான கையல்ல. பொய் கை. வாமனனின் சின்னஞ்சிறு கையல்ல. உண்மையில் அந்தக் கை இந்த உலகத்தையே அளக்கக் கூடிய மண்ணுக்கும் விண்ணுக்குமாக வளரக்கூடிய பெரும் கை.

ஆண்டாளைப் போலவே திருமங்கையாழ்வார் வாமனனைக் குறிப்பிடும் போதெல்லாம் கள்ளன் என்ற பதத்தையிடாமல் குறிப்பிடுவதில்லை.

*"கள்ளக் குறளாய் மாவலியை வஞ்சித்து உலகம் கைப்படுத்த"* – பெரி.திரு. 5.1.5. & 5.1.2

*"கூற்றேர் உருவின் குறளாய் - நில நீர் ஏற்றான்"* (பெ.தி.5.2.4) இவையெல்லாம் சில உதாரணங்கள். இன்னும் நிறைய உண்டு.

இந்த மண்ணை நமதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். நம் பேரில் பட்டா போட்டுக் கொள்கிறோம். பட்டா செய்து கொடுத்தவனும் உரிமையாளன் அல்ல. பட்டா பெற்றவனும் உரிமையாளன் அல்ல. உண்மையில் இந்த மண், இந்த உலகம், இந்த அண்டாதி அண்டங்கள் எல்லாம், பகவானின் உடைமைகள் அல்லவா. அவன் சொத்தை நாம் அபகரித்து நம்முடைய பெயரிலே சாசனப்படுத்திக் கொள்கிறோம். இது இயல்பாக நடக்கிறது.

நம்மாழ்வார் சுவையான, ஆனால், உண்மையான ஓர் கருத்தைச் சொல்கிறார். எல்லோரும் ஏதோ வாமனன் மாவலியை வஞ்சித்து மண் கவர்ந்ததாகச் சொல்கிறார்கள். இது சரியா... மாவலி உண்டாக்கிய உலகமா இது. பகவான் படைத்த அவனுக்குரிய நிலமல்லவா இது. தன் நிலத்தை தானே இரந்து பெற வேண்டிய நிலையை எண்ணி இரங்காது வஞ்சித்தான் என்பது எப்படி நியாய மாகும் என்று கேட்கிறார்.

இதைப் பெண் தன்மை ஏறிட்டு பராங்குச நாயகியாக நம்மாழ்வார் பாடுகிறார்.

*"மண்ணை யிருந்து துழாவி வாமனன் மண்ணிது என்னும்*

*விண்ணைத் தொழுது மேவு வைகுந்தம் என்று கைகாட்டும்"*

திருவாய். 4.4.1

மண் என்பது லீலா விபூதி. விண் என்பது நித்ய விபூதி. இரண்டும் அவனுடையது என்று நாயகி சொல்லும் நயத்தில் வாமனனின் சீர்மை வெளிப்படுகிறது.

முதல் மூன்று ஆழ்வார்களுக்குமே வாமன அவதாரத்தில் ஈடுபாடு அதிகம். பொய்கையாழ்வார் தமது முதல் திருவந்தாதியில் வாமன அவதாரத்தையும் நரசிம்ம அவதாரத்தையும் இணைத்து ஒரு அற்புதமான செய்தியைச் சொல்கிறார். பாசுரம் இது.

*"முரணை வலிதொலைதற் காமன்றே, முன்னம்*

*தரணி தனதாகத் தானே - இரணியனைப்*

*புண்நிரந்த வள்ளுகிரால் பொன்னாழிக் கையால், நீ*

*மண்ணிரந்து கொண்ட வகை?"*

–முதல் திரு.36

வாமன அவதாரத்திற்கு முற்பட்டதான நரசிம்ம அவதாரத்தில் பூமியை தன்னுடையதாக நினைந்து இருக்கக்கூடிய இரணியனை கூர்மையான நகங்களாலே கிழித்து உலகத்தை மீட்டவன் ஏன் மகாபலிக்கு தண்டனை தரவில்லை என்பது



ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு **0877-2264543** தொலை பேசியில் தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும். மேலும் sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவியுங்கள்.

கேள்வி. இதற்கு என்ன பதில்? மகாபலியை விட்டு வைத்ததற்கு காரணம் இரணியனைப்போல அவனுக்கு பகவானிடத்திலே பகை இல்லை. பாகவத அபசாரம் இல்லை. வள்ளல்தன்மை உடையவனாகவும் இருந் தான் என்பதற்காக அவனிடம் சென்று பகவான் யாசித் தானாம்.

வாமனனின் பாதத்தை *“மண்ணளந்த பாதம்”* என்ற நான்முகன் திருவந்தாதியில் திருமழிசை ஆழ்வாரும் கூறுகின்றார். வாமனன் திருவடிகளைச் சேர்பவர் களுக்கு நிச்சயம் நரக வாசம் கிடையாது என்று இரண் டாம் திருவந்தாதியில் (இரண்டாம் திரு.21) பூதத்தாழ் வார் பாடுகின்றார். வாமனனைப் புகழ்வதுதான் இந்த வாய்க்கு உணவாகும் என்று பெரிய திருவந்தாதியில் (பாசுரம் 52) நம்மாழ்வார் போற்றுவதோடு வாமனனைப் புகழ்வதே பிறவிப் பிணி நீக்கும் மருந்து *(மண்ணளந் தான் நங்கள் பிணிக்கு மருந்து)* என்று பாடுகின்றார்.

இனி சில வாமன தலங்களைச் சிந்திப்போம். கேரளாவில், திருக்காட்கரை காட்கரையப்பன் கோயில், மகாவிஷ்ணு வாமன அவதாரம் எடுத்து நிலத்தில் மகாபலியை அழுத்திய தலம் என்பர்.

திருவெள்ளியங்குடி: மாபலி தானம் தரும்போது, ஒரு வண்டாகித் தடுத்ததால் ஒரு கண்ணை இழந்த சுக்கிரன் தவமிருந்து, மீண்டும் கண்ணைப் பெற்ற திருத்தலம். வெள்ளி என்ற சுக்கிரனின் பெயரோடு வழங்குகிறது. இத்தலம் கும்பகோணம் அருகில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதியுண்டு. மிக்க பெருபுகழ் மாவலி வேள்வியில்,

*“தக்கது இது அன்று” என்று தானம் விலக்கிய*
*“சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய*
*சக்கரக் கையனே அச்சோ அச்சோ*
*சங்கமிடந்தானே அச்சோ அச்சோ.”*

என்று இந்த வரலாற்றைப் பாடுகிறார், பெரியாழ்வார் (1:9:7).

சீர்காழி : மூலவர் திரிவிக்கிரமன். தாடாளன். தாள்+ஆளன்; தன் தாள்களால் உலகை அளந்த தாளா ளன்; தாடாளன். மாபலி யாகம் செய்த இடத்தில், தானும் யாகம் செய்ய விசுவாமித்திரர் விரும்பினார். யாகம் முடியும் வரையில் இடையூறுகள் வாராமல் காக்க இராமலக்குவர்களைத் துணைக்கு அழைத்ததாக வான்மீகி கூறுவார்.

திருக்குறுங்குடி : திருநெல்வேலியிலிருந்து தென் மேற்காக நாற்பத்தேழு கி.மீ. தூரத்திலுள்ள வாமனத் திருத்தலம். ஆகவே இதற்குக் குறுங்குடி என்ற திருப் பெயர் அமைந்தது.

திருவரங்கம் : அரங்கநாதர் கோவிலில் வாமன னுக்குத் தனிச் சந்நிதி உள்ளது.

வாமனன் எங்கே வசிக்கிறார் என்று சொன்னால் நிச்சயமாக திருமலையிலே நின்று கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார் என்பதை மூன்றாம் திருவந்தாதியில் காட்டுகிறார் பேயாழ்வார்.

*“தெளிந்த சிலா தலத்தின் மேலிருந்த மந்தி*
*அளிந்த கடுவளையே நோக்கி - விளங்கிய*
*வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே மேலொரு நாள்*
*மண் மதியில் கொண்டுகந்தான் வாழ்வு”*

– மூன்றாம் திரு. 58

அழகான கற்பாறையின் மீது அமர்ந்திருந்த பெண் குரங்கு (மந்தி) தனது துணையான ஆண் குரங்கைப் பார்த்து தனது கூர்ந்த மதியால் மாவலியிடம் இருந்து இவ்வுலகத்தை அளந்து பெற்றுக் கொண்டு மகிழ்ந்த வாமனன் திருத்தலமாகும் திருமலை என்று பாடுகின் றார் பேயாழ்வார்.

வெண்மதி என்பதற்கு தெளிந்த அறிவு அல்லது ஞானம் என்றும் பொருளுண்டு. அந்த அறிவைப் பெற வாமனனைப் போற்றுவோம். திருமலையை ஏற்று வோம். உத்தம வாமனனின் திருவடிக்குப் பல்லாண்டு பாடுவோம்.

**வாழ்க்கை நெறிகள் தொடரும்...**

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 37

| 1 | | | | | | | | | | | 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 3 | ■ | | | 4 | ■ |
| | ■ | ■ | | | | | | | 5 | ■ | ■ |
| | 6 | ■ | | 7 | | | | | 8 | ■ | |
| | | | | | 9 | | | | | | |
| | | | | | | | 10 | ■ | | | |
| | | | | | | 11 | | ■ | | | |
| | | | 12 | | | ■ | | | 13 | | |
| ■ | | | | | | 14 | | | ■ | | |
| 15 | | 16 | | | | | 17 | 18 | 19 | | |
| 20 | | | | | | | | ■ | ■ | | |
| 21 | | | | | | | | | ■ | 22 | 23 |

**தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.**
**விடைக்கு 52 ம் பக்கம் பார்க்கவும்.**

### இடமிருந்து வலம்

1. "என்னைப் பெற்ற தாயார்" என்னும் திருநாமம் கொண்டு தாயார் சேவை சாதிக்கும் தலம்....(7)
9. கோபியருடன் கிருஷ்ணன் ஆடியது....(6)
15. திருமழிசையாழ்வார் முக்தியடைந்த ஊர்...(6)
17. கோமாதா என்பது பொதுவாக..... (2) வைக் குறிக்கும்.
20. உடல், உள்ளத்திற்கு வலிமை தருபவள்...(7)
21. சோழனின் படைத்தளபதியாக இருந்த ஆழ்வார்...(9)

### வலமிருந்து இடம்

2. கல்கருட வாகனத்திற்கு பிரசித்தி பெற்ற ஊர்...(6)
3. தை மாதம் அமாவாசையில் இருந்து ஏழாம் நாள் வளர்பிறையில் வரும் சப்தமியின் பெயர்.....(6)
4. குபேரனிடமிருந்து ஸ்ரீநிவாசர் பெற்ற நிதியை கோவிந்தராஜ ஸ்வாமி இந்த மரக்காலால் அளந்தார்.... (3)
5. மகாலட்சுமியின் வேறு பெயர்களில் ஒன்று....(7)
8. திருமலை பெருமாளுக்கு ஜ்யேஷ்டா பிஷேகத்தின் இரண்டாம் நாள் அணி விக்கப்படும் அங்கியின் பெயர்....(5)
14. உலகளந்த பெருமாளின் திருவடியை சத்திய லோகத்தில் பூஜித்தவர்...(4)
19. சிவனருளால் அர்ஜுனனுக்கு கிடைத்த அஸ்திரம்...(5)

### மேலிருந்து கீழ்

1. நம்மாழ்வார் கடைசியாக மங்களா சாசனம் செய்த திவ்ய தேசம்....(8)
6. விஷ்ணு வழிபாட்டுக்குரிய ஆகம முறைகளில் ஒன்று....(7)
7. விஷ்ணுவின் பத்து அவதாரத்திற்கும் மொத்த பெயர்....(6)
9. சூரிய குலத்தில் விஷ்ணு எடுத்த அவதாரம்....(6)
10. கண்ணனின் வளர்ப்புத் தந்தையின் பெயர்...(6)

### கீழிருந்து மேல்

11. நந்த நந்த அஷ்டகம் பாடியவர்.....(7)
12. மகாபலியின் மனைவியின் பெயர்...(6)
13. பெருமாளின் பெண் அவதாரம்....(3)
16. பெருமாளின் திருநாமங்களில் ஒன்று.....(6)
18. தை மாதம் தேய்பிறையில் வரும் ஏகாதசி....(3)
22. ராமாநுஜர் ஸ்தாபித்தது....(8)
23. பெருமாளின் கீழை வீடு...(9)

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

–பிரதான ஆசிரியர்

அவதாரப் பெருமை

# ஸ்ரீபலராமர்

திருமதி. பிரேமா வரதன், புதுடில்லி.



*''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்து''*, தமையனான ராமனை கண்ணின் மணியாகப் பாதுகாக்கிறான் லக்ஷ்மணன்.

*''சென்றால் குடையாம் இருந்தால் சிங்காஸனமாம் நின்றால் மரவடியாம்... பூம்பட்டாம் புல்குமணையாம்''* என்றபடி ஒரு கைங்கர்யம் பாக்கியில்லாமல செய்த தன் அருமைத் தம்பியைக் கண்டு மனம் நெகிழ்ந்த ராமபிரான் தன் அடுத்த அவதாரமான கிருஷ்ணாவதாரத்தில் தான் தம்பியாகத் தோன்றி லக்ஷ்மணனைத் தமையனாக்கி, ஸ்தான மரியாதை அளித்துத் தன் நன்றியைத் தெரிவிக்கிறான் எம்பெருமான். அந்த லக்ஷ்மணனே பலராமன் ஆவார்.

## ஆதிசேஷனான பலராமர் :

எம்பெருமான் சகல குண சம்பந்தனானபடியால் அவனுக்கு ''அனந்தன்'' என்ற பெயர் உள்ளதாக உபநிஷத் போற்றுகிறது. அது போல, "அனந்தன்" என்ற திருநாமம் அதாவது அளவிட முடியாத குணங்களை உடையவன் என்றும், ஆதிசேஷனுக்கும் அந்நாமம் பொருந்தும் என்றும் விஷ்ணு புராணத்தில் சொல்லப் பட்டுள்ளது. இந்த ஆதிசேஷன் பூமியைத் தாங்குகிறார் என்பதால் "பூதர பன்னகர்" என்ற திருநாமமும் இவருக்கு உண்டு.

முதலில் ஆதிசேஷனாகவும், இரண்டாவதாக லக்ஷ்மணனாகவும், மூன்றாவதாக பலராமராகவும், கடைசியாகக் கலியுகத்தில் ராமாநுஜராகவும் இவரே அவதரித்தார் என்பர் பூர்வர். பகவான் கீதையில் அனைத்தும் நானே என்று, சகல விதமான மரம், செடி, கொடி, சித்தர், முனிவர், மேலும் பலபலவற்றுள் தான் யாராக இருக்கிறேன் என்று சொல்லி, நாகங்களில் ஆதிசேஷனாக இருப்பதாகப் பெருமைப்படுகிறான்.

திருப்பாவை 17 ல் *''அம்பரமே தண்ணீரே''* என்று கோபிமார்கள் கண்ணபிரானைத் துயிலெழுப்பியும், கண்ணபிரான் எழுந்திருக்கவில்லை. திருத்தமையனாரான பலராமரை எழுப்பியே தன்னை எழுப்ப வேண்டும் என்பது கண்ணபிரானின் திருஉள்ளமாம். அதன்படி மூத்தபிரானை (பலராமரை) எழுப்புகின்றனர் கோபியர்கள்.

பலதேவனைச் (பலராமன்) செம்பொற்கழலடி செல்வா! என்று விசேஷித்து எழுதுவது மிகவழகியது. *''மக்களறுவரைக் கல்லிடை மோத இழந்தவள் தன் வயிற்றில் சிக்கென வந்து பிறந்து நின்றாய்''* (பெரியாழ்வார் திருமொழி 5–3–1) என்றபடி தேவகியின் வயிற்றில் பிறந்த குழந்தைகள் அறுவர் கம்சனால் மோதி முடிக்கப்பட்ட பின் அவதரித்த கண்ணபிரானுக்கு அங்ஙனம் ஒரு விபத்தும் விளையாதபடி பலராமன் முன்னே தோன்றினவனன்றோ. கண்ணபிரானுக்கு ஒரு தீங்குமில்லாமைக்குக் காரணம் பலராமனுடைய பொற்கால் நலமே என்று கருதிய கோபிகள் *''செம்பொற் கழலடி செல்வா!''* என்றழைக்க ப்ராப்தமேயன்றோ! உலகில் ஒரு வீட்டுக்கு நாட்டுப் பெண் ஒருத்தி வந்தால் அவள் வந்தது முதலாகக் குடும்பத்தில் நன்மைகள் மிகுந்தால் மாமியார், மாமனார்கள் அவளுடைய கால் நலத்தைக் கொண்டாடிக் கூறுவதும், நன்மைக்கு எதிராகத் தீமைகள் விளைந்தால் "இவள் என்றைக்கு இந்த வீட்டில் தனது கரிக்காலை வைத்தாளோ அன்று முதல் சனி பிடித்தது'' என்று நிந்தித்துக் கூறுவதுமுண்டே. இங்குச் சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வத்திற்கெல்லாம் மூல கந்தம் பலராமனுடைய கால் நலமே என்று கருதியது மிகப் பொருத்தம். இங்ஙனம் பலதேவனையுணர்த்தி *''உம்பியும் நீயும் உறங்கேல்''* என்கிறார்கள் கோபிகைகள்.

இப்பாட்டில், நந்தகோபர், யசோதை, கண்ணபிரான், பலராமன் என்ற வியாஜத்தினால் முறையே ஆசார்யன், திருமந்திரம், திருமந்த்ரார்த்தம், திருமந்த்ரார்த்த ஸாரம் முறையே தெரிவிக்கப்படுகின்றன. எங்ஙனேயென்னில்; நந்த கோபாலன் அம்பரமும் தண்ணீரும் சோறும் அறஞ் செய்வதாகச் சொல்லியுள்ளது. இம்மூன்றையும் ஆசார் யனே அறஞ்செய்யக் காண்கிறோம். அம்பரமென்பது ஆகாசம்; பரமாகாச சப்த வாச்யமான நலமந்தமில்லாதோர் நாடான ஸ்ரீவைகுண்டத்தை ப்ராபிக்கச் செய்வதே அம்பர மறம் செய்கை. தண்ணீரென்பது விரஜையாறு. விரஜா நதி ஸ்நாநத்தைச் செய்விப்பவனென்கை. அடுத்து கடைசியாக திருமந்த்ரார்த்த ஸாரம். (சோறு) ஆதிசேஷன், ஆயுர் வேதம், யோக சாஸ்திரம், சப்த சாஸ்திரமான மஹா பாஷ் யம் போன்ற ஐந்து விதமான சாஸ்திரங்களை இவர் இயற்றியுள்ளதாக ப்ரமாணங்கள் தெரிவிக்கின்றன. இதை ஒவ்வொரு அவதாரத்திலும் செய்ததாகத் தெரிகிறது. இப் படி இவ்வவதாரத்தில் திருமந்த்ரார்த்த ஸாரத்தை அருளு கிறான் பலராமன் என்னும் ஆசார்யன்.

முகுந்த மாலையில் *"ஹே கோபாலக! ஹே ராமாநுஜ"* – பலராமனின் தம்பியே! என்று அழைப்பதில் குலசேகர ஆழ்வாருக்குத் தான் என்ன சந்தோஷம்! கண்ணனுக்கு அதற்கு மேல் சந்தோஷமாம். பல விஷமங்கள் செய்து மாட்டிக் கொள்ளும்போது நான் பலராமனின் தம்பி, நான் அப்படிச் செய்வேனா என்று சொல்லி யாவர் மனதையும் இளக வைத்துத் தப்பித்துக் கொள்வானாம் கண்ணன்.

பெரியாழ்வார் திரு மொழி (1–7–5) *"முன்ன லோர் வெள்ளிப் பெரு மலைக் குட்டன் மொடு மொடு விரைந்தோட பின்னைத் தொடர்ந் ததோர் கருமலைக் குட்டன் பெயர்ந்தடி இடுவது போல்"* என்று முதலில் வெண்மை நிறங்கொண்ட பலராமன் மொடு மொடு விரைந் தோட, அதைத் தொடர்ந்து ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்த கண்ணபிரான் பெயர்ந்தடி இடுவதை, ஆதிசேஷ மலையையும் கோவர்த்தன மலையையும் அவ்விருவரில் காண் கிறார் பெரியாழ்வார். நீல ஆடை அணிந்து , கையில் கலப்பையை ஆயுதமாகக் கொண்டவர் பலராமர். இவரது பத்தினி பெயர் ரேவதி.



**க்ஷோடசாயுத ஸ்தோத்ரம் (13) :**

சுதர்ஸனரின் 16 திருக்கைகளில் வைத்திருக்கும் ஆயுதங்களில் கலப்பையும் ஒன்று. யாதொரு கலப் பையினாலே பக்தியுழவனான பகவானுடைய சகல க்ஷேத்ரங்களையும் பயிரிடும் விஹாரம் விளங்குகின் றதோ, அந்த கலப்பையினால் உங்களுக்கு சேனைத் தலையில் வெற்றி உண்டாகக் கடவது.

**ஆசார்ய ஹ்ருதயம் :**

*"உழுவதோர் நாஞ்சில் கொண்டு பெருக முயலும் பக்தியுழவன் க்ருஷி பலமிறே"* என்று அந்தச் சூர்ணை தலைக்கட்டுகிறது. க்ருஷிக்குக் கலப்பை இன்றியமை யாதது. எம்பெருமான் செய்தருளும் யோக க்ஷேமக் ருஷிக்கும் அது வேண்டியிரா நின்றது போலும் (க்ருஷி – உழவன்). இவரது திருநாமங்கள் சங்கர்ஷ ணன், பலராமன், ஹலாயுதன் என்பவையாம். இவர் மிகவும் விரும்பும் லாஹிரி வஸ்துக்களை ருசித்துக் கொண்டு மதமதாந்தராக வ்ரஜ பூமியில் வந்து கொண்டிருந்த போது, காளிந்தி நதி (யமுனை) ஓடிக் கொண்டிருந்த போது என் அருகே வா! என்று யமுனையைக் கூப்பிட, அதற்கு யமுனை, என்னால் மாறி மாறி ஓட முடியாது. நீரே இங்கு வர வேண்டும் என்று மறுக்க, கோபித்த பலராமர் கலப்பையை வீசி, யமுனையையே அக்கலப்பையினால் தன் பக்கம் இழுத்து விட்டார். மதுராவி லிருந்து தில்லி போகிற வழியில் ராம்காட் என்ற இடத்தில் யமுனை கொஞ்சம் உள் நோக்கி வளைந்து பிறகு நேரே போவதைக் காணலாம். இதுவே பலபத்ரனாலே நதி இழுக்கப் பட்ட சரித்திரம். இப்படி எம்பெருமானான உழவ னுக்குக் கலப்பையாக இருந்து, இப்பூமியைத் தாங்கும் ஆதிசேஷனான பலராமனைத் துதித்துப் போற்றிப் பணிவோமாக!

இராமாயணத்தில்...

# கம்பர் போற்றும் திருமலை



–திரு. ஆர்.வி. கமலக்கண்ணன், காஞ்சிபுரம்.

*''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலை''* என்று குலசேகராழ்வார் போற்றுகிறார். அத்திருமால் உறையும் இத்திருமலை பற்றிக் கம்ப நாட்டாழ்வார் கிஷ்கிந்தா காண்டம் – நாடவிட்ட படலம் – பாடல் 26 முதல் 29 முடிய 4 பாடல்களில் போற்றிப் புகழ்ந்தார். இப்பாடல் கருத்துகள் ஏற்கனவே ஸப்தகிரியில் வந்துள்ளன.

இனி இக்காண்டம் ஆறு செல் படலம் செய்யுள் 33 முதல் 37 வரை வானரவீரர் பிராட்டியைத் தேடிச் செல்லும் வழியில் திருமலையை அடைந்து பணிந்தது பற்றிப் பாடியுள்ள கருத்துகளை இங்குக் காண்போம்.

வானர வீரர் அருந்ததி மலை, மரகத மலைகளில் பிராட்டியைத் தேடி, பின் தமிழ் நாட்டின் வட எல்லை யாகிய திருமலையைச் சென்று சேர்ந்தனர் (33). *''வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்''* – என்பது தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம். அங்கு கோனேரி தீர்த்தம், ஆகாச கங்கை, பாபவிநாசம், பாண் டவ தீர்த்தம், தும்புரு தீர்த்தம், குமாரதாரை தீர்த்தம், ஆழ்வார் தீர்த்தம், கபில தீர்த்தம் – எனப் பல புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன.

அந்தணரும், முற்பிறவியில் மனப்பூர்வமாகச் செய்த தீவினைகளால் உண்டாகின்ற நரக நெறியை மாற்ற வல்ல இத்தீர்த்தங்களில் தத்துவ ஞானிகளும், தேவர்களும், தெய்வ மகளிரும், சித்தரும் வந்து எப் போதும் நீராடுகின்றனர்.

*''முனைவரும் மறைவலோரும், முந்தை நாள் சிந்தை மூண்ட*
*வினைவரும் நெறியை மாற்றும் மெய்யுணர்வோரும், விண்ணோர்*
*எனைவரும் அமரர் மாதர் யாவரும் சித்தரென்போர்*
*அனைவரும் அருவி நன்னீர் நாளும் வந்தாடுகின்றார்''*

–கிஷ்.கா.ஆறுசெல் படலம் – 34

"காட்டுத் தீயின்முன் பஞ்சு எரிந்தழிவது போல, ஞான யோகத்தின் முன் தீவினைகள் நீங்கும்'' – என நூல்கள் கூறுவதால், அவ்வாறு ஞானயோக முதிர்ச்சி உடையவரை, "முந்தை நாட் சிந்தை மூண்ட வினைவரு நெறியை மாற்றும் மெய்யுணர்வோர்" என்றார்.

*''பொங்குநீர்ச் செங்கயல்திளைக்கும் சுனைத் திருவேங்கடம்''*
*''தீர்த்த நீர்த் தடஞ்சோலை சூழ் திருவேங்கடம்''*

–பெரிய திருமொழி 1:8:1,4.

என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள் ளமை இங்கு ஒப்பு நோக்கத்தகும். அத்திருமலை மீது தேவர்கள், தம் ஐந்து இந்திரி யங்களையும், பெரிய காமத்தையும், பிறர் தம்மைத் திட்டிய கொடிய சொற் களையும், இளமகளிரின் பார்வையாகிய அம்புகளை யும், வென்று நல்ல தவங்கள் பல வற்றைச் செய்கின் றனர் (கிஷ்.கா.ஆறு செல்படலம்–35).





# எந்தன் திருமலை வேங்கடவா!

பாவலர் வ. பழனி,
புதுச்சேரி.

தங்கக் கோபுர தரிசனத்தை
கண்டு மகிழ்ந்து நின்றிருந்தோம்!
தங்க குடிலும் பக்தர்களுக்கு
தரமாய் மலையில் அளிக்கின்றாய்!

பொங்கும் அருளை நாளெல்லாம்
பொன்னடி கண்டே பெறுகின்றோம்!
எங்களை எல்லாம் காக்கின்ற
எந்தன் திருமலை வேங்கடவா!

குருவருள் உன்னால் கிடைத்திடுதே
குவலயம் காக்கும் கோவிந்தா!
கருட தரிசனம் கண்டு வந்தோம்
கற்பக மலையே வேங்கடவா!

திருமலையில் நின்றே இருக்கின்றோம்
திரும்பிச் செல்ல மனமில்லை!
நெருப்பாய் என்னுடல் வெந்தாலும்
நின்னருள் மறவா வரமருள்வாய்!

சங்கு சக்கரம் உன்கையில்
சங்கடம் தீர்த்திட வந்திடுவாய்!
தங்கக் கிரீடம் ஒளிர்கிறதே
தரணி முழுவதும் உனதன்றோ!

பொங்கும் கடலில் பரந்தாமா
புன்னகை புரிந்தே படுத்திருப்பாய்!
தொங்கும் ஊஞ்சலில் உன்னாட்டம்
உலகின் ஆட்சியை உரைத்திடுமே!

---

*"தெள்ளியார் வணங்கும் மலைத்திருவேங்கடம்"*

–பெரிய திருமொழி 1:8:2

*"திலதம் உலகுக்காய் நின்ற திருவேங்கடத்து
எம்பெருமான்!"*

–திருவாய்மொழி 6:10:1.

*"நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும்
திருவேங்கடத்தான்"*

–திருவாய்மொழி 6:10:10

*"இருவினையும் கெடுத்து ஒன்றியாக்கை புகாமை
உய்யக் கொள்வான்"*

–திருவாய்மொழி 9:3:8

என்னும் அருளிச் செயல்கள் இங்கு அனுசந்திக்கத் தக்கன.

*"வலங்கொள் நேமி மழை நிறவானவன்
அலங்குதாளிணை தாங்கிய அம்மலை
விலங்கும் வீடுறுகின்றன மெய்ந் நெறிப்
புலன் கொள்வார்கட்கு அனையது பொய்க்குமோ?"*

–கிஷ்.கா. ஆறுசெல்படலம்–36.

"ஸ்ரீநிவாஸன் தன்னிடத்து எழுந்தருளியிருக்கும் சிறப்புடைய அத்திருமலையில் வாழும் விலங்குகளும் வீடு பேறடையும் எனின் சன் மார்க்கத்தில் நடக்கும் தத்துவ ஞானமுடையோர்க்கு அவ்வீட்டுலகம் கிடைப்பது தவறுமோ?'

ஸ்ரீநிவாஸன் *"மலை குனிய நின்ற பெருமாள்"* என்று ஒரு திருநாமத்தைப் பெறுமாறு தமது தாள் இணைகளை அம்மலையில் பதிய வைத்திருப்பதால் *"மழை நிற வான வன் அலங்கு தாளிணை தாங்கிய அம்மலை"* என்றார்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஒரு நாள் நன்கொடை திட்டம்

*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. எனவே,* **"ஒரு நாள் நன்கொடை திட்டம்"** *கொண்டுவரப்பட்டுள்ளது.*

*அது எங்ஙனே எனில் ஒரு நாளைக்கு ஆகும் செலவு :*

| | | | |
|---|---|---|---|
| 1) | காலை சிற்றுண்டி | - | 7 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - | 11.5 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - | 11.5 இலட்சம் |
| | மொத்தம் | - | 30 இலட்சம் |

0877-2264258
0877-2264375
0877-2264237

- திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இந்தத்தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகின்றது. நன்கொடையாளர் / தனிப்பட்ட நபர் /நிறுவனங்கள்/ நிறுமங்கள் / அறக்கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.
- இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.30 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.7 இலட்சமோ/ மதிய உணவிற்கு ரூ.11.5 இலட்சமோ/ இரவு உணவிற்கு ரூ.11.5 இலட்சமோ அளிக்கலாம்.
- தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும்.
- திருமலை அன்னதான கட்டிடத் தொகுதியில் நன்கொடையாளர் பெயர் காட்சியாக்கப்படும்.
- ஒருநாள் மட்டும் ஒரு முறை திருமலை அன்னதான கட்டிடத்தொகுதியில் உணவு பரிமாற நன்கொடையாளர்கள் அனுமதிக்கப்படுவர்.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் :**

"சிறப்பு அலுவலர், ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம் நிர்வாகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி"

www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களைக் காணலாம்.

"புகுமதத்தால் வாய் பூசிக் கீழ் தாழ்ந்து அருவி
உகுமதத்தால் கால் கழுவிக்கையால் - மிகுமதத்தேன்
விண்டமலர் கொண்டு விறல் வேங்கடவனையே
கண்டு வணங்கும் களிறு"

என்னும் மூன்றாம் திருவந்தாதிப்பாசுரம் (70) இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

"ஆயகுன்றினை எய்தி அருந்தவம்
மேய செல்வரை மேயினர் மெய்ந்நெறி
நாயகன் தனை நாளும் வணங்கிய
தூய நன்மலர் பாதங்கள் சூடினார்"

–கிஷ்.கா. ஆறுசெல்படலம்–37.

கீழ் நாடவிட்ட படலத்தில் சுக்ரீவன் வானரரிடம், "திருமலையை நீங்கள் அடைந்தால் வீடு பேறடைந் திடுவீர்; எனவே விலகிச் செல்லுங்கள்" (செய்யுள் 29) என்று கூறியிருப்பினும், அக்கட்டளையை மீறித் திருமலையில் சென்று அங்குள்ள பெரியோரை வானரர் தரிசித்தனர். இதற்குக் காரணம் – இப்புண்ணியப் பயனாலேனும் ஒருகால் பிராட்டியைக் காண முடியுமோ? என்ற எண்ணத்தால் செய்தது என்று நாம் கொள்ளலாம்.

பின் அவ்வானரர் அங்கிருந்த நற்றவர் பாதங்களைச் சூடிய பின்பு, தொண்டை நாட்டை அடைந்தனர்.

திருமலையப்பன் திருவடிகளை சரணம்.



# திவ்ய திருத்தலம் திருமலை

தெலுங்கு மூலம் : திரு. ஜெ. பாலசுப்பிரமண்யம்
தமிழாக்கம் : திரு. வி. வெங்கடரமணா

**திருமலை ஆலயம் :**

*"சத்யம் சத்யம் புனஸ்சத்யம் ந தேவோ வேங்கடேஸ்வராத்*
*பிரம்மாண்டே நாஸ்தி யத்கிம்சித் ந பூதம் ந பவிஷ்யதி"*

–ஸ்ரீவேங்கடாசலமஹாத்மியம் (பவிஷ்யோத்தர புராணம்)

உண்மையாக சொல்லும் சொற்கள்! ஒரு முறை அல்ல. இரு முறை அல்ல. மீண்டும் மீண்டும் கூறுகின்ற உண்மையான சொற்கள்!

அவை என்னவென்றால், திருவேங்கடமுடையானை போன்று இவ்வுலகத்தில் எதிலும் இல்லை. இப்பொழுது மட்டுமல்ல, எக்காலத்திலும் இல்லை. இனி வரப்போகும் காலத்திலும் இல்லை. இது உண்மை.

ஆதலால் தான் திருவேங்கடமுடையானை கலியுக கண்கண்ட தெய்வமாகப் புகழ்கின்றனர்.

*"க்ருதேது நரசிம்ஹோஉபூத் த்ரேதாயாம் ரகுநந்தன:*
*த்வாபரே வாசுதேவஸ்ச கலௌ வேங்கட நாயக:"*

க்ருத யுகத்தில் நரசிம்மர், த்ரேதா யுகத்தில் ராமர், துவாபர யுகத்தில் கிருஷ்ணர், கலியுகத்தில் திருவேங்கடவன் – இந்த நான்கு அவதாரங்கள், நான்கு யுகங்களில் புகழ் பெற்று விளங்கின.

இவைகளில் முதன்மையாகக் கூறப்படும் மூன்று அவதாரங்கள் மஹாவிஷ்ணுவின் தசாவதாரத்தில் கூறப்பட்டவையே. ஆனால் மேற்கூறப்பட்டவைகளில் சிறப்பு என்னவெனில் கலியுகத்தில் திருவேங்கடமுடையான் அவதார மூர்த்தியாக இருப்பதுதான்.

ஒவ்வொரு யுகங்களிலும் தோன்றிய அரக்கர்களை அழிப்பதற்காகவே எம்பெருமான் அவதரித்தார் என்று சொல்கின்றனர். ஆனால் ஸ்ரீநிவாசருடைய அவதாரம் அவ்வாறு அல்ல. வைகுண்டத்தில் இருந்து மகாவிஷ்ணு இறங்கி வந்த திவ்ய மங்கள அர்ச்சாவதார மூர்த்தியே திருவேங்கடமுடையான்.

**திருவேங்கடமுடையான் அவதாரம் :**

மஹாவிஷ்ணு வைகுண்டத்தில் இருந்து திருவேங்கடமுடையானாக இப்பூமியில் அவதரிக்க இந்த கலியுகத்தில் உள்ள மக்களின் இலட்சணங்களே முக்கிய காரணமாகும்.

மற்றைய யுகங்களில் இருந்த மக்களை விட கலி யுகத்தில் உள்ள மக்கள் குறைந்த ஆயுளையும், சக்தி அற்றவர்களாகவும் உள்ளனர். மேலும் கர்வம், பொறாமை, வெறுப்பு, அகங்காரம், பேராசை போன்ற தீயகுணங்களோடு இக்கலியுகத்தில் வாழ்கின்றனர். இவ்வளவு தீய குணங்களைக் கொண்ட மக்கள் மற்றைய யுகங்களைப் போன்று நேராக வைகுண்டத்தை அடைய முடியாமல் அவதிப்படுகின்றனர்.









ஆகையால் எம்பெருமான் கலியுகத்தில் உள்ள பக்தர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் வைகுண்டத்தை விடுத்து திருவேங்கடமுடையானாக பூலோகத்தில் அவதரித்தார். எனவே இவரை *''கலௌ வேங்கட நாயக:''* என்று அழைத்தனர். தீய குணங்களை உடைய மக்களை நல்வழிப்படுத்தி, அவர்களை பாதுகாத்து, அவர்களின் கோரிக்கைகளை தீர்ப்பவராக எம்பெருமான் இக்கலியுகத்தில் எம்பெருமான் திருவேங்கடமுடையா னாகத் தோன்றி அருள் புரிகின்றார்.

**பூலோக வைகுண்டம் திருமலை :**

மஹாவிஷ்ணு வைகுண்டத்தில் இருந்து மலைகள், செடிகொடிகள், ஆறுகள், ஓடைகளுடனும், உபய தேவியருடனும், கருடனுடனும் இப்பூலோகத்திற்கு வந்து, இங்கு திருவேங்கடமுடையானாக தரிசனமளிக்கின்றார். ஆதலால்தான் பக்தர்கள் இத்திருமலையை "பூலோக வைகுண்டம்" என்று புகழ்ந்து வழிபடுகின்றனர்.

**அதிலோக சுந்தரன் ஆனந்த நிலையன் :**

*''ஸ்ரீவேங்கடேசமதி சுந்தர மோகனாங்கம்*
*ஸ்ரீபூமிகாந்த மரவிந்த தளாயதாக்ஷம்*
*ப்ராணப்ரியம் ப்ரவிலசத்கருணாம்புராசிம்*
*பிரம்ஹேச வந்த்ய மம்ருதம் வரதம் பஜாமி''*

ஆனந்த நிலையன் அனைவரையும் மெய் மறக்கச் செய்யும் அதிலோக சுந்தர னாவார். கமலம் போன்ற நயனங்களை(கண்கள்) உடையவர். அந்த தேவாதி தேவன் ஸ்ரீதேவி பூதேவியர்களுடன் கண் கொள்ளாக் காட்சியாக இருப்பார். பிரம்மா சிவனால் புகழப்படுபவராகவும், கருணைக்கடலாகவும், மோட்சத்தை அளிப்பவராகவும், உயிரி னும் மேலானவராகவும் திருவேங்கட முடையான் நமக்கு காட்சியளிக்கின்றார்.

"நான் வைகுண்டத்தை விடுத்து வேண்டுமானாலும் இருப்பேன். ஆனால் என் பக்தர்களை விடுத்து ஒரு நொடி கூட இருக்க மாட்டேன்" என்று வைகுண்டத்தை விடுத்து, பூலோகத்தில், வேங்கடாசலத்தில் அற்புத சாளக்ராம சிலைவடிவில், வக்ஷஸ்தலத்தில் ஸ்ரீமஹா லக்ஷ்மியுடன் சுயம்புவாகத் தோன்றினார். அந்த வக்ஷஸ்தல லக்ஷ்மியினால் தான் ஸ்வாமி "ஸ்ரீநிவாசன்" என்று அழைக்கப்படுகிறார்.

**விசித்திரமான வடிவம் :**

தலையில் கிரீடமுடனும், பூணுலும், இடுப்பில் நந்தக கட்கமும், மேல் இரு திருக் கரங்களில் வலப்புறம் சக்கரத்தையும், இடப்புறம் சங்கையும் தரித்து, கீழுள்ள வலதுகை வரதமுத்திரையுடனும், இடதுகை இடுப்பில் வைத்துக் கொண்டு கடிஹஸ்தத்துடனும் காட்சித் தருகிறார்.

நான் வீற்றிருக்கும் இந்த இடம் வைகுண்ட மாகும். என் திருவடி பணிந்து வணங்கினாலே போதும், அவர்கள் *''சம்சார சாகர சமுத்திரனைக சேதோ''* என்பதற்கிணங்க சம்சாரம் எனும் கடலை எளிதாகக் கடந்து இன்புறலாம். நீங்கள் கேட்கும் வரங்கள் அனைத்தையும் அருள்வேன் என்னும் வகையில் ஸ்வாமி வரத ஹஸ்தத்துடன் அழகாகக் காட்சித் தருகிறார்.

**பஞ்சபேரங்கள் :**

"ஆனந்த நிலைய கர்ப்பாலயத்தில் சாளக்ராம சிலை வடிவில் உள்ள மூலமூர்த்தி யுடன் ஸ்ரீநிவாச ஸ்வாமிக்கு நான்கு விதமான உத்சவ மூர்த்திகள் உள்ளன. இவற்றுடன் மூலமூர்த்தியும் சேர்ந்து ஐந்து ஆகும். இவற்றை பஞ்சபேரங்கள் என்பர்.

**முதல் பேரம் - மூலமூர்த்தி :**

எட்டு அடி உயரமுள்ள மூலமூர்த்தியான சாளக்ராம சிலையை "த்ருவபேரம்" என்பர். இவரை தரிசிப்பதற்காக பக்தர்கள் யாத்திரையாக வருகின்றனர். இந்த மூலமூர்த்திக்கு நாள்தோறும் துயிலெழுப்பும் வகையில் சுப்ரபாதம், அதன்பின் தோமாலை சேவை எனும் புஷ்பலங்கார சேவை, காலை சஹஸ்ர நாமார்ச்சனை, மதியம் மற்றும் மாலை அஷ்டோத்தர சத நாமாவளி, மூன்று வேளை நைவேத்தியமும் நடைபெறும். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைதோறும் அஷ்ட தள பாத பத்மாராதனை, வியாழன் தோறும் திருப்பாவாடை சேவை, நேத்திர தரிசனம், இரவு பூலங்கி சேவை, வெள்ளி தோறும் காலை சுகந்த பரிமள திரவியங்களால் அபிஷேகமும் நடைபெறும். ஸ்வாமிக்கு அர்ச்சனை, நிவேதனம் நடைபெற்ற பிறகு வக்ஷஸ்தலத்தில் உள்ள வ்யூஹ லக்ஷ்மிக்கும் நிகழ்த்துவர்.



**இரண்டாவது பேரம் - போகஸ்ரீநிவாச மூர்த்தி :**

"போக ஸ்ரீநிவாச மூர்த்தி" மூல மூர்த்தியின் பிரதிவடிவமான வெள்ளியால் ஆன இவரை "மணவாளப் பெருமாள்" என்றும் கூறுவர். சுமார் ஒன்றரை அடி உயரம் கொண்ட இந்த வெள்ளி மூர்த்திக்கு நாள்தோறும் காலை ஆகாச கங்கையில் இருந்து தீர்த்தம் கொண்டு வருவர். கொண்டு வந்த அந்த தீர்த்தத்தால் தீர்த்தாபிஷேகம் செய்வர். இரவு "பவளிம்பு சேவை" எனும் "ஏகாந்த சேவையும்" நடைபெறும். ஒவ்வொரு புதன்கிழமை அன்றும் தங்க வாயிலின் அருகே இவரை எழுந்தருளச் செய்து சகஸ்ர கலசாபிஷேகம் நிகழ்துவர்.



**மூன்றாவது பேரம் - கொலுவு ஸ்ரீநிவாச மூர்த்தி :**

"கொலுவு ஸ்ரீநிவாச மூர்த்தி" மூலமூர்த்தியின் பிரதிவடிவமாக பஞ்ச லோகத்தால் தயாரிக்கப்பட்டது. ஒன்றரை அடி உயரம் கொண்ட இம்மூர்த்திக்கு நாள்தோறும் தங்க வாயிலின் உள்ளே தங்க சிம்மாசனத்தில் கொலுவு, தர்பார் ஆகியவை நடைபெறும். பஞ்சாங்கம் வாசித்தல் முடிந்த பின் வரவு செலவு கணக்குகளை கேட்கக்கூடியவர் இந்த கொலுவு ஸ்ரீநிவாச மூர்த்தி.



**நான்காவது பேரம் - உக்ரஸ்ரீநிவாச மூர்த்தி :**

ஸ்ரீதேவி பூதேவியர்களுடன் இருக்கும் இந்த "உக்ர ஸ்ரீநிவாச மூர்த்தி"க்கு பூர்வ காலத்தில் உத்ஸவங்கள் நடைபெற்றன. இப்பொழுது நடைபெறுவது இல்லை. ஆண்டுதோறும், கார்த்திகை மாதத்தில் வரக்கூடிய கைசிக த்வாதசி அன்று மட்டுமே, ஸ்ரீதேவி பூதேவியர்களுடன் உக்ர ஸ்ரீநிவாச மூர்த்தி சூரியோதயத்திற்கு முன்னதாகவே திருவீதி உத்ஸவத்தை முடித்துக் கொண்டு ஆலயத்திற்குள் செல்வார்.

**ஐந்தாவது பேரம் - திருமலையப்ப ஸ்வாமி :**

"உத்ஸவ ஸ்ரீநிவாச மூர்த்தி"யான இவரை திருமலையப்ப ஸ்வாமி என்பர். ஸ்ரீதேவி பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமி ஆலயத்தின் வெளியே நடைபெறும் உத்ஸவங்களில் பங்கேற்று பக்தர்களுக்கு தரிசனமளிப்பார்.



இவை மட்டுமின்றி ஆனந்த நிலைய கர்ப்பாலயத்தில் இருக்கக்கூடிய சங்கர்ஷன சக்கரத்தாழ்வார், ஆதிசேஷன், ஸ்ரீசீதா ராம லக்ஷ்மணர், ஸ்ரீருக்மணிகிருஷ்ணர், சுக்ரீவஹனுமான், கருடாழ்வார், விஷ்வக்சேனர் போன்றோரின் உற்சவமூர்த்தி களையும் அவ்வப்போது திருவீதி உலாக்களில் தரிசிக்கலாம். இம்மூர்த்திகளில் சிலரை தற்போது தீர்த்தம் கொடுக்கும் இடத்தில் உள்ள அறையில் தரிசிக்கலாம்.

திருமலை யாத்திரை தொடரும்...



# ஸ்ரீவராஹஸ்வாமி ஆலயம், திருமலை

தெலுங்கு மூலம் : திரு. உ. முத்துகிருஷ்ணய்யா
தமிழாக்கம் : திருமதி. பி. காயத்ரி

வைகுண்டத்தை விடுத்து பூலோகத்திற்கு வந்த ஸ்ரீநிவாசர், திருமலை காட்டிலுள்ள புற்றினுள் தன்னை மறைத்துக் கொண்டார். ஒரு நாள் அவர் புற்றிலிருந்து வெளியே வந்து, உலாவிக் கொண்டிருந்தார். அப்போது வராஹ ஸ்வாமி தம் குழுவோடு அங்கு வருவதைக் கண்ட ஸ்ரீநிவாசர் உடனே புற்றினுள் ஓடி ஒளிந்தார்.

ஸ்ரீவராஹ ஸ்வாமியும் ஸ்ரீமந்நாராயணனின் அவதாரமாவார். அவர் இரு அவதாரங்களில் வேங்கடாசலத்தில் இருக்கின்றார். வராஹ ஸ்வாமி கடலில் அரக்கர்களிடமிருந்த பூமி தேவியை காப்பாற்றிய பிறகு இம்மலையில் குடி கொண்டார். எனவே தான் இம்மலை "வராஹசலம்" (வராஹ ஸ்வாமியின் மலை) என்றழைக்கப்படுகிறது. இம்மலையில் தன் குழுவோடு தினை சாகுபடி செய்து வந்த வராஹ ஸ்வாமி தங்களது அறுவடையை கவர்ந்து செல்ல வந்த அரக்கர்களைக் கொன்று, தனது குழுவோடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஸ்ரீநிவாசரைக் கண்ட வராஹ ஸ்வாமி அவரை புற்றினுள் இருந்து வரச் சொல்ல, ஸ்ரீநிவாசரும் வெளியே வந்து, அவ்விருவரும் உரையாடும் திவ்ய நிகழ்வு ஏற்பட்டது. இரு திவ்ய அவதாரங்கள் ஒரே இடத்தில் வந்து கலந்துரையாடுவது அரிதல்லவா! அப்பொழுது ஸ்ரீநிவாசர் வராஹ ஸ்வாமியிடம் தான் தங்குவதற்கு 100 அடி நிலத்தை கேட்க, வராஹ ஸ்வாமியோ அதை இலவசமாகக் கொடுக்க மறுத்து பதிலுக்கு ஏதேனும் தர வேண்டும் என்ற நிபந்தனையை வைத்தார்.

அதற்கு ஸ்ரீநிவாசரும் தற்பொழுது தன்னிடம் கொடுக்க ஏதும் இல்லை என்றும், ஆனால் எதிர்காலத்தில் திருமலைக்கு தன்னை தரிசிக்க வரும் எண்ணற்ற பக்தர்கள், வராஹ ஸ்வாமியின் தரிசனத்திற்கு பிறகே தன்னை தரிசிப்பார்கள் என்றும், வராஹ ஸ்வாமிக்கு அபிஷேகம் மற்றும் நைவேத்தியம் படைத்த பிறகே தனக்கு படைக்கப்படும் என்றும் வாக்கு அளித்தார். அதற்கு சம்மதித்த வராஹ ஸ்வாமி, ஸ்ரீநிவாசர் தங்க 100 அடி நிலத்தை அவருக்கு அளித்தார். இரு அவதாரங்களுக்கு இடையில் நடைபெற்ற உரையாடலின் உட்கருத்து, ஸ்ரீநிவாசரும் வராஹ ஸ்வாமியும் ஒருவரேயாவர், அதாவது ஸ்ரீமந்நாராயணனின் இரு அவதாரங்கள் என்பதை நமக்கு உணர்த்தவே இது ஆகும்.

பொதுவாக நாம், "இது என்னுடைய நிலம், நான் உழைத்து சம்பாதித்த பணத்தால் வாங்கியது, அல்லது இது என் பூர்வீகச் சொத்து அல்லது இது நான் எனக்காக கட்டிய வீடு" என்ற மாயையில் அறியாமையால் சொல்லித் திரிகின்றோம். ஆனால் உண்மையில் இப்பூமி முழுவதும் வராஹ ஸ்வாமியினுடையதாகும். ஏனென்றால் அவரே இப்பூமியை கடலுக்குள்ளிருந்த அரக்கனிடமிருந்து காப்பாற்றி ஜீவராசிகள் வாழ வழி வகுத்தார்.

நாம் வாழும் இப்பூமி நமக்கு வராஹ ஸ்வாமியால் அளிக்கப்பட்டது என்ற உண்மையை அறிந்து வாழ்ந்தாலே போதும். ஸ்ரீநிவாசரும் வராஹ ஸ்வாமிக்கு எத்தொகையும் கொடுக்கவில்லை. மாறாக தனக்கு முன்பு வராஹ ஸ்வாமிக்கே முதல்



தரிசனம், அபிஷேகம் மற்றும் நைவேத்தியம் படைக்கப்படும் என்று வாக்களித்தார். அதேபோலத்தான் நாமும், நமக்கு கிடைத்த அனைத்தும் பகவானின் அருளால் தான் என்பதை உணர்ந்து வாழ வேண்டும். நாம் வராஹ ஸ்வாமியின் நாமத்தை துதித்து முதலில் களிமண்ணால் குளிக்க வேண்டும் என்றும், எந்த உணவுப் பொருளையும் பகவானுக்குப் படைத்த பிறகே, அப்பிரசாதத்தை நாம் உட்கொள்ள வேண்டும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதுவே ஸ்ரீநிவாசர் வராஹ ஸ்வாமிக்கு தந்த வாக்கின் உட்பொருளாகும். நைவேத்தியம் படைக்கும்போது, பகவான் அதனை உட்கொண்டு, அதனை திவ்யமாக்குகிறார். மாயையால் நம்மால் அதனை காண முடியவில்லை. இதுவே நைவேத்தியத்தின் உட்கருத்துமாகும். காலப்போக்கில் திருவேங்கடமுடையானின் புகழ் அனைத்திடங்களிலும் பரவியது. ஆனாலும் இன்றும், ஸ்வாமியின் வாக்கிற்கேற்ப திருமலையில் நடக்கும் அனைத்து பூஜை மற்றும் நிவேதனம் முதலில் பூவராஹருக்கே சமர்ப்பிக்கப்படுகிறது. வராஹ ஸ்வாமியின் தரிசனத்திற்குப் பிறகே பக்தர்கள் தன்னை வந்து தரிசிப்பது திருவேங்கடமுடையானுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும் என்று கருதப்படுகிறது.

பண்டைய கல்வெட்டுகளில் வராஹ ஸ்வாமியை குறித்து இல்லையென்றாலும் கி.பி.1380 ஆம் ஆண்டில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் வராஹ ஸ்வாமியை "வராஹ நாயனார்" என்றும், 1476 ஆம் ஆண்டில் கிடைத்த கல்வெட்டில் "ஞானப்பிரான்" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. வராஹ ஸ்வாமிக்கு தினமும் மூன்று வேளைகளில் வைகானச ஆகமப்படி அர்ச்சனை, நிவேதனங்கள் செய்யப்படுகின்றன. முதலில் வராஹ ஸ்வாமிக்கே நைவேத்தியமும் படைக்கப்படுகிறது. வெள்ளிக்கிழமை தோறும் அதிகாலையில் அபிஷேகமும் நடத்தப்படுகின்றது.

### வராஹ ஸ்வாமி கோயிலின் கட்டிடக்கலை அமைப்பு :

வராஹ ஸ்வாமியின் கோயில் கிழக்கு நோக்கி, ஸ்வாமி புஷ்கரணியின் வடமேற்கு திசையில் அமைந்துள்ளது. கோயில் முக மண்டபம், அர்த்த மண்டபம், அந்தராலயம் மற்றும் கர்ப்பாலயம் என நான்கு பகுதிகளாகக் கட்டப்பட்டுள்ளது. கட்டிடக் கலை மற்றும் அழகிய சிற்பங்களையுடைய நான்கு பெரிய தூண்களால் இக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. பிரம்மோத்ஸவத்தின் இறுதி நாள் திருவோண நட்சத்திர நாளன்று, ஸ்ரீதேவி, பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமி சக்கரத்தாழ்வாரோடு சக்ரஸ்நானத்தை முன்னிட்டு இங்குள்ள முகமண்டபத்தில் எழுந்தருளுவர். இம்முக மண்டபத்திலிருந்து வராஹ ஸ்வாமி ஆலயத்திற்கு பிரதக்ஷிண வழியுமுண்டு.


முகமண்டபத்தைக் கடந்தால் அர்த்த மண்டபத்தை அடைகிறோம். கர்ப்பகிரகத்தைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள இம்மண்டபம், வராஹ ஸ்வாமியின் கர்ப்பாலயத்திற்கு பிரதக்ஷிணை வழியாகவும் அமைகிறது. அர்த்த மண்டபத்திற்குப் பிறகு, அந்தராலயம். அந்தரால துவாரத்தின் இருபுறமும் சங்கு, சக்கரம், கதை ஏந்திய ஜய, விஜயர்களின் சிற்பங்கள் உள்ளன. அதையும் தாண்டி 5–6 அடி நீளமுள்ள சதுர வடிவ அந்தராலயமும் அதனுள் கர்ப்பகிரகமும் கட்டப்பட்டுள்ளது. அதனுள் இரண்டடி உயரமுள்ள வராஹ ஸ்வாமி சங்கு, சக்கரத்தை மேலிரு கைகளில் ஏந்தி, இடது தொடையில் பூதேவியை அமர வைத்தவாறு காட்சியளிக்கிறார். மூல மூர்த்தியை விட ஒரு அடி உயரமுள்ள பஞ்ச லோக பூவராஹ மூர்த்தி மற்றும் திருவேங்கடமுடையானின் பஞ்சலோக விக்ரகங்களையும் மற்றும் சில சாளக்ராமங்களையும் காணலாம். 2019, ஏப்ரல் 23 முதல் 27ஆம் தேதி வரை இக்கோயிலில் மஹாஸம்ப்ரோக்ஷண உத்ஸவம் மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. இங்ஙனம் திருமலையில் முதலில் வராஹ ஸ்வாமி எழுந்தருளியதால் திருமலை "ஆதி வராஹ க்ஷேத்திரம்" என்றும் அழைக்கப்படுகிறது. எனவே பக்தர்கள் அனைவரும் முதலில் வராஹ ஸ்வாமியினை தரிசித்து விட்டு, பிறகு திருவேங்கடமுடையானையும் தரிசித்து இருவரின் அருளையும் பெற்று முக்தி பெறுவார்களாக.



# புண்ணியம் அருளும்

திரு. டி.ஆர். பரிமளரெங்கன், திருச்சி.

"கன்னியா மாதம்" என்று சொல்லப்படும் புரட்டாசி மாதம் மகா விஷ்ணுவிற்கு உகந்த மாதம். "இம்மாதத்தில் விரதம் கடைப்பிடித்து மகாவிஷ்ணுவின் அம்சமான வேங்கடவனை வழிபடுவதால் பாவங்கள் அழியும், புண்ணியம் சேரும்" என்று ஞான நூல்கள் கூறுகின்றன. "மாதம் முழுவதும் விரதம் மேற்கொள்ள முடியாத சூழ்நிலையில் உள்ளவர்கள் சனிக்கிழமை அவசியம் விரதம் மேற்கொள்ள வேண்டும்" என்று சாஸ்திரம் கூறுகிறது.



சனியின் தாக்கம் உற்றவர்களும், எடுத்த காரியங்களில் தடங்கள் ஏற்படும் நிலையில் உள்ளவர்களும் சனிக்கிழமை விரதம் மேற்கொண்டு, கூர்ம அவதாரமான பெருமாளை தரிசித்தால் சனியின் தாக்கம் குறைந்து மனதிற்கு மகிழ்ச்சி ஏற்படும். ஏனெனில் சனிக்கு அதிபர் உலகைக்காக்கும் தெய்வமான மகாவிஷ்ணு. தமிழ் மாதங்களில் சித்திரையும், புரட்டாசியும் எமனின் கோரைப் பற்கள் வெளியே தெரியும் மாதங்கள். இம்மாதங்களில் சூரியனின் உஷ்ணம் கடுமையாக இருப்பதால் உடல் நலம் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. அதனால், பெருமாளை வழிபடுவதின் மூலம் எமனின் கோரைப் பற்களின் பயங்கரம் நம்மைத் தாக்காது என்று வேத நூல்கள் கூறுகின்றன.

சனிக்கிழமை விரதம் மேற்கொள்வதால் சனி பகவானின் தாக்கமும் குறையும். கன்யா மாதத்தில் தான் சனி பகவான் ஜனனமானதாகப் புராணம் கூறுகிறது. எனவே, புரட்டாசி சனிக்கிழமைகளில் விரதமிருப்பது, பெருமாளின் அருள் கிட்டுவதுடன் சனியின் பார்வையும் பெருமாளின் அருளால் பலவீனமடையும். அன்று முழுவதும் உபாவசம் இருப்பது சிறப்பாகச் சொல்லப்படுகிறது.



புரட்டாசி சனிக்கிழமைகளில் விரதம் இருப்பவர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி, நெற்றியில் திருமண் (திருநாமம்) இட்டுக்கொண்டு, வீட்டில் விநாயகரையும் பெருமாளையும் வழிபட்டபின், கருட தரிசனமும், ஸ்ரீஆஞ்சநேயர் தரிசனமும் செய்தால் நல்ல பலன்கள் கிடைக்கும். பிறகு பெருமாள் கோயிலுக்குச் சென்று தாயார் சந்நிதியில் தாயாரை தரிசித்த பின், பெருமாளை தரிசிக்க வேண்டும் என்பது மரபு.

கிரக தோஷமுள்ளவர்கள் புரட்டாசி சனிக்கிழமைகளில் ஸ்ரீஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வழிபட்டால் கருணை மிகுந்த ராம பக்தன் ஆஞ்சநேயர், சனியின் பிடியிலிருந்து காப்பாற்றுவர். மேலும், புரட்டாசி சனிக்கிழமை திருவேங்கடேசப் பெருமாளுக்கு மிகவும் உகந்த நாள். அன்று விரதம் மேற்கொண்டு, வீட்டில் பூஜை அறையில் திருவேங்கடேச பெருமாள்





# புரட்டாசி மாதம்



திருஉருவப் படத்திற்கு துளசி மாலை அணிவித்து, மாவிளக்கு ஏற்றி, பூஜை செய்வது சிறப்பானது. அன்று அன்னதானம் செய்வதும், ஏழைகளுக்கு ஆடைகள் அளிப்பதும் சிறப்பானது என்று சாஸ்திரம் சொல்வதால், புரட்டாசி சனிக்கிழமைகளில் விரதம் கடைப்பிடித்து பெருமாளை வழிபட்டு வளமான வாழ்வினைப் பெறலாம்.

புரட்டாசி மாதத்தில் சனிக்கிழமை விரதம் தவிர, அனந்த விரதம், ஏகாதசி விரதம் உள்பட ஏராளமான விரதங்கள் உள்ளன. அதுபோல அம்பாளுக்கு உகந்த நவராத்திரி ஒன்பது நாட்கள் வழிபாடுகளும் புரட்டாசியில் தான் கொண்டாடப் படுகிறது. அதோடு லலிதா சஷ்டி விரதம், உமாமகேஸ்வரி விரதம் ஆகியவையும் அம்பாளுக்கு உகந்த புண்ணிய நாட்களாகும்.



மேலும், முன்னோர்களுக்கான வழிபாட்டிற்கு உகந்த மகாளய பட்சமும் புரட்டாசி மாதம்தான் வருகிறது. மகாளய பட்ச நாட்களில் முன்னோர்களுக்குரிய தர்ப் பணத்தை புனித நீர் நிலையில், வேத விற்பன்னர் மேற்பார்வையில் அவர் கூறும் மந்திரங்களைச் சொல்லி, வழிபட்டால் பித்ருக்களின் ஆசியை முழுமையாகப் பெறலாம் என்று வேதநூல்கள் கூறுகின்றன.

புரட்டாசி அமாவாசையைத் தொடர்ந்து, நவராத்திரி விழா ஆரம்பமாகும். சிவவிஷ்ணு ஆலயங்களில் நவராத்திரி விழா பத்து நாட்கள் விமரிசையாக நடைபெறும். தங்கள் இல்லத் திலும் கொலு வைத்து நவராத்திரி விழாவை கொண்டாடுபவர்களும் உள்ளார்கள்.

கலியுகத்தில் நல்லவர்களைக் காக்க வைகுண்டவாசியான மகாவிஷ்ணு, ஸ்ரீவேங்கடாஜல பதியாக, புரட்டாசி சனிக்கிழமை திருவோணம் நட்சத்திர நன்னாளில் அவதரித்தார் என்று புராணம் கூறுவதால் ஏழுமலையில் எழுந்தருளியிருக்கும் திருவேங்கடவனுக்கு அந்த நாளில் சக்கர ஸ்நானம் நடைபெறும் வகையில் பிரம்மோத்ஸவமம் நடைபெறுகிறது.



திருமலையில் துவஜாரோஹணத்துடன் துவங்கும் இந்த பிரம்மோத்ஸவத்தில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில், திருமலையப்ப ஸ்வாமி ஒரு சில வாகனத்தில் தனித்தும், ஒரு சில வாகனங்களில் உபயதேவிமார்களுடன் திரு மாடவீதிகளில் எழுந்தருளி நமக்கு முக்தி அளிக்கும் வகையில் காட்சியளிப்பது சிறப்பான ஒன்றாகும். நாமும் இப்பிரம்மோத்ஸவத்தில் பங்கு கொண்டு திரு வேங்கடமுடையானின் வாகன சேவையை சேவித்து, திருவேங்கட முடையானை சரண டைந்து, வாழ்வில் அனைத்து வளங்களையும் பெற்று புண்ணியராவோம்.





# வெற்றி தரும் விநாயகர்

திருமதி. கே. சுப்புலெட்சுமி, பரமக்குடி.

மக்கள் நல்வாழ்வு வாழவே மானிடப்பிறவி. மண்ணில் பிறந்து, வாழ்ந்து, மண்ணில் மறையும் இவ்வுடல் என்பது கண்ணால் காணும் உண்மை. வாழும் காலத்தில் வாழ்முறை அறிந்து, பல்லுயிரும் பயன்பட பணியாற்றி, பஞ்ச பூத தத்துவ நிலையறிந்து, பஞ்ச பூத சக்தியாக விளங்கும் கணநாதனை கணமும் மறவாது தியானிப்பவர்கட்கு வினைகள் வாராது. நன்மைகள் நாடி வரும்.

களி மண்ணில் நீர் கலந்து விநாயகர் உருவமைத்து, பூஜைகள் செய்து, நீரில் கரைப்பது, உடல் நிலை உருவ நிலைமாறி நீரால் அமிழ்ந்து கரையும் என்பதை நினைவூட்டுவதேயாகும். நாம் வாழுங் காலத்தே கல்வி, ஞானம் பிறருக்கு வழிகாட்டும் பேரருளாளனாக வாழ்ந்து நிலைத்த புகழ் பெற வேண்டும். இதுவே பிறர் வணங்கத்தக்க வாழ்வு பெற வேண்டும் என்ற குறிப்பாகும்- ''ஓம்'' என்ற பிரணவ வடிவமே விநாயகரின் திருஉருவமாகும். இதை அனுபவ ரீதியாக சுவாமி விவேகானந்தர் உணர்த்தியுள்ளார்.

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் "ஹாங்காங்" நாட்டில் "காண்டான்" என்ற இடத்தில் உள்ள புத்தர் கோவிலுக்குள் செல்ல முயன்றார். இவருடன் வந்த மொழி பெயர்ப்பாளர் இவரைத் தடுத்து "அன்னியர்கள் உள்ளே செல்லவிடாது அங்குள்ளவர்கள் அடிப்பார்கள். ஆகவே உள்ளே செல்வது ஆபத்தானது" என எச்சரிக்கை செய்தார். இவரது சொற்களைப் பொருட்படுத்தாமல் இறைவனது துணையுண்டு எனக் கூறி உள்ளே புக முயன்றார். ஆனால் சிலர் உருட்டுக் கட்டைகளோடு சுவாமியைத் தாக்க வந்தனர். தனது மொழிபெயர்ப்பாளரிடம் "புத்தர் பிறந்த மண்ணாகிய இந்தியாவிலிருந்து வரும் யோகி" எனக் கூறுமாறு சொன்னார். மொழிபெயர்ப்பாளரும் அவ்வாறே கூறினார்.

மந்திரசக்திக்குக் கட்டுப்பட்டவர்கள் போல கட்டைகளை ஏந்தியவர்கள் கட்டைகளை கீழே போட்டு, கட்டைகள் போன்று நின்றனர். சுவாமி விவேகானந்தருக்கும் கோவிலுக்குள்ளே செல்லத் தடையின்றி அமைந் தது. திரும்பியபோது அங்கிருந்தவர்கள் உயிர் பெற்று எழுந்தது போன்ற நிலையடைந்து மொழி பெயர்பாளரிடம் ஏதோ கூறினார்கள். அவர்கள் கூறியதை சுவாமிஜியிடம், "தங்கள் பாதுகாப்பிற்காக, ஆற்றல் அமைவதற்காக, பேய் பிசாசுக்களை அண்ட விடாது ஓட்ட தாயத்து" கேட்பதாக மொழிப்பெயர்ப்பாளரும் கூறினார். சுவாமிஜி தனது பையிலிருந்து காகிதம் ஒன்றை எடுத்து சிறுசிறு துண்டுகளாக்கி அவற்றில் "ஓம்" எனும் பிரணவத்தை எழுதித் தந்தார். ''ஓம்'' என்பது ''விநாயக'' வடிவம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

"ஓம்" என்பது தீங்குகளை நீக்கும் மந்திரம். எதிர்த்தவர்களே பாதுகாப்புடன் உள்ளே அழைத்துச் சென்று மீண்டும், வெளியில் கொணர்ந்து அனுப்பிய செயல் வரலாறு ஆகும். அவர்கள் மூலமாக சீனாவிற்கும், வங்க தேசத்திற்கும் அமைந்த உறவுகள், சமஸ்கிருத ஏடுகள், ஓவியங்கள் மற்றும் புத்தமதம் அங்கே பரவிய வரலாறு போன்ற முக்கியமானவற்றை அறிந்து வந்தார். "ஓம்" வடிவ விநாயகர் அன்று சுவாமிஜிக்கு வழிகாட்டியாக விளங்கியது வரலாற்று நிகழ்வு.

மஞ்சளைப் பிடித்து வைத்தால் அங்கே விநாயகர் அமர்ந்து அருள்புரிவார். எக்காரியம் துவங்கும்



போதும் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து பூஜை செய்தே பிற செயல்கள் செய்வது வெற்றிக்கு முதற்படி. விநாயகர் நாளும் துணையிருக்கும் எளிவந்த பிரான். அவரை வணங்கி வாழ்வில் நலம் பெறுவோம்.

உழுது பயிரிட்ட மாந்தர்கள் அறுவடை செய்த தானியக் குவியலின் மீது பசுஞ்சாணத்தில் விநாயகர் பிடித்து அருகம் புல்லை அதன் உச்சியில் சொறுகி சந்தனம், குங்குமம் இட்டு, வழிபட்டு, தானியத்துடன் எடுத்து தனியே சுத்தமான இடத்தில் வைத்தபின்னே குவித்த தானியங்களை அளந்து கோணிகளில் நிரப்புவார்கள். விநாயகர் வழிபாட்டில் "பிடித்து வைத்தால் பிள்ளையார்" என்பது முதுமொழி. களிமண், மஞ்சள், பசுஞ்சாணம், வெல்லம் போன்றவற்றைக் கொண்டு வழிபடல் ஏற்புடையதாகக் கொண்டவர். எளிமையாக வழிபட பக்தி ஒன்றே போது மென அருள்பாலிக்கும் ஓங்கார நாயகராவார். வெற்றியே தருபவராவார்.



# புத்தக மதிப்புரை

புத்தகத்தின் பெயர் : ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசாரியர்கள் வைபவ மஞ்சரி

தொகுப்பாளரின் பெயர் : அஷ்டகோத்ரம் திருமலை நல்லான் லக்ஷ்மி நரஸிம்மன், "குமுத ஸிம்ஹம்", அன்மோல் பழனி ப்ளாட், 1,4 வது குறுக்கு தெரு, ஹிந்து காலனி, நங்கநல்லூர், சென்னை–61.

*9840529008.*

விலை : இலவசம்

**ஆன்மீக எழுத்தாளரான ஆசிரியர் நூலாசிரியரைப் பற்றித் தெரிவித்துக் கொண்டு முன்னுரையில் குருபரம்பரையைக் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீஸ்ரீபேரருளாள ராமாநுஜ ஸ்வாமி, திருக் குறுங்குடி, ஸ்ரீ உ.வே. ஸ்ரீமத் பரமஹம்ஸ இளைய கோயில் கேள்வியப்பன் ஸ்ரீஸ்ரீ கோவிந்த ராமாநுஜ சின்ன ஜீயர் ஸ்வாமி, திருமலை, திருப்பதி ஆகிய இரு ஜீயர் ஸ்வாமிகளின் மங்களா ஸாஸனத்துடன் இப்புத்தகம் வெளிவந்துள்ளது. ஸ்ரீநம்மாழ்வார் வைபவம் துவங்கிக் கடைக்குட்டி ஆசாரியரான ஸ்ரீமணவாள மாமுனிகள் ஈறாக ஆசாரியர்கள் வைபவத்தை மிக நேர்த் தியாக அமைத்துள்ள பாங்கு மிகவும் பாராட்டுக்குரியது.**

**ஆசிரியர் குருபரம்பராப்ரபாவ நூலையும், பெரிய திருமுடி அடைவு என்னும் நூலையும் தழுவி இப்புத்தகத்தை உருவாக்கி யுள்ளார் என்பது அவருடைய எழுத்து வண்மையால் புலப்படு கிறது. மிகவும் அரும்பாடுபட்டு இப்புத்தகம் வெளிவந்துள்ளது.**

**ஸ்ரீமந் நாதமுனிகளின் வைபவத்தில் கும்பஸம்பவர் என்பவருக்கு இவர் வித்யா ப்யாஸம் செய்வித்தும், அஷ்டமாஸித்தியும், அஷ்டாங்க யோகமும் கற்பித்து கும்பஸம் பவரை நிபுணராக்கிய செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். தனக்கும் (ஸ்ரீமந்நாதமுனிகள்) திருவேங் கடவனுக்கும் நடந்த நிகழ்ச்சிகளையும் தெரி வித்து, அதாவது திராவிட வேதங்களை மீட்டுத் தந்தமையும் எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.**

**"கானமுறத் தானத்திற் கண்டிசைத்தான்" என்கிறபடி நாலாயிர திவ்யப்ரபந்தமனைத் துக்கும் தனது மருமக்களான கீழையகத்தாழ் வான், மேலையகத்தாழ்வான், திருக்கண் மங்கை யாண்டான் ஆகியவர்களை அழைத்துக் கொண்டு இயலுமிசையுமாக்கி, திவ்ய கானமாக மெரு கேற்றி அவர்களுக்குச் சொல்லிப் பாட வைத்த சங்கதி மிகவும் போற்றத் தக்கது.**

**இவ்வாறு ஒவ்வொரு ஆசாரியர்களின் வைபவங் களை மிகத் தெளிவாகக் காட்டியுள் ளார் ஆசிரியர். இந்தப் புத்தகம் ஒவ்வொருவர் இல்லங்களிலும் அலங்கரிக்கப் படவேண்டிய ஒன்று.**

**டாக்டர். கே.கே.ஏ. ரங்கராஜன் ஸ்வாமி,**
**திருப்பதி.**

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# திருமலையில் ஆர்ஜித சேவைகள்

| வ. எண். | சேவைகளின் பெயர் | அனுமதிக்கப் படும் நபர்களின் எண்ணிக்கை | ஆஜராக வேண்டிய நேரம் | சேவை நேரம் | சேவையின் தொகை |
|---|---|---|---|---|---|
| | **தினசரி சேவைகள்** | | | | |
| 1. | சுப்ரபாதம் | ஒருவர் | காலை 2-00 | காலை 3-00 | ரூ. 120/- |
| 2. | தோமாலை சேவை (செவ்வாய், புதன், வியாழன்) | ஒருவர் | காலை 3-00 | காலை 3-30 | ரூ. 220/- |
| 3. | அர்ச்சனை (செவ்வாய், புதன், வியாழன்) | ஒருவர் | காலை 4-00 | காலை 4-30 | ரூ. 220/- |
| | **தினசரி உற்சவங்கள்** | | | | |
| 4. | கல்யாணோத்ஸவம் | இருவர் | காலை 10-00 | நன்பகல் 12-00 | ரூ.1,000/- |
| 6. | டோலோத்ஸவம் (ஊஞ்சல் சேவை) | ஒருவர் | காலை 11-00 | பிற்பகல் 1-00 | ரூ. 200/- |
| 5. | ஆர்ஜித பிரம்மோத்ஸவம் | ஒருவர் | பிற்பகல் 12-30 | பிற்பகல் 2-00 | ரூ. 200/- |
| 7. | வசந்தோத்ஸவம் | ஒருவர் | பிற்பகல் 2-30 | பிற்பகல் 3-00 | ரூ. 300/- |
| 8. | ஸஹஸ்ர தீப அலங்கார சேவை | ஒருவர் | மாலை 5-00 | மாலை 5-30 | ரூ. 200/- |
| | **வாராந்திர சேவைகள்** | | | | |
| 9. | விசேஷபூஜை (திங்கள்) | ஒருவர் | காலை 6-00 | காலை 6-30 | ரூ. 600/- |
| 10. | அஷ்டதளபாத பத்மாராதனம்(செவ்) | ஒருவர் | காலை 5-00 | காலை 5-30 | ரூ.1,250/- |
| 11. | ஸஹஸ்ரகலசாபிஷேகம் (புதன்) | ஒருவர் | காலை 5-00 | காலை 5-30 | ரூ. 850/- |
| 12. | திருப்பாவாடை சேவை (வியாழன்) | ஒருவர் | காலை 5-00 | காலை 5-30 | ரூ. 850/- |
| 13. | ஆடை அலங்கார சேவை (வெள்ளி) | இருவர் (தம்பதியர்) | காலை 3-00 | காலை 4-00 | ரூ.12,250/- |
| அ. | பூராபிஷேகம் (வெள்ளி) | ஒருவர் | காலை 3-00 | காலை 4-00 | ரூ. 750/- |
| 14. | நிஜபாத தரிசனம் (வெள்ளி) | ஒருவர் | காலை 4-30 | காலை 5-30 | ரூ. 200/- |
| | **வருடாந்திர சேவைகள்/உற்சவங்கள்** | | | | |
| 15. | தெப்போத்ஸவம் (பிப்ரவரி / மார்ச்) | ஒருவர் | மாலை 6-00 | இரவு 7-00 | ரூ. 500/- |
| 16. | வஸந்தோத்ஸவம் (மார்ச்/ஏப்ரல்) | ஒருவர் | பிற்பகல் 1-00 | பிற்பகல் 2-00 | ரூ. 300/- |
| 17. | பத்மாவதி பரிணயம் (மே) | ஒருவர் | மாலை 4-00 | மாலை 4-30 | ரூ.1,000/- |
| 18. | அபிதேயக அபிஷேகம் (ஜூன்) | ஒருவர் | காலை 8-00 | காலை 8-00 | ரூ. 400/- |
| 19. | புஷ்ப பல்லக்கு (ஜூலை) | ஒருவர் | மாலை 6-30 | இரவு 7-30 | ரூ. 200/- |
| 20. | பவித்ரோத்ஸவம் (ஆகஸ்டு) | ஒருவர் | காலை 8-00 | காலை 9-00 | ரூ.2,500/- |
| 21. | புஷ்பயாகம் (நவம்பர்) | ஒருவர் | காலை 8-00 | காலை 9-00 | ரூ. 700/- |
| 22. | கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் (வருடத்திற்கு நான்கு முறை) | ஒருவர் | காலை 10-00 | காலை 11-00 | ரூ. 300/- |

**இணைய தள பதிவு :**

மேல்காணும் சேவைகளை இணைய தளத்தின் மூலமாக பதிவு செய்து கொள்ள முடியும். மேலும் தகவல்களுக்கு தி.தி.தே. இணையதளம் www.tirumala.org/www.ttdsevaonline.com மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

**தொடர்புக்கு**

Call Center : 0877-2233333/2277777,
Toll Free No.:1800 425 4141,
1800 425 333333,
Whatsapp No.:9399399399
eMail:helpdesk@tirumala.org


திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருமலையப்ப ஸ்வாமி
வருடாந்திர
பிரம்மோத்ஸவம்
30-09-2019 முதல்
08-10-2019 வரை
30-09-2019
திங்கட்கிழமை
மாலை
துவஜாரோஹணம்
30-09-2019
திங்கட்கிழமை
இரவு
பெரியசேஷ வாகனம்
01-10-2019
செவ்வாய்க்கிழமை
பகல்
சிறியசேஷ வாகனம்



01-10-2019
செவ்வாய்க்கிழமை
இரவு
ஹம்ஸ வாகனம்



02-10-2019
புதன்கிழமை
இரவு
முத்துப்பந்தல்
வாகனம்



03-10-2019
வியாழக்கிழமை
பகல்
கல்பவிருக்ஷ
வாகனம்



02-10-2019
புதன்கிழமை
பகல்
சிம்ம வாகனம்



03-10-2019
வியாழக்கிழமை
இரவு
சர்வபூபால வாகனம்



05-10-2019
சனிக்கிழமை
பகல்
அனுமத்வாகனம்



04-10-2019
வெள்ளிக்கிழமை, பகல்
பல்லக்கில் மோகினி அவதாரம்



05-10-2019
சனிக்கிழமை,
மாலை
தங்கத்திருத்தேர்



05-10-2019
சனிக்கிழமை
இரவு
யானை வாகனம்



06-10-2019
ஞாயிற்றுக்கிழமை
பகல்
சூரியப்பிரபை வாகனம்


08-10-2019 செவ்வாய்க்கிழமை
பகல் : சக்கர ஸ்நானம்
06-10-2019
ஞாயிற்றுக்கிழமை
இரவு
சந்திரப்பிரபை வாகனம்
07-10-2019
திங்கட்கிழமை
இரவு
குதிரை வாகனம்

பச்சை தோரணம்

# ஆழ்வார்களும் ஆனந்த நிலையனும்





திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,
திருப்பதி.

"அர்ச்சாவதார ரூபேண லோகேஸ்மின் சதுராநந।
அவதாரம் கரிஷ்யாமி ஹ்ரியா லக்ஷ்ம்யா ஸமன்வித:।।
பேரைர் மந்த்ரைர் விதானேன பக்த்யா ச ஆவாஹனே க்ருதே।
பக்தானுகம்பயா தேவ: பிம்பம் வ்யாப்யைவதிஷ்டதி।।"

பிராட்டியுடன் கூடிய ஸ்ரீமந்நாராயணன் இப்பூவுலகில் அர்ச்சாரூபமாக அவதாரம் செய்வதாகவும், நன்கு வடித்த பிம்பங்களை மந்திரங்களாலும், பக்தியினாலும் ஆவாஹணம் செய்தால், அந்த பக்தவத்சலனாகப்பட்டவர் பக்திக்கு கட்டுண்டு, அவ்விக்ரகங்களில் சாந்நித்யமாகி அருள்வார் என்றும் ஆகம சாஸ்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெய்வாம்சம் பெற்ற சர்வ ஞானிகளான ஆழ்வார்கள், அருஞ்சுவை மிக்க அமுதினும் மேலான பாலைத் தருகின்ற பசுவைப் போன்று அளவற்ற அருள் சொரியும் சர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளி இருக்கும் கோவில்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களும் அனுபவித்து, அவர்கள் இயற்றிய பிரபந்தங்களின் மூலம் நமக்கும் தெரிவித்துள்ளார்கள். அந்த திவ்ய தேசங்களுள், "கலியுக வைகுந்தம்" என்று போற்றப்பெறும் திருமலைக்கு உயர்வான இடத்தை அளித்த ஆழ்வார்களால் பாடப்பட்ட ஆனந்த நிலைய வாசனான திருவேங்கடத்து எம்பெருமானைப் பற்றி இங்கு பார்ப்போம்.

இந்த கலியுகத்தில் நம்மையெல்லாம் கலியின் பிடியிலிருந்து விடுவிக்க அர்ச்சை வடிவமாய் திருமலை எனப்படும் சேஷாசலத்தில் எழுந்தருளித் தன்னை அண்டியவர்களுக்கு வேண்டிய வரம் தரும் கலியுக வரதனாக எம்பெருமான் ரக்ஷித்துக் கொண்டிருக்கிறார்.

அவர் உவந்து ஏற்ற திருமலையையும் ஆழ்வார்களால் சிறப்பித்துப் போற்றப்பட்ட திருமலையின் இயற்கை எழிலையும், அங்கு அந்தர்யாமியாக விளங்கும் திருமலையானின் பெருமைகளையும், அவரிடம் சரணடைந்தால் பக்தர்களுக்கு கிடைக்கும் ஆனந்த

அனுபவத்தையும் கீழ்க்கண்ட பாசுரங்களின் மூலம் தெரிந்து கொள்வோம்.

**திருமலையின் இயற்கை எழில் :**


முதலாழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வார் திருமலையின் அழகை இவ்வாறு வருணிக்கிறார்.

*"பெருகுமத வேழம் மாப்பிடிக்கு முன் நின்று
இருகணி இளமூங்கில் வாங்கி - அருகிருந்த
தேன் கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான் கலந்த வண்ணன் வரை."*

மதப்பெருக்கால் செருக்குடன் திரியும் ஆண் யானை ஒன்று பெண் யானையைக் காண்கின்றதாம். மதம் மறைந்து அதற்கு தெளிவு பிறக்கிறது. அந்த பெண் யானையை மகிழ்விக்க அருகிலிருந்த மூங்கில் குருத்தைப் பிடுங்கி, மழை முழைஞ்சிலுள்ள ஒரு தேனடையில் தோய்த்து அந்த பெண் யானைக்கு ஊட்டுகிறதாம். அந்த யானைகள் மேயும் திருவேங்கட மலையில் உறைகிறார் திருவேங்கடவன் என்று போற்றுகிறார்.

அடுத்து திருமழிசையாழ்வார் தனது திருச்சந்த விருத்தத்தில் வெண்ணிலாவை திருமாலவனுக்கு மணி விளக்காக்கும் நோக்கத்துடன், அந்த சந்திரனை எட்டிப் பிடிக்கும் நோக்கத்தோடு தும்பிக்கையைத் தூக்கிய வண்ணமாக நிற்கும் யானைகள் அணி வகுக்கும் திருமலை என்கிறார். இதன் மூலம் வானத்தையே எட்டிப் பிடிக்கும் உயரமுள்ளது நமது திருமலை என்று தெரிகிறது.

*"நின்றதுவும் வேய் ஓங்கு தண் சாரல் வேங்கடமே
விண்ணவர் தம் வாய் ஓங்கு தொல் புகழான்"*



பக்தர்கள் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் பல்வேறு சேவைகள், விவரங்கள் குறித்து அறிய கீழ்காணும் இலவச எண்களில் தொடர்பு கொள்ளவும்.
- 1800-425-4141 / 1800-425-111111

திருமலையிலுள்ள உயர்ந்த மூங்கிற் காடுகளையும், குளிர்ந்த மலைச் சாரல்களையும் கண்ட எம்பெருமான் விண்ணிலிருந்து மண்ணுலகிற்கு இறங்கி வரும் போது இந்த திருமலையின் இயற்கை எழிலைக் கண்டு அதில் ஈடுபட்டு இங்கேயே தங்கி விட்டதாக பூதத்தாழ்வார் பாடுகிறார்.

பொய்கையாழ்வார் வருணிக்கும் அழகு இது.

*"ஊரும் வரி அரவம் ஒண் குறவர் மால் யானை
பேர எறிந்த பெருமணியை - கார் உடைய மின்
என்று புற்றடையும் வேங்கடமே."*

ஆழ்வார்கள் காலத்தில் அரவகிரி என்று பெயர் பெற்ற திருமலையில் மலைப்பாம்புகள் ஏராளமாக இருந்தனவாம். அங்கே வாழ்ந்து வந்த மலைக் குறவர்களின் தினைப் புனங்களில் யானைகள் பட்டி மேய கூட்டம் கூட்டமாக வருமாம். அவற்றைத் துரத்த இந்த குறவர்கள் கற்களை வீசி எறிவார்களாம். அந்த கற்களில் கூழாங் கற்களோடு, மாணிக்கக்கற்களும் இருக்குமாம். அந்த மாணிக்கங்களின் ஒளியைக் கண்ட பாம்புகள் அவைகளை மின்னலாகவும், அந்த கறுத்த யானைகளை மேகங்களாகவும் கருதி, மின்னலுக்குப் பின்னே வரப்போகும் இடிக்குப் பயந்து தங்கள் புற்றுக்களில் ஓடி ஒளிந்து கொள்ளுமாம். இதற்கு வியாக்யானம் பண்ணின பெரிய வாச்சான்பிள்ளை அவர்கள் அந்த குறவர்களை *"ஒண் குறவர்கள்"* என்று ஆழ்வார் குறிப்பிட்டதன் காரணம் அவர்கள் செல்வம் மிகுந்தவர்கள். அவர்கள் மதிப்பீட்டில் கல்லும், மாணிக்கமும் ஒன்றுதான். ஏனெனில் ஆதிசேஷன் குடை பிடிக்க, அந்த ஆதிசேஷனின் சிரசில் இருக்கின்ற மாணிக்கங்கள் ஒளி வீச, நடுவில் கரிய மாணிக்கமாக விளங்கும் திருவேங்கடமுடையான் இந்த திருமலையில் நின்றிருக்க, அவருக்கு முன் இந்த மாணிக்கங்கள் கூட வெறும் கற்கள் தான் என்பது அவர் கூற்று. எம்பெருமானின் திருமேனியின் சூர்ய கோடி பிரகாசத்தின் முன், ஆதிசேஷனின் சிரசில் இருக்கின்ற மாணிக்கங்கள் கூட ஒளி குன்றிப் போனதாக சொல்லப்படுகிறது. இந்த திருமலையின் இயற்கை எழிலை ஆயிரம் நாவு கொண்ட ஆதிசேஷனாலும் வர்ணிக்க இயலாது.

### திருமலையின் மேன்மை :

*"ஸர்வ பாபாநி வேம் ப்ராஹு: கட: தத்தாஹ உச்யதே।*
*தஸ்மாத் வேங்கடசைலோயம் லோகே விக்க்யாத் கீர்த்திமாந் ॥"*

தன்னை வணங்கும் பக்தர்களின் அனைத்துப் பாபங்களையும் பொசுக்கி நன்மையை விளைவிப்பதில் இந்த வேங்கட மலை முதன்மை பெற்றதாம். இதையே *"வேம்கொடும் பாபங்கள் எல்லாம் வெந்திடச் செய்வதால் நல்மங்கலம் பொருந்தும் சீர் வேங்கடமலையானது"*

இத்தகைய பலனைக் கொடுக்கும் நமது திருமலையை ஆழ்வார்கள் வருணித்திருப்பதைப் பார்க்கலாம்.

*"திருவேங்கடமாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே"* என்று பிரபன்ன ஜன கூடஸ்தரான நம்மாழ்வார் பாசுரமிட, '

*"ஓயும் மூப்புப் பிறப்பு இறப்புப் பிணி*
*வீயுமாறு செய்வான் திருவேங்கடத்து ஆயன்"*

என்று அந்த மலை மீது தரிசனம் தரும் திருவேங்கட முடையானையும் போற்றுகிறார். அடுத்து திருமழிசை ஆழ்வார்,

*"மெய்வினை நோய் தீர்ப்பதுவும் வேங்கடமே"* என எம்பெருமான் உறைகின்ற புண்ணியமலையைப் பாடு கிறார். கொல்லிமலைக் காவலரரான குலசேகர ஆழ்வார் *"ஊனேறு செல்வத்து உடன் பிறவி யான் வேண்டேன்"*



**ஆதிசங்கரர் அருளிய**
**பஜகோவிந்தம்**

*பாலஸ்தாவத் க்ரீடாஸக்த:*
*தருண ஸ்தாவத் தருணீ ஸக்த:।*
*வ்ருத்தஸ்தாவத் சிந்தா ஸக்த:*
*பரே ப்ரஹ்மணி கோऽபி ந ஸக்த:॥*

**சிறு வயதினில் பாலகனாக இருக்கையில் "விளையாட்டில்" மட்டுமே பற்றுக்கொண்டு வாழ்கிறான். வாலிபப்பருவம் எய்தியவுடன் வாலிப வயதில் உள்ள பெண்களிடம் பற்றுக்கொண்டு வாழ்கிறான். மிகவும் வயதாகி கிழப்பருவம் ஏற்படும் சமயம், அனுபவங்களை நினைத்து பயனற்ற கவலைகளில் வாழ்கிறான். எந்தப் பருவத்திலும் இறைவனிடம் பற்றுக் கொண்டு வாழ்வதில்லை...**

**– திரு. சீதாராமன், சென்னை.**

என்று திருவேங்கடத்து எம்பெருமானைக் குறித்து பாடிய பெருமாள் திருமொழியில்,

*"செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே"* என்று விளித்து வினை தீர்க்கும் வேங்கடத்தானை மங்களா சாசனம் செய்யும் வகையில் முடிவாக அந்த *"பொன்மலை மேல் ஏதேனும் ஆவேனே"* என்று முடிக்கிறார்.

*"பழுதொன்றும் வாராத வண்ணமே*
*விண் கொடுக்கும் மண்ணளந்த சீரான்*
*திருவேங்கடம்"*

இடையூறுகள் எதுவுமில்லாமல் நம் வினைகளைத் தீர்த்து நம்மை விண்ணுக்கு அழைத்துச் செல்லும் திருவேங்கடம் என்று உறுதிப்படுத்தியுள்ளார் பொய்கை யாழ்வார்.

*"பூங்கொடிக்கள் வைகும் பொரு புனற் குன்றென்னும் வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு"*

என்று பூதத்தாழ்வாரும், *"பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்"* என்று பேயாழ்வாரும் வேங்கடத் தின் சிறப்பை, அது நமது பாபங்களை அகற்றுவதை உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

### அந்தர்யாமி :

ஸ்ரீயப்பதியான சர்வேச்வரனுடைய நிலைகள் ஐந்து. அவை பரம், வியூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை. இதில் அர்ச்சாரூபியாக திருமலையில்

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**
**2019, அக்டோபர் மாத விழாக்களும், பண்டிகைகளும்**

| | |
|---|---|
| 1 | திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை |
| 5 | திருமலையப்ப ஸ்வாமி தங்கத்திருத்தேர் |
| 7 | திருமலையப்ப ஸ்வாமி திருத்தேர் |
| 8 | திருமலையப்ப ஸ்வாமி சக்ர ஸ்நானம் |
| 11-14 | வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 12-13 | சத்ரவாடா ஸ்ரீகரிவரதராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 23-26 | ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 27 | திருமலையப்ப ஸ்வாமி தீபாவளி ஆஸ்தானம் |
| 30 | திருமலை நம்பி சாத்துமுறை |

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

## வாசகர்களுக்கு அறிவிப்பு!!

**“ஸப்தகிரி பொன்விழா மலர்” கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன**

தி.தி.தே. சமய மாத இதழான ஸப்தகிரி கலியுக கண் கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின் வைபவத்தையும், திருமலை குறித்தும் பிரதி மாதம் தவறாமல் வாசகர்களுக்கு வழங்குகிறது. ஆறு மொழிகளிலும் வெளிவருகின்ற ஆன்மீக, அறநெறி பத்திரிக்கைகளில் முன்னிலையில் உள்ளது.

ஸப்தகிரி “சிறப்பு பொன்விழா இதழை” வெளியிட கருதுகிறது. ஆதலால் வாசகர்கள் ஸப்தகிரி குறித்து தங்கள் அனுபவங்களை எழுதி எங்கள் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். அவற்றை பரிசீலித்து ஸப்தகிரியில் பிரசுரிக்கப்படும்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி : பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், தி.தி.தே. அச்சக வளாகம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி–517 507. கட்டுரைகளை தட்டச்சு செய்து tamilsapthagiri50years@gmail.com என்ற இ–மெயிலிற்கு அனுப்பவும்.

– பிரதான ஆசிரியர்

ஆண்டாண்டு காலமாக நாடியவர்களுக்கெல்லாம் வேண்டியவை அனைத்தையும் அளித்து இந்த வையகத்தை உய்வு பெறச் செய்யும் திருவேங்கடமுடையான் அந்தர்யாமியாக தங்கள் உள்ளத்தில் உறைவதையும் எடுத்துக் காட்டி உள்ளார்கள் ஆழ்வார்கள்.

*“வந்தாய் என் மனம் புகுந்தாய் மன்னி நின்றாய்!*
*நந்தாத கொழுஞ்சுடரே! எங்கள் நம்பீ!*
*சிந்தாமணியே! திருவேங்கடம் மேய*
*எந்தாய்! இனியான் உன்னை என்றும் விடேனே”*

என்று தனது பக்தியால் திருவேங்கடத்துப் பெருமானைத் தனது உள்ளத்தில் நிலை நிறுத்திக் கொண்டார் திருமங்கையாழ்வார்.

பொய்கையாழ்வாரோ, *“உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய் வெள்ளத்தில் உள்ளானும் வேங்கடத்து மேயானும் உள்ளத்தின் உள்ளானென்று ஓர்”* என்று குறிப்பிட்டு அந்த எம்பெருமான் அந்தர்யாமியாகத் தன்னுள் உறைவதைக் குறிப்பிட்டிருக்கிறார். பூதத்தாழ்வார் தனது இரண்டாம் திருவந்தாதியில்,

*“வெற்பென்றிருஞ்சோலை வேங்கடம் என்றிவ்விரண்டும்*
*நிற்பென்று நீ மதிக்கும் நீர்மை போல் நிற்பென்று*
*உளங்கோயில் உள்ளம் வைத்துள்ளினேன்*
*வெள்ளத்திளங் கோயில் கை விடேலென்று”*

திருமலையில் நித்ய வாசம் செய்யும் பெருமான் என் இதயமாகிற கோவிலையும் உகந்து வாழ்கின்ற இடமாக முடிவு செய்து விட்டான் என்று எம்பெருமான் தனது உள்ளத்தில் அந்தர்யாமியாகக் குடியிருப்பதாகக் கூறுகிறார்.

**சரணாகதி :**

*“ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம்*
*சரணம் வ்ரஜ ।*
*அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ*
*மோக்ஷயிஷ்யாமி மா சுச: ॥”*

கீதாசார்யனான ஸ்ரீகிருஷ்ணனின் வாக்குறுதி. அந்த துவாபரயுக கண்ணனே இந்த கலியுகத்தில் அர்ச்சா ரூபியாக திருவேங்கடத்து எம்பெருமானாக எழுந்தருளியுள்ளார். அன்று கண்ணன் தனது திருவாயால் கொடுத்த வாக்குறுதியை இங்கு எம்பெருமான் கண்கூடாகக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

தனது வலது திருக்கரத்தால் தனது திருப்பாதங்களைக் காட்டி, “என்னை வந்து சரணமடையுங்கள். உங்களுக்காக நானிருக்கிறேன்” என்று பக்தர்களுக்கு வலியுறுத்துகிறார். நான், எனது என்பதையெல்லாம் விட்டு விட்டு பகவானே சரணம் என்று எம்பெருமானின் திருவடிகளைப் பற்றிக் கொள்வது தான் உண்மையான பிரபத்தி, சரணாகதி. அந்த கீதை வாக்யத்தை, தத்துவத்தை மிக எளிய முறையில் நமக்கு உணர்த்துகிறார்கள் ஆழ்வார்கள்.

*“அகலகில்லேன் இறையுமென்று*
*அலர்மேல் மங்கை உறை மார்பா!*
*நிகரில் புகழாய்! உலக மூன்றுடையாய்,*
*என்னை ஆள்வானே!*
*நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்*
*பும் திருவேங்கடத்தானே*
*புகலொன்றில்லா அடியேன்*
*உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே!”*

என்று நம்மாழ்வார் பாசுரமிட,

பரகாலன் என்று பெயர் பெற்ற திருமங்கையாழ்வார் இவ்வாறு திருவேங்கடமுடையானிடம் அடைக்கலமாகிறார்.

*“தெரியேன் பாலகனாய்ப் பல தீமைகள்*
*செய்து விட்டேன்*
*பெரியேன் ஆயினபின் பிறர்க்கே*
*உழைத்து ஏழையானேன்*

*கரிசேர் பூம்பொழில் சூழ் கனமாமலை*
*வேங்கடவா!*
*அரியே! வந்தடைந்தேன் அடியேனை*
*ஆட்கொண்டருளே.''*

என்று கண்களில் கண்ணீர் பெருக வேண்டுகிறார்.

இவை அனைத்துக்கும் முத்தாய்ப்பு வைப்பது போல நமது பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளையான ஆண்டாள் பிராட்டி கூறுவதைக் கேளுங்கள்,

*''இற்றைப்பறை கொள்வான் அன்று*
*காண் கோவிந்தா!*
*எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு*
*உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்*
*மற்றை நங்காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்''*

என்று பாசுரமிட்டு எங்கள் காமங்களையெல்லாம் மாற்றி எங்களை உன்னோடு சேர்த்து கொள்வது உன் பொறுப்பு. உன்னுடைய சங்கல்பமில்லாமல் இது நடக்காது. அது நிறைவேறிய பின்னர் இந்த பிறவி மட்டுமல்ல, இதற்குப் பின் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் நாங்கள் உனக்கே கைங்கர்யம் பண்ணுவோம் என்று கோவிந்தனிடம் உறுதி கூறுகிறாள். அந்த கோவிந்தனே நமது திருவேங்கடமுடையான். இந்த திருமலையெங்கும் ஒலிப்பது கோவிந்த நாமாவளியே.

மற்ற யுகங்களில் எம்பெருமானின் திருவருளைப் பெறுவதற்கு கடுமையான தவம், யாகம் முதலான வழிகளைக் கடைபிடித்து வந்தனர். இந்த கலியுகத்தில் நமது திருவேங்கடத்து எம்பெருமானின் திருவருளைப் பெறுவது மிகவும் சுலபம். அது தான் நாமஸ்மரணை. *''கோவிந்தா! கோவிந்தா!''* என்கிற அவரது நாமாவளியைச் சொல்லிக் கொண்டு, ஏழுமலைகளையும் ஏறி, அவரது சன்னிதானமான ஆனந்த நிலையத்துக்குள் நுழைந்து, அவரது பாதாரவிந்தங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டோமேயானால் அதுவே பரிபூரண சரணாகதி.

*''ஸ்ரீவைகுண்ட விரக்தாய ஸ்வாமி புஷ்கரிணீ தடே*
*ரமயா ரமமாணாய வேங்கடேஸாய மங்களம்॥''*

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

## சர்வ தரிசனம் டோக்கன்



- நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் திருமலையப்பனை தரிசிப்பதற்கு ''சர்வதரிசனம் டோக்கன்'' முறையினை அமல்படுத்தப்பட்டுள்ளது.
- க்யூ வரிசையிலும், கம்பார்ட்மெண்ட்டிலும் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.
- சர்வ தரிசனம் டோக்கன்கள் பெறுவதன் மூலம் நிர்ணியிக்கப்பட்ட நேரத்தில் திருமலையப்பனை தரிசிக்கலாம்.
- திருமலையிலும் இந்த டோக்கன்கள் வழங்கப்படுகிறது.
- திருப்பதியில் இரயில் நிலையத்திற்கு எதிரில் உள்ள விஷ்ணு நிவாசம், இரயில் நிலையத்திற்கு பின்புறமுள்ள கோவிந்தராஜ ஸ்வாமி 2,3 சத்திரங்கள், ஸ்ரீநிவாசம், அலிபிரியில் உள்ள பூதேவி கட்டிடத் தொகுதி, ஆர்.டி.சி. பேருந்து நிலையத்தில் உள்ள கௌண்ட்டரில் பக்தர்கள் இலவசமாக சர்வ தரிசனம் டோக்கன்கள் பெற்றுக் கொள்ளலாம்.
- குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆதார் அட்டையை கொண்டு வருதல் வேண்டும். ஆதார் அட்டை இல்லாத பட்சத்தில் வாக்காளர் அடையாள அட்டை காண்பித்தல் வேண்டும்.
- டோக்கன்கள் பெற்ற பக்தர்கள் டோக்கனில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் நாராயணகிரி கார்டனை அடைந்து திவ்ய தரிசன கட்டிடத் தொகுதி வழியாக ஸ்வாமியை தரிசனம் செய்யலாம்.
- இடைப்பட்ட காலத்தில் திருப்பதி, திருச்சானூர், ஸ்ரீநிவாச மங்காபுரம், அப்பளாயகுண்ட்டா போன்ற தி.தி.தே. ஆலயங்களுடன் பிற புண்ணிய திருத்தலங்களையும் தரிசியுங்கள்.
- ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை இல்லாத பக்தர்கள் வழக்கம் போல் வைகுண்டம் கட்டிடத் தொகுதியில் காத்திருந்து ஸ்வாமியை தரிசிக்கலாம்.

– செயலாட்சித்தலைவர்.




# பார்த்தனைக் காத்த சாரதி

செல்வி. என். நித்தியா, மேல்படூர்

பாரதப் போர் முடிந்த 19ஆம் நாள் அது. அக்கால வழக்கப் படி போரில் வென்ற மகாராஜாக்களுக்கு மாலை மரியாதை செய்யும் விழா ஒன்று நடக்கும். போரில் பங்கேற்ற தேர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு தேரோட்டிகள் கீழே இறங்கி, மண்டியிட்டு நிற்பர். மன்னன் அல்லது மஹாரதர்கள் கீழே இறங்கியதும் தேர்ப்பாகன் மன்னனை வணங்கி, மாலையிட்டு வெற்றி கோஷம் முழங்குவான். அதன் பின்பு தேர்ப்பாகனுக்கு பொன்னும் பொருளும் தந்து கௌர விப்பார்கள். குருக்ஷேத்திரப் போர் வெற்றிகரமாக முடிந்த பின் வெற்றி கண்ட பாண்டவ சகோதரர்களின் தேர்கள் வரிசையாக நின் றன. மரியாதை விழாச் சடங்குகள் ஆரம்பமானது. அர்ஜுனனின் ரத சாரதியோ பகவான் ஸ்ரீகிருஷ்ணர். யாருக்கும் கிட்டாத மாபெரும் பேறு தனக்கு கிடைக்கப் போகிறது என்று எண்ணி ஒரு கணம் தன்னை மறந்த நிலையில் இறுமாப்போடு அந்த அற்புதத் தரு ணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் அர்ஜுனன். ஆனால் கண் ணன் தேரை விட்டு இறங்க வில்லை. அர்ஜுனன் திகைத்தான். பெரு மையோ, சிறுமையோ பாராது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று தனக்கு உபதேசித்தக் கண்ணன் தேர்ப்பாகனுக்குரிய கடமை கள் செய்ய ஏன் தயங்க வேண்டும் என்று தனக்குள் எண்ணினான். அப்போது பகவான் அவன் அறியாமையை எண்ணி நகைத்தார். அர்ஜுனா இந்த தேர் மட்டும் இந்த சடங்குகளுக்கு விதிவிலக்கு. முதலில் தேரினின்று நீ இறங்கு என்றார். கண்ணனின் வார்த்தையை கேட்டதும் அர்ஜுனன் ஒரு கணத்தில் தேரினின்று கீழே இறங்கினான். தன் சகோதரர்களுக்கு கிடைத்த கௌரவம் தனக்கு கிடைக்க வில்லையே என ஒரு கணம் ஏங்கினான். இதனால் மஹாரதனான தனக்கு ஏற்பட்ட அவமானத்தை எண்ணி மனம் குமுறினான் அர்ஜுனன். அர்ஜுனனின் மனோ நிலையை தன் ஞானத்தால் அறிந் தான் கண்ணன். கண்ணன் தேரை விட்டு இறங்கிய மறுவினாடியே அர்ஜுனனின் தேர் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. எல்லோரும் திகிலோடும் ஆச்சரியத்தோடும் பார்த்தனர். அர்ஜுனனுக்கும் மற்றவர்களுக்கும் ஒன்றுமே புரியவில்லை. அர்ஜுனா இந்த பாரத யுத்தத்தில் உன் எதிரிகளின் தாக்குதல்கள் உன் ரதத்தின் மீது தான் நிகழ்ந்தது. அவர்கள் எய்த அஸ்திரங்கள், ஏவிய மந்திரங்கள் தீய சக்திகள் அத்தனையும் தடுத்து நிறுத்தி யுத்தம் முடியும் வரை இந்த தேருக்கு உயிர் தந்துக் கொண்டிருந்தேன். நான் சாரதியாக அமர்ந்து கொண்டிருந்ததால்தான் இந்த தீய சக்திகள் இதுவரை செயலற்று இருந்தன. படைக்கப் பட்ட பொருள்கள் அனைத்திற்கும் ஒரு ஆரம்பமும் ஒரு முடிவும் உண்டு. இந்தத் தேரின் முடிவு ஏற்படும் தருணம் வந்ததை உணர்ந்தேன். நான் இறங்கினால் இந்த தீயசக்திகள் செயல்படத் தொடங்கிவிடும். இந்த வினாடி இந்த தேர் பலம் குன்றி இதன் மீது ஏவப்பட்ட சக்திகளால் இது தீப்பிடிக்கும் என்பதையும் அறிந்தேன். நான் முதலில் இறங்கி இருந்தால், நீ இந்த தீயில் சிக்கி இருப்பாய். இப்போது உன்னை காப்பாற் றவே இந்த தேரை விதிவிலக்காக்கி உன்னை முதலில் இறங்கச் சொன்னேன் என்று கண்ணன் கூறினார். பார்த்தசாரதி அங்கே பார்த்தனைக் காத்து சாரதியாக காட்சி தந்தார். தன் அறியாமையை எண்ணி அவமானப்பட்டு கண்ணனின் கருணைக்கு கட்டுப்பட்டு அவன் கால்களில் அர்ஜுனன் வேரற்ற மரம் போல நெடுசான் கிடையாக வீழ்ந்து வணங்கினான். பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து பகவத் கீதையை நேரிடையாகவே கேட்ட அர்ஜுன னுக்கு இத்தனை அஞ்ஞானம் இருந்ததென் றால் சாதாரண மனிதர்களிடம் கீதையை அரைகுறையாகக் கேட்டு விட்டு அல்லது கீதையின் ஒரு சில வரிகளை படித்து விட்டு நான் கீதையை புரிந்து கொண்ட பரமஞானி என்று ஒருவன் எண்ணினால் அது எத்தகைய அறியாமையாகும்.

# பூரண வரமருளும் ஸ்ரீபூவராஹ பெருமாள், ஸ்ரீமுஷ்ணம்

## தலவரலாறு :

இரண்யகசிபு பிரம்மனை நோக்கித் தவமிருந்து, "எவ ராலும், எந்த ஆயுதத்தாலும் தனக்கு மரணம் நேரக் கூடாது" என்று வரத்தைப் பெற்று, மூவுலகங்களையும் தன் வசப்படுத்திக் கொண்டான். அதைக்கண்ட இரண்யாட்சனும் அண்ணனைப் போலவே யாகங்கள் செய்து பிரம்மனிடம் வரங்களைப் பெற்றுப் பலசாலியாகி, தேவர்களைப் பிடித்து துன்புறுத்தி வந்தான்.

அவனுடைய கொடூரமான உருவத்தைப் பார்த்த தேவர்கள் அனைவரும் அவன் கண்ணில் படாமல் ஒளிந்து வாழ்ந்தார்கள். அவனோ ஆணவம் அதிகமாகி, வருண பகவானை வம்புக்கு இழுத்தான். அதற்கு வருண பகவான், "அசுரனே, விஷ்ணு பகவான் வராஹ உருவம் எடுத்து வரு வார். அவரிடம் போராடி வெற்றிப்பெறு" என்று சொன்னார்.



அதை சவாலாக ஏற்று வராஹ மூர்த்தியைத் தேடிப் பல திசைகளிலும் அலைந்து திரிந்தான். வராஹ மூர்த் தியை காணமுடியாததால் பூமியைக் கவர்ந்து சென்று கடலுக்கடியில் ஒளித்து வைத்தான். பூலோகம் நீர்ப் பிரளயத்தில் மூழ்கியதால், பிரம்மா யாகம் வளர்த்து மகாவிஷ்ணுவை வேண்ட, அந்த யாகத்திலிருந்து வெண்ணிறமாக சிறிய வராஹம் (வெண்பன்றி) ஒன்று தோன்றியது. நான்கு வேதங்கள் நான்கு பாதங்களா கவும், ஸ்மிருதிகள் புராணங்கள் செவிகளாகவும், சூரிய சந்திரர்கள் கண்களாகவும், நாகராஜன் வாலாக வும், யாகங்கள் கோரைப் பற்களாகவும், அனைத்து மந்திரங்களும் தேக அவயங்களாகவும் கொண்டு கட்டைவிரல் அளவில் தோன்றிய அவ்வராஹம் சிறிது சிறிதாக வளர்ந்து பிரம்மாண்டமான உருவம் பெற்று பிரளயத்தில் மூழ்கியிருக்கும் பூமியை வெளியே கொண்டு வர கடலில் குதித்தது.

## போருக்கான அழைப்பு :

எங்கு தேடியும் வராஹ மூர்த்தியைக் காணாத தால், இரண்யாட்சன் அசுர லோகத்தில் ஒய்வெடுத்துக் கொண்டிருந்தான். நாரதர் அவன் முன் தோன்றி, "இரண்யாட்சா, மகாவிஷ்ணு வராஹ உருக்கொண்டு நீரில் மூழ்கியிருக்கும் பூமியை மேலே தூக்கிக் கொண்டிருக்கிறார்" என்று கூறினார். உடனே அவன்

நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம்

கதாயுதத்தைக் கையில் ஏந்தியபடி விரைந்தான். வராஹ மூர்த்தி தமது கோரைப் பற்களால் பூமியை மேலே தூக்கியபோது, வராஹரை இரண்யாட்சன் தன் கதாயுதத் தால் தாக்க, வராஹர் தம் இடது காலால் அதைத் தட்டி விட்டு, தம் கையில் சக்கராயுதத்தை வரவழைத்து அவன் தலை மீது ஓங்கி அடித்தார். இரண்யாட்சன் ரத்தத்தைக் கக்கியவாறு விழுந்து மடிந்தான்.

வராஹப் பெருமான் தன் கோரைப் பற்களால் பூமியை தாங்கியவாறு மேலே வரும்போது பூமாதேவி கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டே வந்தார். பிறகு பூமியை ஓரிடத்தில் நிலை நிறுத்தினார். அப்பொழுது பூமா தேவியும் தன்னுடன் சில காலம் இங்கேயே தங்கியிருந்து அருள்பாலிக்குமாறு வேண்ட பூமியை மீட்டெடுத்த பூவராஹர் அங்கேயே தங்கி அனைவருக்கும் அருள்பாலித்தார். அப்போது அவருடன் வந்த பரிவாரங்களும் இங்கேயே தங்கின. சங்கு சங்கு தீர்த்தத்திலும், சக்கரம் சக்கர தீர்த்தத்திலும், பிரம்மா பிரம்ம தீர்த்தத்திலும், கருடன் பார்க்கவ தீர்த் தத்திலும், வாயு கோபுரத்திலும், ஆதிசேஷன் பலிபீடத் திலும், விஷ்வக்சேனர் வாயிலிலும் இடமளித்துத் தங்கச் செய்தார்.

தன்னை சேவிக்கும் பக்தர்களை எமதூதர்கள் அண்டாது பார்த்துக் கொள்ளுமாறு ஆதிசேஷனுக்கும், வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்லுமாறு பிரம்மாவுக் கும் உத்தரவிட்டார். இப்படி பூமியை மீட்ட பின்னர் பெருமாள் பூமிதேவி மற்றும் தன் பரிவாரங்களுடன் தங்கி அருள்பாலித்து வரும் திவ்ய தேசமே ஸ்ரீமுஷ்ணம் ஆகும். திருமுட்டம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. கடலிலிருந்து பூமியை தூக்கி வந்த சித்திரை மாத கிருஷ்ண பட்சம் பஞ்சமி திதியே வராஹ ஜெயந்தியாக கொண்டாடப்படுகின்றது.



**ஆலய அமைப்பு :**

ஆலயம் மேற்கு திசை நோக்கி ஏழு நிலை கோபுரத் துடன் ஒன்பது கலசங்களுடன் நேர்த்தியான சிற்ப வேலைப்பாட்டுடன் அமைந்துள்ளது. கோபுரத்தின் முன்னால் இடது புறத்தில் பட்டாபிராமருக்கு தனி ஆல யம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தினுள் சென்றவுடன் நூற்றுக்கால் மண்டபமும், வாயிலை ஒட்டி அனுமன் சன்னதியும் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் வலது புறத்தில் நம்மாழ்வார் சன்னதி, பலிபீடம், கொடிமரம் மற்றும் கருடாழ்வார் சன்னதி இடம் பெற்றுள்ளது. இதனையொட்டி கலைநயமும் அழகியல் அம்சமும் மிக்க 16 தூண்களைக் கொண்ட புருஷசூக்த மண்டபம் இடம் பெற்றுள்ளது. இம்மண்டப தூண்களைத் தட்டி னால் கருங்கல் சப்தத்திற்கு பதிலாக இசைக்கருவிகளின் சப்தம் வருவதை கேட்கும்போது அழகிய விதானத்துடன் கூடிய கற்சங்கிலிகளைப் பார்க்கும்போது பிரம்மிப்பை அளிக்கிறது.

கருவறையின் முன்பாக ஜெயவிஜயர்கள் துவாரக பாலகர்களாக அமர்ந்து அருள்பாலிக்க, கருவறையில் ஸ்ரீபூவராஹ பெருமாள் அசுரர்களை வென்றதால் ஏற்பட்ட வெற்றி பெருமித உணர்ச்சி பொங்க இருகரத்தை யும் இடுப்பில் வைத்து, முகத்தை நிமிர்த்தி, கம்பீரமாக பார்த்த கோலத்தில் மேற்கு நோக்கி இருதேவியரோடு அருள்பாலிக்கிறார். இவரது தோற்றம் மேற்கு நோக்கிய தாக இருந்தாலும் முகம் தெற்கு நோக்கி அமையப் பெற்றுள்ளது. திருமலை, காஞ்சிபுரம், திருக்கோவலூர், ஒப்பிலியப்பன் கோயில் போன்ற திவ்ய தேசங்களில் நெடுமாலாகக் காட்சி தருபவர் இவ்வாலயத்தில் சிறிய மூர்த்தியாக அருள்பாலிக்கின்றார். மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதல்லவா! இவரது திருமேனி சாளக்கிராமத் தால் ஆனது. கருவறைக்கு முந்தைய மகா மண்டபத்தில் உற்சவர் யக்ஞவராஹர் இருதேவியர்களுடன் மேற்கு நோக்கி காட்சியருள்கிறார். உடன் ஆதிவராஹ மூர்த்தி, கிருஷ்ணர் இடம் பெற்றுள்ளனர்.

ஆலயத்தின் வடக்குப் பிரகாரத்தில் ஆண்டாள், உடையவர், வேணுகோபாலன், சேனை முதலியார் சன்னதிகளும், அலங்கார மண்டபம் மற்றும் சொர்க்க வாசலான வடக்கு கோபுரமும், கிழக்கில் வேதாந்த தேசிகர், திருமங்கையாழ்வார், மணவாள மாமுனிகள், திருக்கச்சி நம்பி ஆகியோரின் சன்னதி களும், தெற்கில் மடைப்பள்ளியும், வாகன மண்டபமும், அதனைத்



தொடர்ந்து கிழக்கு நோக்கிய அம்புஜவல்லி தாயாரின் தனிச் சன்னதியும் அமைந்துள்ளது.

### இங்குள்ள பிரார்த்தனை மற்றும் வழிபாடு:

நித்ய புஷ்கரணி தீர்த்தத்தில் நீராடி, அரச மரத்தைச் சுற்றி வந்து பெருமாளையும் தாயாரையும் உள்ளமுருக வழிபட்டு ஆலயத்திலுள்ள சந்தான கிருஷ்ண மூர்த்தத்தை கைகளில் வாங்கி, மடியில் வைத்து வணங்கினால் குழந்தை பேறில்லாதவர்கள் அப்பேற்றினை பெறுவர் என்பது நம்பிக்கையாக உள்ளது. இது தவிர புதிய வாகனங்கள் வாங்குவோர் இத்தலத்துக்கு கொண்டு வந்து அர்ச்சனை செய்வதும், விபத்துக்குள்ளான வாகனங்களை பழுது நீக்கிய பின்னர் இங்கு ஓட்டி வந்து பூவராஹ பெருமாளிடம் வழிபட்ட பின்னர் ஓட்டுவதும் வழக்கமாக உள்ளது. இதற்கு வாகனம் படைத்தல் என்று கூறுகின்றனர்.

### தோஷ நிவர்த்தி பெருமாள்:

ஸ்ரீபூவராஹ பெருமான் பூரண வரமருள்பவர். இவரை வணங்குவோர் வாக்கு வன்மை, பெரிய பதவி, நிலைத்த செல்வம், மக்கட்பேறு, நோயற்ற வாழ்வு, நீண்ட ஆயுள் ஆகியவற்றை பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ்வர் என புராணங்களும் மந்திர சாஸ்திரங்களும் சொல்கின்றன. குறிப்பாக குரு, ராகு, கேது தோஷம் உள்ளவர்கள் இவரை வணங்கினால் அத்தகைய தோஷம் நிவர்த்தி ஆகும்.

### மத நல்லிணக்கம் :

இவ்வாலயத்தில் மாசி மற்றும் சித்திரை மாதங்களில் இரண்டு பிரம்மோற்சவ விழாக்கள் நடத்தப் பெறுகிறது. இதில் மாசி மாதம் நடைபெறும் பிரம்மோற்சவ விழாவை தனிப்பெருஞ்சிறப்பாகவும் மத நல்லிணக்கத்தின் அடையாளமாகவும் கூறலாம். இவ்விழாவின் போது தீர்த்தவாரி உற்சவத்திற்காக சிதம்பரத்திற்கு அருகிலுள்ள கிள்ளை என்ற கடற்கரை ஊருக்கு வராஹப் பெருமாள் செல்வது வழக்கம். அதுசமயம் அங்கு வாழும் இஸ்லாமிய சமூகத்தினர் பெருமாளை வரவேற்று தங்கள் மதத்தைச் சேர்ந்த மகான் ஒருவர் அடக்கம் செய்யப்பட்டுள்ள தர்ஹா அருகில் அழைத்துச் செல்கின்றனர். பின்னர் தர்ஹா சார்பாக அளிக்கப்படும் பட்டாடை ஸ்வாமி மீது சாத்தப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பெருமாளுக்கு சாத்தப்பட்ட மாலைகளில் ஒன்றை பட்டாச்சாரியார் எடுத்துச் சென்று மகான் அடக்கஸ்தானத்தில் சாத்துகிறார். அதனைத் தொடர்ந்து கற்பூர ஆரத்தி காட்டப் பெறுகிறது. இந்து முஸ்லீம் என்ற பாகுபாடின்றி அனைவரும் பெருமாளை சேவிக்கின்றனர். அதன் பின்னர் தர்ஹாவின் அரண்மனையில் பெருமாள் சற்று ஓய்வெடுக்கிறார். அது சமயம் இஸ்லாமிய சகோதரர்களால் வழங்கப்படும் பிரசாதத்தை இந்து மதத்தினர் மகிழ்வுடன் வாங்கி சாப்பிடுகின்றனர். மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் இந்த நிகழ்ச்சி பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் உள்ளது.

ஆலய அமைவிடம் மற்றும் நடை திறப்பு : காலை மணி 7.00 லிருந்து 12.30 வரையிலும், மாலை மணி 4.30 லிருந்து இரவு 8.30 வரை ஆலயம் திறந்திருக்கும். தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் ஸ்ரீமுஷ்ணம் வட்டத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. சென்னை, விருத்தாசலம், கடலூர், சிதம்பரம், காட்டுமன்னார் கோயில், திருச்சி, ஸ்ரீரங்கம், ஜெயங்கொண்டம் ஆகிய ஊர்களிலிருந்து இவ்வாலயத்திற்கு நேரடி பேருந்து வசதி உள்ளது. அருகாமை ரயில் நிலையம் விருத்தாசலம்.

## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

# பிருது மஹாராஜாவின் சரித்திரம்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி.

பிருது மஹாராஜா ஸ்ரீகிருஷ்ணனின் அம்சம்தான். இதில் எவ்வித ஐயப்பாடு மில்லை. இந்த விஷயத்தை பாகவதத்தில் *''கிருஷ்ணஸ்ய பவேத்பகவத:''* என்று சொல்லப்பட்டுள்ளது. பிருது மஹாராஜாவின் சரித்திரம் ஸ்ரீமத்பாகவதத்தில் நான்காம் ஸ்கந்தத்தில் வருகின்றது. பிருது மஹாராஜாவிற்கு பட்டாபிஷேகம் செய்வித்து அவர் அரசு பொறுப்பேற்றபோது நாட்டில் உணவு பஞ்சம் ஏற்பட்டிருந்தது. எனவே, ஒரு வேளை உணவும் கிடைக்காமல் மக்கள் மெலிந்து வறுமையில் வாடினார்கள். வேனுவின் ஆட்சியில் மிகவும் துன்பப்பட்டிருந்த மக்கள் எல்லோரும் இறைவனின் அம்சமாக அவதரித்திருந்த பிருதுமஹாராஜா தமக்கு கிடைத்திருப்பதை எண்ணி மகிழ்ந்து தங்கள் குறைகளை அவரிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். மக்களின் குறைகளைக் கேட்டறிந்த பிருது மஹாராஜா இந்த கொடுமையான நிலைமைக்கு யார் காரணம் என்று நீண்ட ஆலோசனையில் மூழ்கினான். பின்பு ஒரு முடிவுக்கு வந்தவனாக வில், அம்பை கையில் ஏந்தியபடி பூமாதேவியுடன் போர் தொடுக்க முற்பட்டான்.

பிருது பிரளயகால ருத்திரனைப் போல கோபம் கொண்டு வில், அம்போடு வருவதைக் கண்டு, வேடனைக் கண்ட மானைப் போல அஞ்சி நடுங்கி பசுவின் உருவம் கொண்டு பூமாதேவி ஓடத் தொடங்கினாள். ஆனால், அவள் எங்கு ஓடி ஒளிந்தாலும் பிருது மன்னன் அவளை விடாமல் துரத்தினான். அவனிடமிருந்து தான் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்ட பூமாதேவி அவனிடம் சரணாகதி அடைந்தாள். மேலும், தான் செய்த தவறை மன்னிக்கும்படியும் கேட்டுக் கொண்டாள். அம்மட்டுமின்றி ஒரு பெண்ணை தண்டிப்பது என்பது முறையான செயல் அல்ல என்றும் எடுத்துக் கூறினாள். அப்பொழுது பசு உருவம் தாங்கி நின்ற பூமா தேவியோடு பலவிதமாக வாதித்தான்.

பிருது மன்னனின் பேச்சைக் கேட்ட பூமாதேவி இறைவனுக்கு வணக்கம் சொல்லி, தன்னை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டினாள். முந்தைய அவதாரத்தில் தன்னைக் காத்த இறைவனே இப்பொழுது தன்னைக் கொல்லத் துணிந்தால் தான் என்ன செய்வது என்று தன்னுடைய ஆற்றாமையை வெளிப்படுத்தினாள். பிரம்மதேவரால் படைக்கப்பட்ட தானியங்களும் ஔஷதிகளும் இறைபக்தி யில்லாத கொடுமைக்காரர்களிடம் சிக்கி சின்னாபின்னமாகுவதைக் கண்டு மனம் பொறுக்காமல், அவை காப்பாற்றப்பட வேண்டி அவற்றை தனக்குள் ஒளித்து வைத்துக் கொண்டேன் என்று அவள் கூறினாள். அவைகளை அடைய வேண்டுமெனில் நான் கூறும் யோசனைப்படி செய்தால் அவற்றை அடையலாம் என்றாள் பூமாதேவி.

“ராஜா! என்னிடமிருந்து பாலைக் கறந்து மக்களை காப்பாற்ற நினைத்தால், அதற்குத் தகுதியான கன்றையும் கறக்கும் பாத்திரத்

தையும் ஏற்பாடு செய்து கொள்ளவும். கன்றின் மீது எனக்கு அபரிமிதமான அன்பு உண்டு ஆகையால், அதற்காக வேண்டி என்னால் இயன்றளவும் தருவேன். அதை கறந்து எடுத்துக் கொள் என்றது. மேலும், என்னை (பூமியை) மேடு பள்ளங்கள் இல்லாமல் சமன்படுத்து, அப்பொழுது தான் மழைக்காலம் இல்லாத காலத்திலும் நீர்தேக்கி நல்ல பலனைக் கொடுக்க முடியும்" என்று கூறினாள். அதைக் கேட்ட பிருது மன்னன் சுயம்புவ மனுவைக் கன்றாக்கி பிருது மன்னன் செய்ததைப் போலவே மற்றவர்களும் தம்தமக்கு விருப்பமான வற்றைக் கறந்து எடுத்துக் கொண்டார்கள். அதன் பிறகு ரிஷிகள் பிரகஸ்பதியைக் கன்றாகக் கொண்டு இந்திரியங்களாயப் பாத்திரங்களில் வேத ஞானத்தைப் பெற்றார்கள். தேவர்கள் இந்திரனை கன்றாகக் கொண்டு மது ரசத்தைக் கறந்தார்கள். தன்னுடைய கையாகிய பாத்திரத்தைக் கொண்டு அனைத்து விதமான ஔஷதிகளையும் தானியங்களையும் கறந்தான்.

கந்தர்வர்களும் அப்சர ஸ்திரிகளும் விசுவாவசுவைக் கன்றாகக் கொண்டு தாமரைப் போன்ற பாத்திரத்தில் பாலைக் கறந்தார்கள். அதுவே மதுரமான இசைக் கலையாகவும் சௌந்தர்யமாகவும் மாற்றம் கொண்டது. சிரார்த்த தேவதைகளான பித்ருக்கள் ஆர்யமுனியை கன்றாகக் கொண்டு பச்சை மண் பாத்திரத்தில் கவியத்தையும் சித்தர்கள் கபிலரைக் கன்றாகக் கொண்டு ஆகாசம் என்னும் பாத்திரத்தில் அணிமா முதலான சித்திகளையும், வித்தியாதரர்கள் அந்தக் கபிலரையே கன்றாகக் கொண்டு அதே ஆகாச பாத்திரத்தில் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற வித்தையையும், கிம்புருஷர்கள் மயனைக் கன்றாகக் கொண்டு மாயாஜால வித்தைகளையும், யட்ச, ராட்சகணங்கள் சிவனைக் கன்றாகக் கொண்டு கபாலமாகிற பாத்திரத்தில் இரத்தத்தையும், பாம்பு, தேள் போன்ற விஷ ஜந்துக்கள் தக்ஷணைக் கன்றாகக் கொண்டு இரும்பு பாத்திரத்தில் விஷத்தையும், பசுக்கள் முதலான நான்கு பாதங்களைக் கொண்ட விலங்குகள் நந்தியைக் கன்றாகக் கொண்டு காடு என்னும் பாத்திரத்தில் புற்களையும், மாமிச பட்சணிகளான மிருகங்கள் சிங்கத்தைக் கன்றாகக் கொண்டு மாமிசத்தையும், பறவைகள் கருடனைக் கன்றாகக் கொண்டு புழுப்பூச்சிகள், மரவகைகளையும், விருக்ஷங்கள் ஆல மரத்தைக் கன்றாகக் கொண்டு பலவிதமான வாசனையுடைய பால் வகைகளையும், மலைகள் இமய மலையைக் கன்றாகக் கொண்டு அருவிகளைப் பாத்திரமாகக் கொண்டு தாதுக்களைக் கறந்து கொண்டன.

இவ்விதமாக பிருது மஹாராஜாவைத் தொடர்ந்து எல்லாரும் தம்தம் தேவைக்கேற்ற பொருட்களை பூமாதேவியிடமிருந்து பெற்றனர். இதைக் கண்டு பிருது மஹாராஜா மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். பின்பு தன் கையில் இருந்த வில்லைக் கொண்டு மலைகளை உடைத்து பூமியை சமன்படுத்தினான். மேலும், மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தான். பிருது மஹாராஜாவின் காலத்தில் தான் நகரங்கள் என்றும், கிராமங்கள் என்றும் தனித்தனியே பிரித்து முறையான அமைப்புகள் உண்டாக்கப்பட்டன. மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

அதன் பிறகு, சரஸ்வதி நதிக்கரையில் நூறு அஸ்வமேத யாகங்கள் செய்ய ஆரம்பித்தார். மிகவும் சிறப்பான முறையில் செய்யப்பட்ட அந்த யாகத்தில் விஷ்ணுவே தோன்றி சிறப்பு செய்தார். யாகத்தில் தோன்றிய அந்த


## திருமலைக்கு வரும் பக்தர்களின் கவனத்திற்கு...

- தங்களுடைய முகவரியையும், தொலைபேசி எண்ணையும் ஒரு சிறு காகிதத்தில் எழுதி உங்களுடன் பயணிக்கும் குழந்தை மற்றும் முதியோரிடம் வைத்துக் கொள்ளும்படி அளியுங்கள். ஒரு வேளை அவர்கள் காணாமல் போனால் அவர்களை தங்களிடம் சேர்ப்பதற்கு இது உதவியாக அமையும்.
- திருமலையில் இருக்கும் போது தங்களுடன் பயணிப்போர் எவரேனும் தவறி காணாமல் போனால் காவல் வளாகத்திற்கு (1வது டவுன் காவல் நிலையம், 2வது டவுன் காவல் நிலையம், குற்றவியல் காவல் நிலையம்) வந்து சேர வேண்டும் என்று முன் கூட்டியே தகவலை பகிர்ந்துக் கொள்ளவும்.
- திருமலையில் அறைகள், தரிசனம், பிரசாதங்களுக்கு தளாரிகளை நம்பாதீர்கள். தி.தி.தே. கௌண்ட்டர்கள் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளுங்கள்.
- அன்னியர் தரும் உணவு பொருட்களை வாங்க வேண்டாம். அவர்கள் கூறும் வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள்.
- உங்களுடைய விலையுயர்ந்த பொருட்கள், நகைகள், பணம் ஆகியவற்றை அறையிலோ, வாகனத்திலோ வைத்து விட்டுச் செல்ல வேண்டாம்.

தேவாதிதேவனோடு பிரும்மா ருத்திரரோடு தேவர்களும் வந்தனர். கந்தர்வர்கள், முனிகள், அப்ஸரஸ்சுகள், தேவாதி தேவனின் புகழைப் பாடினார்கள்.

விஷ்ணுவிற்காகச் செய்யப்பட்ட யாகத்தில் விஷ்ணுவே தோன்றி ஆசிர்வதித்ததால் எல்லாவிதமான தேவைகளும் தீர்ந்து போனது. பிருதுவின் புகழ் மேலும் மேலும் உலகம் முழுவதும் வியாபித்தது. இந்த நிலையில் பிருது தன்னுடைய நூறு யாகங்களில் தொண்ணூற்றொன்பது யாகங்களை முடித்திருந்தான்.

பிருதுவின் புகழை பொறுத்துக் கொள்ள முடியாத இந்திரன் பிருதுவின் நூறாவது யாகத்தை தடுத்து நிறுத்த எண்ணி, யாகக்குதிரையை அபகரித்துச் செல்ல திட்டமிட்டான். அதற்காக அவன் பலவிதமான சன்யாசி வேஷங்கள் போட்டான். அவை யாவும் பின்பு பாஷாண்ட மதங்களாக வளர்ச்சி பெற்றது. இந்திரன் திட்டத்தை அறிந்த பிருது இந்திரனை அழிக்க முற்பட்டான்.

அப்பொழுது ரிஷிகள் அவனைத் தடுத்தனர். ரிஷிகள் தம்முடைய மந்திர சக்தியால் இந்திரனை வரவழைத்து இந்த யாகத்தில் போட்டு பொசிக்கி விடுவதாகக் கூறி யாகம் பண்ணத் தொடங்கினர். அப்பொழுது பிரம்மதேவர் அவர்கள் முன்பு தோன்றி அவ்வாறு செய்யவிடாமல் தடுத்தார்.

இவ்வாறாக இந்திரன் மீது பகை பாராட்டினால் மேலும் அவன் பல அதர்மங்களை செய்யவே தலைப் படுவான் என எச்சரித்தார். முக்தி மார்க்கத்தைப் பற்றி முழுவதும் அறிந்திருக்கும் பிருதுவுக்கு யாகங்களினால் என்ன பயன் உண்டாகும். அவன் செய்ய ஆரம்பித்த நூறு யாகங்களில் ஒன்று குறைவதினால் அவனுக்குக் குறையொன்றுமில்லை என்று எடுத்துக் கூறினார்.

பிரம்ம தேவரின் வார்த்தைகளின்படி பிருது மஹாராஜா இந்திரனோடு நட்புப் பூண்டான். நூறாவது யாகத்தைச் செய்யும் முயற்சியையும் கைவிட்டான். அதன்பிறகு புனித நீராடி அனைத்து தேவர்களிடமிருந்து வரங்களையும், ஆசிகளையும் பெற்றான். பிருது மஹாராஜா நூறு யாகங்களை செய்யாவிட்டாலும் பரம பவித்திர புருஷனானான்.

இவ்வாறாக பகவதவதாரமான பிருது மஹாராஜா சிறப்பாக ஆட்சி செய்து திவ்விய புகழ் அடைந்தான்.

பாகவத கதை சாகரம் தொடரும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையப்ப ஸ்வாமி சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தமது மனத்தூய்மையுடன் உடலும் தூய்மையாகிறது.

**ஆகாஸ கங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இத்தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக் கும் விதத்தில் வனத்தோட்டத்தை வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலா தோரணம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**ஆஸ்தான மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்ட பத்தில் சொற்பொழிவுகள், ஹரி கதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திர, சிலை, கைவண்ணக்கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியுஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியா னித்து மனதில் ஏற்பட்ட மனசுமைகளை குறைத்து கொள்ளலாம்.

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

## தொண்டரடிப்பொடியாழ்வார்

தொண்டரடிப்பொடியாழ்வார் மார்கழி மாதம் கேட்டை நக்ஷத்திரத்தில் திருமண்டங்குடியில் அவதரித்தார். இவர் அருளிய பிரபந்தங்கள் திருமாலையும் திருப்பள்ளியெழுச்சியுமாகும்.

*''மண்டங்குடியதனில் வாழவந்தோன் வாழியே*
*மார்கழியில் கேட்டை நாள் வந்துதித்தான் வாழியே*
*தெண்டிரைசூழ் அரங்கரையே தெய்வம் என்றான் வாழியே*
*திருமாலை ஒன்பதஞ்சும் செப்பினான் வாழியே*
*பண்டு திருப்பள்ளியெழுச்சி பத்துரைத்தான் வாழியே*
*பாவையர்கள் கலவிதனைப் பழித்த செல்வன் வாழியே*
*தொண்டு செய்து துளபத்தால் துலங்கினான் வாழியே*
*தொண்டரடிப் பொடியாழ்வார் துணைப்பதங்கள் வாழியே*

## பதவுரை

மண்டங்குடியதனில் – திருமண்டங்குடி என்னும் நகரத்தில், வாழவந்தோன் – பிறந்தவன், வாழியே – வாழ வேண்டும்; மார்கழியில் – மார்கழி மாதத்தில், கேட்டை நாள் – கேட்டை என்னும் நட்சத்திரத்தில், வந்து உதித்தான் – வந்து அவதரித்தான்; தெண்திரை – கடல், சூழ் – சூழ்ந்த, அரங்கரையே – திருவரங்கத்தில் உறையும் ரங்கநாதனையே, தெய்வம் என்றான் – பரதெய்வம் என்றான்; ஒன்பதஞ்சும் – 45 பாசுரங்கள் கொண்ட, திருமாலை – திருமாலை என்னும் திவ்ய ப்ரபந்தத்தை, செப்பினான் – அருளினான்; பண்டு – பழமையான, பத்து – பத்து பாசுரங்கள் கொண்ட, திருப்பள்ளியெழுச்சி – திருப்பள்ளியெழுச்சி என்னும் பிரபந்தத்தை, உரைத்தான் – அருளினான்; பாவையர்கள் – பெண்களோடு, கலவிதனை – கலத்தலை, பழித்த செல்வன் – நிந்தித்து கைங்கர்யமாகிய செல்வமுடையவன்; துளபத்தால் – துளவு மாலை கட்டும், தொண்டு செய்து – கைங்கர்யம் செய்து, துலங்கினான் – பிரசித்தமானான்; தொண்டரடிப்பொடியாழ்வார் – அன்பர் தாள் தூளி, துணைப்பதங்கள் – ஒப்பற்ற இரு திருவடிகள், வாழியே – வாழ வேண்டும்.

## சிறப்பு உரை

(மண்டங்குடியதனில் வாழவந்தோன்) மண்டங்குடி என்னும் நகரமானது சோழ தேசத்தில் புள்ளம்பூதங்குடி என்னும் திவ்ய தேசத்துக்கு அருகில் உள்ளது. இந்நகரை வாழ்வித்தலாவது – எம்பெருமானுடைய வனமாலை அம்சமாய், பூர்வசிக வைணவ குலத்தில் வந்து ஆழ்வார் பிறந்தமையாகும். இவ்வூரை *''தொல் புகழ் சேர் மண்டங்குடி''* என்பர் மாமுனிகள். அதாவது – தொண்டரடிப் பொடியாழ்வார் அவதரிக்கத் தக்கதாம்படி இயல்பான புகழையுடையதான திருமண்டங்குடி என்பர். மேலும் திருவரங்கப் பெருமாள் அரையர் என்னும் ஆசார்யர் திருப்பள்ளி எழுச்சி



பிரபந்தத்தின் தனியனில் ***"மண்டங்குடி என்பர் மாமறை யோர் மன்னியசீர்த் தொண்டரடிப்பொடி தொன்னகரம்"*** என்பர். அதாவது – மண்டங்குடியானது மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருளான பாகவதர்களுக்கு அடிமை யாம் தன்மையின் பெருமையை அறிந்தவர்கள் உள்ள தொன்னகரமாகும். தொல் நகரம் – பழமையான நகரம். நகரங்களிலேயன்றோ நல்ல வஸ்துக்கள் உண்டாவது; இது நகரமாகைக்குக் காரணம் ***"வண்டு திணர்த்த வயல் தென்னரங்கத்தம்மானைப் பள்ளி உணர்த்தும் பிரான் உதித்த ஊர்"*** என்று அரையர் அருளுகிறார். இதற்கு பிள்ளைலோகம் சீயர், ***"வண்டுகள் நெருங்கின வயல் சூழ்ந்த கோயிலுக்குத் தலைவரான பெரிய பெருமாளைத் திருப்பள்ளி உணர்த்தி, பின்புள்ளார்க்கும் திருப்பள்ளி எழுச்சி என்னும் பிரபந்தத்தை உதவினவரான தொண்ட ரடிப்பொடியாழ்வார் அவதரித்த ஊர்"*** என்று சுவைபட உரைப்பர். மேலும் அறிவிலா மனிசர்க்கு அறியாதன அறிவித்து அறியாமையாகிய உள் இருளைப் போக்கு கையாகிற உதவி செய்ய இவ்வூரிலே உதித்தவரா கையால் தொன்னகரம் மண்டங்குடி என்றும் அருளுவர்.

(மார்கழியில் கேட்டை நாள் வந்துதித்தான்) – மணவாளமாமுனிகள் தாம் அருளிய உபதேசரத்தின மாலையில் இந்த ஆழ்வாருடைய அவதார நாளைச் சொல்லும்போது ***"மன்னியசீர் மார்கழியில் கேட்டை"*** என்று அருளுவர். ***"மாஸாநாம் மார்க்கசீர்ஷோஹம்"*** என்கிற படியே மாதங்களில் கண்ணன் தான் மார்கழி மாதமா யிருப்பதாகச் சொன்னதால் மார்கழியின் பெருமை சீர்மையுடையதாகும். மார்கழியின் சீர் மன்னுகையாவது – மாதங்களுள் மார்கழி மாதம் வைஷ்ணவ மாதமாகை யாலும், ***"மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாள்"*** என்று ஆண்டாள் ஆதரித்து வரும்படியான பெருமையையுடை யதாகையாலும், திருவரங்கம் முதலான திவ்ய தேசங் களில் திருவத்யயந உற்சவம் தொடங்கும் காலமா கையாலும் வந்த சீர்மையுடையதாகும்.

மேலும் திருப்பள்ளி எழுச்சி என்கிற பிரபந்தத்தின் வாயிலாக பெரிய பெருமாளை எழுப்புமவரான இந்த ஆழ்வார் அவதரித்ததுக்கு அநுகூலமாக நேர்பட்ட பெருமையும் உடையதாகும். ***"மன்னிய சீர்"*** என்பதை கேட்டை நக்ஷத்ரத்துக்கு அடைமொழியாக்கும்போது அது மாதங்களில் சிறந்ததானாற்போலே இதுவும் நக்ஷத்ரங்களில் சிறந்ததாகும். இவர் மன்னியசீர் தொண்டரடிப் பொடியாகையாலே, இவர் அவதரித் தருளின திருநக்ஷத்ரமும் சீர்மை பொருந்தியபடி. இவ் வாறு எம்பெருமானோடும் பாகவதர்களோடும் தொடர்பு மாறாதே வரும்படியான ஏற்றங்களையுடைய நன்னா ளில் வந்து உதித்தவர் இவ்வாழ்வார். இந்நாளின் பெருமையானது பெரிய கோயிலையும் பெரிய பெருமாளையும் விரும்புமவராய் லோககுருவான இராமாநுசருக்கும் குருவான மதிப்பையுடையவரான பெரிய நம்பிகள் அவதரித்த உயர்த்தியையுமுடைய தாகும்.

(தெண்டிரைசூழ் அரங்கரையே தெய்வம் என்றான்) தென்திரை – தெளிந்த அலை. அலைக்கு தெளிவானது – ***"தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்"*** என்று குலசேகராழ்வார் அருளியபடியே தெளிந்த நீரையுடைய காவிரியானது, அலைகளாகிற கைகளாலே அரங்கன் திருவடிகளை வருட, அதனால் தெளிவுற்று இருந்தபடி சொல்லுகிறது. தெண் திரைசூழ் அரங்கர் – தெளிந்த அலைகளையுடைய காவிரியாலே சூழப்பட்ட திருவரங்கத்தில் பள்ளி கொண்ட அரங்கன் என்றபடி. இதுதன்னையே திருமாலையில் ***"இனிதிரைத் திவலை மோத எறியும் தண்பரவைமீதே தனிகிடந்து அரசுசெய்யும் தாமரைக் கண்ணன்"*** என்று அநுபவிக்கிறார் இவ்வாழ்வார். அதாவது இனிதாக அலைகளால் உண் டான திவலையானது தொட, மலைபோலே சில பெருந் திவலைகள் வந்து உடைந்து சிறு திவலையாய் அரங்கன் திருமேனியைத் தொடும் என்றவாறு.

(தெய்வம் என்றான்) தெய்வம் – தேவன். "தைவம்" என்ற வடசொல் தமிழில் "தெய்வம்" என்று வந்தது. "தேவ:" என்ற சொல் – "திவ்" என்ற வினையடியாகப் பத்து பொருள்களைக் கொண்டது. இது எம்பெருமானுக்கே பொருந்தும் அவையாவன – திவு – "க்ரீடா (விளையாடு கிறான்), விஜிகீஷா (ஜயிப்பதில் இச்சையுடையவன்), வ்யவஹார: (வேதம் முதலான வாக்குகளை பேசுபவன் – உபதேசிப்பவன்), த்யுதி (பிரகாசிக்கிறான்), ஸ்துதி (துதிக்கப்படுகிறான்), மோத (ஆனந்தப்படுகிறான்), மத (எல்லா விருப்பங்களையும் உடையவனாகையாலே ஒருவரையும் கணிசியாத மதத்தையுடையவன்), ஸ்வப்ந (தூங்குகிறான், காந்தி (கண்ணுக்கு இனிய காந்தியையு டையவன்), கதிஷ (உபாயமாகவும் உபேயமாகவும் அறியப்படுகிறான்)". இப்படிப்பட்ட தன்மைகளையுடைய

எம்பெருமானான அரங்கன் கண்ணனாய் அவதரித்தவன் என்பதற்குச் சேர ''மற்றுமோர் தெய்வமுண்டே .... அவனல்லால் தெய்வமில்லை'' என்று இவ்வாழ்வார் அருளியது காண்க.

(திருமாலை ஒன்பதஞ்சும் செப்பினான்) – (திருமாலை) திரு – மேன்மை. மாலை – அரங்கன் விஷயமாக பிரபந்தம் என்று பொருள் கொண்டு மேன்மையான பாமாலை என்றபடி. "மாலா" என்ற வடசொல் மாலை என்று விகாரப்பட்டது. மலர்களைக் கொண்டு தொடுக்கப்பட்ட பூமாலை போலே சொற்கள் கொண்டு தொடுக்கப்பட்ட பாமாலையாகிய பிரபந்தம் என்பர். தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய முதல் பிரபந்தம் திருமாலை. மற்றை ஆழ்வார்களின் பிரபந்தங்களும் சொன்மாலைகளானாலும் "திருமாலை" என்னும் தனிப் பெயர் இவ்வாழ்வார் அருளிய பிரபந்தத்துக்கே ஆயிற்று என்பர். மாலை என்பது பலவகைப்பிரபந்தங்களுள் ஒன்று. அதன் இலக்கணம் ஒரு விஷயத்தைக் குறித்துப் பல பாசுரங்கள் கூறுவதாகும். திருவரங்கனைப் பற்றியதால் திருமாலை எனப்பட்டது. இது பற்றியே திருவரங்கப் பெருமாள் அரையரும் ''உற்ற திருமாலை பாடும் சீர்'' என்ற இந்த பிரபந்த தனியனில் உரைப்பர். இந்த பிரபந்தம் ஒன்பதும் அஞ்சும் நாற்பத்தைந்து பாசுரங்களானாலும் மிகுந்த சுருக்கமும் மிக விவரமுமாகிற குறையின்றி, ஒரு சேதனன் அறிய வேண்டிய எல்லா அர்த்தங்களையும் உள்ளடக்கியதாகும். அமுதனாரும் இராமாநுச நூற்றந்தாதியில் ''செந்தமிழில் பெய்யும் மறைத்தமிழ் மாலை'' என்பர். அதாவது வேதம் போலே மூன்று வருணத்தவர்களுக்கு மட்டும் கற்பதன்றிக்கே, பெண்ணுக்கும் பேதைக்கும் கற்கலாம்படி எல்லாருக்கும் தகுதியாய், மிகுதியாய் கருத்துப் பொருளை பிரகாசிப்பதாய், தமிழ் மொழியிலே நிரூபிக்கப்பட்ட திருவேதம் என்று நிரூபிக்கும்படி இருப்பதாய், "திருமாலை" என்னும் பெயரையுடைய தமிழ் மாலை என்பர் பிள்ளைலோகம் சீயர். இது ஸ்ரீஸௌநக பகவான் அருளிய விஷ்ணு தர்மத்தின் சாரமாகும். இந்த பிரபந்தம் 1. பெரிய பெருமாளின் திருநாமத்தைக் கற்றதனால் உண்டான பெருமை, 2. ஸம்ஸாரப் பிறவியில் வெறுப்பு, 3. மிக எளியதான பகவத் விஷயத்தை ஸம்ஸாரிகள் இழப்பதைக் கண்டு வருந்துதல், 4. பெரிய பெருமாள் ஐயப்பாடு அறுப்பது முதலாக பரமபக்தி ஈறாக செய்த உதவி, 5. தம்மிடம் உபாயமின்மையை அருளுதல், 6. கைம் முதலற்ற தன்மையால் அகலப் பார்த்ததைக் கண்டு பெருமாள் சேர்த்துக் கொண்டமை, 7. எம்பெருமானே உபாயம் உபேயம் என்று நிச்சயித்தல், 8. பாகவதர்களுடைய பெருமை அவர்களைத் தாழ நினைப்பாருடைய தாழ்வு சொல்லுதல், 9. பிரமன் முதலானோர் பெறாத பேற்றை எம்பெருமானையே உபாயமாகக் கொண்ட கஜேந்திரனுக்கு அளித்தல் ஆகிய ஒன்பது வகைப்பாட்டில் அமைந்ததைக் காணலாம். மேலும் ஆழ்வாருக்கு பிறவி ஸம்பந்தம் தாழ்ந்தது என்னும் ஞானம், பாகவதர்களுக்கு அடிமை அளவாக ஸ்வரூபத்தின் உண்மை ஞானம், இந்த்ரியங்களை அடக்கும் ஞானம், வேறு உபாயம் கொள்ளாமல் எம்பெருமானே உபாயம் என்ற ஞானம், உபாயத்தின் உண்மை ஞானம் ஆகிய ஐந்து உணர்வுகளைப் பெரிய பெருமாளே உணர்த்த எழுந்தவர் ஆழ்வார். இத்தைச் சேதனர்களான நாம் இழக்கக் கூடாது என்பது பற்றியே ஒன்பதஞ்சுமான திருமாலை நமக்கு அருளினார் என்க.

வாழித்திருநாமம் வளரும்...

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. நவராத்திரி எந்த மாதம், கொண்டாடப்படுகிறது?
2. "நவராத்திரி" என்றால் என்ன பொருள்?
3. 64 கலைகளுக்கும் அதிபதி யார்?
4. நவராத்திரியில் தேவி, பாண்டாசுரனை, எந்நாளில் வெற்றி கொண்டார்?
5. நவராத்திரியில், எந்த நாளன்று, கொலு வைக்க ஆரம்பிக்க வேண்டும்?
6. நவராத்திரியில், நாம் எத்தேவியரைப் பூஜிக்க வேண்டும்?
7. நவராத்திரியின் போது, நாம் எந்தெந்த நூல்களைப் பாராயணம் செய்யலாம்?
8. சரஸ்வதி பூஜையை, நாம் எத்தினத்தில் கொண்டாடுகிறோம்?
9. சரஸ்வதி தேவி யாருடைய பத்தினி?
10. தமிழகத்தில் சரஸ்வதி தேவிக்கு கோயில் எங்குள்ளது?

விடைகளுக்கு 48ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : ராஜலக்ஷ்மி, நங்கநல்லூர்.

108 திவ்விய தேசவைபவம்





40

(சிதம்பரம்)

# தில்லைத் திருச்சித்ரகூடம்

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

பவிஷ்யோத்ர புராணமும், பிரம்மாண்ட புராணமும் இத்தலத்து வரலாற்றைக் கூறுகின்றன. தஞ்சகன், கஜமுகன், தண்டகன் என்கிற மூன்று அசுரர்கள் கடுந்த வத்தால், முறையிலா வரங்களைப் பெற்றுத் தேவர் களைத் துன்புறுத்தி வந்தனர். தேவர்கள், பகவானை வேண்ட, பகவான் கருடனை அனுப்பி, தஞ்சகன் கஜ முகன் என்கிற இரு அசுரர்களை அழித்ததாகவும், தண்ட கனை, தானே வராஹ வடிவில் வந்து அழித்ததாகவும் சொல்வர். இவர்களின் சகோதரிகள் சில்லி, தில்லி இரு வரும் பகவானை நோக்கித் தவம் செய்ய, பகவான் இரங்கி, சில்லியை, ஸ்ரீமுஷ்ணம் கோவில் காவல் தெய்வ மாகவும், தில்லியை, இந்தத் தலத்தில் தனக்கு நிழல் தரும் மரமாகவும் இருக்க அருள் புரிந்ததாகக் கூறுவர்.

த்வாபர யுகத்தில், கலிங்கராஜன் என்கிற அரசன் தபஸ் செய்து, காவேரன் என்பவன் மகனாய்த் தோன்றி னான் என்றும், அவன் செய்த தவப் பயனாய், காவேரி அவனுக்கு மகளாய் ஆனாள் என்றும், தன் தகப்பனுக்கு, தில்லைவனம் சென்று தவம் இருந்தால் முக்தி கிடைக் கும் என்று சொல்ல, காவேரன் இங்கு வந்து அருள் பெற்றதாகவும் சொல்வர்.

சிவபிரானும் உமையவளும் நடனம் செய்ய, முருக னும் விநாயகனும், உமையவள் நடனமே சிறப்பு என்றார் களாம். உமையும், சிவனும் திருவாலங்காட்டில் பிரம் மன், சரஸ்வதி முன்பாக போட்டி போட்டு நடனம் செய்து, யார் நடனம் சிறந்தது என்று கேட்க, அவர்களால் முடிவு சொல்ல இயலாததால், இருவரும் இங்கு சித்ர கூடம் வந்து இங்குள்ள கனக சபையில்

பகவானும் பிராட்டியும் ரத்ன சபையில், கிழக்கு நோக்கி இருக்க, அவர்கள் எதிரே, தெற்கு நோக்கி இருவரும் நடனம் ஆடியதாகவும், கொஞ்சமும் ஏற்றத் தாழ்வு இன்றி நடனம் நடைபெற்றதாகவும், தேவர்கள் கந்தர்வர்கள் என்று எல்லோரும் வியந்து பார்த்திருக்க, திடீரென்று போட்டியில் ஒரு திருப்பம் நேர்ந்தது என்றும், சிவபிரான் ஊர்த்வ தாண்டவம் ஆட, உமையால், பெண் ணாக இருந்தமையால் ஊர்த்வ தாண்டவம் ஆட வெட்கப் பட்டு, ஆட இயலாமல் போக, போட்டியின் விதிப்படி, போட்டியில் தோற்றவர் ஊரின் எல்லைக்குச் செல்ல வேண்டுமாதலால், உமை, ஊர் எல்லையில் தில்லைக் காளியாக இருக்கிறாள் என்றும் வரலாறு. சிவபிரான், பகவானைத் தொழுது இங்கேயே கிடந்த திருக்கோலத் தில் எப்போதும் இருந்து தன்னுடைய நடனத்தைக் கண்டு மகிழ வேண்டும் என்று வேண்டினார். பகவானும் கோவிந்தராஜன் என்கிற திருநாமத்தோடு, எழுந்தருளி னார் என்பர். தாமரை மலர் போன்ற பகவானின் முக மலர்ச்சிக்காக, சிவன் ஆடிய தாண்டவத்தை ஆனந்த தாண்டவம் என்கிறது புராணம்.

புண்டரீக மகரிஷி, சித்ர கூடத்தைச் சுற்றியுள்ள குளங்களிலிருந்து பூத்துக் குலுங்கும் புண்டரீக

மலர்களைக் (தாமரை) கொய்து, பூஜைக்கு முன்பு, சங்கல்பம் செய்து கொள்ளும்போது, கோவிந்த... கோவிந்த... என்று சொல்லி, அர்ச்சிக்க முற்படும்போது, பகவான் ராஜனைப் போலக் காட்சி தந்ததாகவும், அதனால், பகவானுக்கு கோவிந்தராஜன் என்கிற திருநாமம் ஏற்பட்டது என்றும் சொல்வர்.

இந்த மகரிஷியால் தோன்றிய தலம் என்றும் சொல்வர். இந்த மகரிஷியால் தோன்றிய தலம் என்றும் புராணங்கள் புகழ்கின்றன. கண்வ மஹரிஷி முக்தியை வேண்டி இங்கு வந்து தவம் செய்து பகவான் கோவிந்த ராஜன் அருளால் முக்தி பெற்றார் என்றும் வழங்கப் படுகிறது. இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சியில், அவன் மூலவரைப் பெயர்த்துக் கடலில் எறிந்தான் என்றும், எம்பெருமானார், கீழ்த் திருப்பதியில் உத்ஸவரை எழுந்த ருளச் செய்து காத்து, பின்னர், விஜயநகர சாம்ராஜ்ய அரசர் அச்சுதராயர் உதவியுடன், மீளவும் திருச்சித்ர கூடத்தில் எழந்தருளப் பண்ணினார் என்பது சரித்திரம்.

| | |
|---|---|
| பெருமாள் | – கோவிந்தராஜன் (மூலவர்) கிழக்கு நோக்கி போக சயனம். |
| உத்ஸவர் | – தேவாதிதேவன், பார்த்தசாரதி உபதேச முத்திரையுடன் அமர்ந்த திருக்கோலம், மற்றொரு உத்ஸவர் ... சித்ர கூடத்து உள்ளான். |
| தாயார் | – புண்டரீகவல்லி. |
| தீர்த்தம் | – புண்டரீக புஷ்கரணி. |
| ப்ரத்யக்ஷம் | – பாணினி, பதஞ்சலி, வியாக்ர பாதர், தில்லை மூவாயிரவர், புண்டரீக ரிஷி, கண்வ ரிஷி. |
| ஆகமம் | – வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – குலசேகராழ்வார், திருமங்கை ஆழ்வார் |

**சிறப்புகள் :**

பாற்கடல் இருப்பைக் காட்டும் போக சயனத்தில் மூலவர். இராமாயணத்தில் சக்ரவர்த்தித் திருமகனும், பிராட்டியும், இளைய பெருமாளும் அமர்ந்து இருக்கும் நிலை – உத்ஸவர் நிலை சித்ரகூடம்... வ்யூஹம், விப வம்... என்கிற இரண்டு நிலையும் இங்கு சேவிக்கலாம். குலசேகரப் பெருமான் வாக்கில், முதன்முதலில், ராமாயணம் அவதரித்தது இங்கேதான். திறல் விளங்கு மாருதி என்று குலசேகரர் கொண்டாடும் மாருதியும் இங்கேதான். இவ்வூருக்கு மேற்கே 26 கி.மீ. தொலை வில், காட்டுமன்னார்கோயில் (ஸ்ரீமந்நாதமுனிகளும், ஸ்ரீஆளவந்தாரும் அவதரித்த தலம்), வடமேற்கே 42 கி.மீ. தொலைவில் வராஹ க்ஷேத்ரமான ஸ்ரீமுஷ்ணம், வடக்கே 48 கி.மீ. தொலைவில் திருஅயிந்தை அடிய வர்க்கு மெய்யனும் , ஸ்வாமி தேசிகனும் எழுந்தருளி யுள்ள க்ஷேத்ரம், தெற்கே தாடாளன் சந்நிதி மற்றும் பல திவ்ய தேசங்கள்.

**த்யான ச்லோகம்**

*"திவ்ய ஸ்ரீசித்ரகூடே கநகமய ஸபா தத்ர கோவிந்தராஜ:*
*மோதா தத்யாபி நருத்யத் பசுபதிவிநுதோ போகி போகே*
*சயாந:।*
*தத்ரஸ்ரீ புண்டரீ கேத்யபி மதபலதா ஸாத்விகம்*
*தத்விமாநம்*
*தஸ்மின் கண்வ ப்ரஸந்நோ ஹரிதிகபிமுக: தத்ஸர:*
*புண்டரீகம்॥"*

-------

**பாசுரம்**

*"அம்பொன் நெடுமணிமாட அயோத்தி எய்தி அரசு எய்தி,*
*அகத்தியன் வாய்த்தான் முன் கொன்றான்*
*தன் பெருந் தொல்கதை கேட்டு மிதிலைச் செல்வி*
*உலகு உய்யத் திருவயிறு வாய்த்த மக்கள்,*
*செம்பவளத் திரள் வாய்த்தன்சரிதை கேட்டான்*
*தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்*
*எம்பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால்*
*பருகுவோம் இன் அமுதை மதியோம் அன்றே"*
*-குலசேகரர்*

--------

*"ஊன் வாட உண்ணாது உயிர்காவல் இட்டு*
*உடலில் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து*
*தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா*
*தமதா இமையோர் உலகு ஆளகிற்பீர்!*
*கானாட மஞ்ஞைக் கணம் ஆட மாடே*
*கயலாடு கானீர்ப் பழனம் புடைபோய்*
*தேனாட மாடக் கொடியொடு தில்லைத்*
*திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே"*

– திருமங்கை ஆழ்வார்

*"அடியால் உலகு எல்லாம் அன்று அளந்து கொண்ட*
*நெடியானைக் கூடுதியேல் நெஞ்சே! - கொடிதாய*
*சூத்திர கூடு அங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்*
*சித்திரகூடம் கருதிச் செல்"*

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

| பக்தி நம் முடன் கலக்கும் போது | | | |
|---|---|---|---|
| | உணவு | – | பிரசாதமாகிறது |
| | பட்டினி | – | விரதமாகிறது |
| | தண்ணீர் | – | தீர்த்தமாகிறது |
| | இசை | – | கீர்த்தனமாகிறது |
| | செயல்கள் | – | சேவையாகிறது |
| | பயணம் | – | யாத்திரையாகிறது |
| | மனம் | – | கோவிலாகிறது |
| | மனிதன் | – | புனிதனாகிறான்! |

தொகுப்பு : திரு. ஏ. முருகவேலு, ஒத்தக்கால் மண்டபம்

**நாமாக்கள்**

351. *ஓம் மஹார்த்தயே நம:*
(பெரும் செல்வம் உடையவனே)
*ஓம் பகவத்யை நம:*
(தெய்வீக அழகு நிறைந்தவளே)

352. *ஓம் ருத்தாய நம:*
(பக்தர்களுடன் தானும் வளர்பவனே)
*ஓம் ஸுகாந்தாயை நம:*
(எல்லோராலும் நன்கு விரும்பப்படுபவளே)

353. *ஓம் வ்ருத்தாத்மநே நம:*
(பெரிய ஸ்வரூபம் உள்ளவனே)
*ஓம் வாமலோசநாயை நம:*
(அழகிய திருக்கண்களை உடையவளே)

354. *ஓம் மஹாக்ஷாய நம:*
(வேதஸ்வரூபியான கருடனை வாகனமாக உடையவனே)
*ஓம் பல்லவாங்க்ர்யை நம:*
(இளந்தளிர் போன்ற மெல்லிய திருப்பாதங்களை உடையவளே)

355. *ஓம் கருடத்வஜாய நம:*
(கருடனைக் கொடியாகக் கொண்டவனே)
*ஓம் பத்ம மநஸே நம:*
(தாமரை போன்ற மெல்லிய உள்ளம் உள்ளவளே)

356. *ஓம் அதுலாய நம:*
(தனக்கு ஒப்பார் இல்லாதவனே)
*ஓம் பத்மபோதாயை நம:*
(தாமரை மலர்வது போல், சிறிது, சிறிதாகப் பக்தர்களைக் காடாக்ஷிப்பவளே)

357. *ஓம் ஸரபாய நம:*
(வரம்பு மீறுபவர்களை அழிப்பவனே)
*ஓம் மஹாப்ஸரஸே நம:*
(திருப்பாற்கடலிலிருந்து தோன்றியவற்றுள் சிறந்தவளே)

358. *ஓம் பீமாய நம:*
(தன் ஆணையை மீறுபவர்க்கு பயம் தருபவனே)
*ஓம் வித்வத்ப்ரியாயை நம:*
(தன்னை உணர்ந்தவர்கள், தன்னிடம் ப்ரீதி கொள்ளச் செய்பவளே)

359. *ஓம் ஸமயஜ்ஜாய நம:*
(காலத்தை அறிந்தவனே)
*ஓம் சாருஹாஸாயை நம:*
(குற்றமில்லா, அழகிய மந்தஹாஸம் உடையவளே)

360. *ஓம் ஹவிர்ஹவயே நம:*
(யாகங்களில் அளிக்கும் ஹவிஸ்சைப் பெற்றுக் கொள்பவனே)
*ஓம் சுபத்ருஷ்ட்யை நம:*
(நன்மையையே கொடுக்கும் திருக்கண் நோக்கை உடையவளே)

ஸ்ரீமதே புண்டரீகவல்லி நாயிகா ஸமேத ஸ்ரீகோவிந்தராஜ பரப்ரஹ்மணே நம:

சோழநாட்டுத் திருப்பதிகள் (40) நிறைவடைந்தது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

## சிறுவர் பகுதி விடைகள்

1. புரட்டாசி மாதம்.
2. ஒன்பது இரவுகள் என்று பொருள்.
3. சரஸ்வதி தேவி.
4. விஜயதசமியன்று.
5. மஹாளய அமாவாஸ்யை
6. துர்க்கை, மஹாலக்ஷ்மி, ஸரஸ்வதி தேவி
7. ஸ்ரீதேவி பாகவதம், சுந்தரகாண்டம், ஸ்ரீஅபிராமி அந்தாதி.
8. நவராத்திரியின் ஒன்பதாவது நாள்.
9. பிரம்ம தேவன்.
10. கூத்தனூர்.

தொகுப்பு : ராஜலக்ஷ்மி, நங்கநல்லூர்.




# ஆத்ம பலத்தை அறிந்து கொள்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்.

பணத்தின் பலம் அனைவரும் அறிந்ததே. பணமிருந்தால் நாம் விரும்பும் அனைத்தையும் வாங்கி விடலாம் என்பது சிறு குழந்தைகளுக்கும் தெரியும். ஆதலால்தான் பணபலத்தை பெறுவதற்கும், பண பலத்தை உபயோகப்படுத்திக் கொள்வதற்கும், பண பலம் குறித்து மேலும் தெரிந்து கொள்ள மனிதன் முயற் சித்துக் கொண்டிருக்கின்றான். பணபலம் இருந்தால் மாணாக்கர்கள் அயல் நாட்டிற்குச் சென்றும் நினைத்த வற்றை படிக்கலாம். அதுவே பணபலம் இல்லையெனில் படிப்பும் பாதியிலேயே தடைபடுவதோ அல்லது நினைத்த படிப்பை படிக்க முடியாமல் கடமைக்காக ஏதாவது ஒன்றை படித்து முடிக்கும் நிலையோ ஏற்படும். பணபலம் குறித்து அனைவருக்கும் தெரியும். ஆதலால், அதனுடைய விளைவுகள் குறித்து முழுமையான அனு பவம் இருப்பதால் ஒவ்வொருவரும் மிகவும் எச்சரிக்கை யுடன் இருப்பர். பணத்தை பாதுகாத்தும் கொள்வர். பணம் பலம் இல்லையெனில் அவர்களால் எதுவும் செய்யவும் இயலாது. ஆனால் பணபலத்தை விட, உடல் பலத்தை விட, புத்தி பலத்தை விட மிகவும் சக்தி வாய்ந்த மற்றொன்று உண்டு. அதுதான் ஆத்ம பலம். இதனை குறித்து எவருக்கும் தெரியவே தெரியாது.

இவ்வுலகில் பல அற்புதங்களை சாதித்து, வரலாற் றில் தம் பெயரை நிரந்தரமாக நிலை நிறுத்திய மகான்கள் தெரிந்தோ, தெரியாமலோ ஆத்மபலத்திற்கான பொருள் அறிந்தவர்கள் என்பதை அறிதல் வேண்டும். ஆதலால் தான் பகவத்கீதை உபதேசமும் ஆத்ம பலத்தை கூறுவதி லிருந்து துவங்குகிறது. ஆனால் பகவத்கீதை ஆத்ம பலத்தை கூறுவதால் தத்துவ உபதேசத்தை கூறுகின்றது என்பது பொருளல்ல. உன்னில் உள்ள சிறந்த பலம் குறித்து உனக்கு தெரியப்படுத்துகின்ற அபூர்வமான வரத்தை உனக்கு அளிக்கின்றது என பொருள். இதற்கு அறிவியல் பூர்வமாக ஒரு கதையும் உண்டு. ஒருமுறை ஒரு ஜோதிடன் ஒரு ஏழையின் வீட்டிற்கு சென்று, அவனு டைய வறுமை நிலை கண்டு, அதற்கான காரணத்தை கூறினான். உண்மையில் அந்த ஏழைக்கு நிறைய பணம் இருக்கின்றது. அதாவது உன்னுடைய தந்தை தான் மறைத்து வைத்திருந்த பணத்தை குறித்து உன்னிடம் கூறாமலேயே இறந்து விட்டார். ஆதலால் தான் நீ ஏழ்மை நிலையில் வாடுகின்றாய் என்று ஜோதிடன் கூறினான்! மேலும் ஜோதிடன், “அந்த புதையல் இங்கு தான் உள் ளது. ஆனால் அந்த புதையலுக்காக நீ தென்திசையில் தோண்டினால் தேனீக்களும், குளவிகளும் உன்னை கொட்டி விடும். மேற்கு திசையில் தோண்டினால் அங்குள்ள சாத்தான்கள் உன் செயலுக்கு தடங்களை ஏற்படுத்தும். வடக்கு திசையில் தோண்டினால் அங்குள்ள பாம்பு உன்னை அங்கேயே கொன்று விடும். ஆனால் கிழக்கு திசையில் தோண்டினால் உன் கைக்கு புதையல் கிடைக்கும்” எனக் கூறினான். அதாவது பணம் எங்கு உள்ளது என்பது தெரிந்தால் அந்த ஏழை கண்டிப்பாக அத்திசையில் செல்லும் வாய்ப்பு உண்டு.



அது போன்றே ஸ்ரீமத்பகவத் கீதை ஆத்ம பலத்திற்கான வழிமுறையினையும், ஆத்ம பலத்தை குறித்த விவரங்களையும் தெரியப்படுத்துகின்றது. அனைவரும் இதனை தத்துவ உபதேசமாக ஏற்றுக் கொண்டனர். எனவே பிரதி ஒருவரின் பரம ஐச்வர்யம் அவர்களுக்கு கிடைக்காமல் போனது. ஆதலால் பணம் இருந்தும் அனைவரும் ஏழைகளாயினர்.

“ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டுவதில்லை, நெருப்பு எரிப்பதில்லை, தண்ணீர் நனைப்பதில்லை, காற்று உலர வைப்பதில்லை” –பகவத் கீதை 2–23. “ஆத்மா வெட்ட முடியாதது, எரிக்கப்பட முடியாதது, நனைக்கப்பட முடியாதது. இது நித்யமானது, எங்கும் நிறைந்தது, மாற்றமில்லாதது, இயக்கமற்றது, சனாதனமானது” – பகவத் கீதை 2–24.

இவ்விதமாக கீதாசார்யன் ஆத்மாவின் மகிமைகளை தெரியப்படுத்துகின்றார். மனிதன் இறந்த வுடனே அனைவரும் அழுகின்றனர். ஆத்மா அவ்வுடலை விடுத்து சென்று விட்டதாக அனைவரும் கூறுவர். அதாவது உடலிலிருந்து ஆத்மா வெளியேறிய உடனே அழுகை வருகின்றது. ஆனால் ஆத்மா உடலில் இருக்கும் பொழுது மகிழ்ச்சி வருகின்றதா? இல்லை. ஏனெனில் அவ்வாத்மா சென்றபின் தான் அதன் மதிப்பு தெரிகின்றது. பணம் நட்டம் ஏற்பட்ட பிறகு பணத்தின் மகிமை தெரிவது போன்று. உண்மையில் நம்மில் உள்ள உடல் பலம், மனோபலம், புத்திபலம் இவையாவும் நம் சக்தியில் 10 சதவீதம் மட்டுமே. மீதமுள்ள 90 சதவீதம் ஆத்ம பலத்திற்கு உட்பட்டது. அது மானிடருக்கு கிடைக்காமல் விடுகின்றது. ஆத்மபலத்தை அறிவது எப்படி என்பது தற்பொழுது நமக்கு ஏற்படும் கேள்வி. மனதிற்கு ஏற்படும் சந்தேகம், புத்திக்கு உள்ள எல்லை நிலமான ஆலோசனைகளை விடுத்து ஆத்ம சுயரூபமாக உங்களுக்கு வேண்டியது எதுவோ அதை நிர்ணயித்து, அதனை அடைய தீவிரமான தவத்தை வளர்த்துக் கொள்வதே ஆத்ம பலத்தை விழிப்படையச் செய்வதற்கான வழியாகும்.

பூமியில் விதை விதைத்தால், அதற்கு சரியான முறையில் நீரை ஊற்றினால் சில நாட்களில் கண்டிப்பாக துளிர்க்க துவங்கி விடும். பூமி ஆத்மா போன்றது. அது சலனத்தில் இருப்பது. எப்பொழுது தீவிரமான தீர்மானத்துடன் ஒரு லட்சயத்தை ஏற்படுத்தி, எவ்விதமான அவமானமில்லாமல் இருப்போமோ, தேவையான செயல்களை செய்வோமோ அப்பொழுது ஆத்ம பலத்தின் விழிப்புணர்வால் நம்முடைய லட்சயம் கண்டிப்பாக நிறைவேறும். இச்செயல் சிறிய சிறிய லட்சயங்களில் துவங்கி வெற்றியடைந்து, பெரிய பெரிய லட்சயங்களை சாதிப்பதால் ஆத்ம பலம் மகா உன்னதமான விழிப்புணர்வை அடைகின்றது. கீதை நமக்கு வழங்கிய வரமே ஆத்ம பலமாகும். **பகவத்கீதை தொடரும்...**

**71. சாஸ்த்திர நீதிகள் :**

பிதா ரக்ஷதி கௌமாரே
பர்த்தா ரக்ஷிதி யௌவநே।
ரக்ஷதி வார்த்தகே புத்ரா
ந ஸ்திரீ ஸ்தானம்
ச்வாதந்ரயம் அர்ஹதீ॥

குழந்தை பருவம் முதல் பெண்களை தகப்பன் காப்பாற்றி வருகிறான்! யௌவன பருவம் கல்யாணம் ஆனதும் கணவன் காப்பாற்றுகிறான்! முதுமை காலம் ஆனதும் பிள்ளைகளும், பெண்களும் காப்பாற்றுகிறார்கள்! இதனால் பெண்களுக்கு குழந்தை முதல் முதுமை வரை எல்லோருடைய ஆதரவும் கிடைத்து விடுகிறது.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.

# ஆயுர் வேதம்

# புளி





தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.
: 90007 61390.
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா.

அறுசுவை கொண்ட உணவுகளை நாம் நாள் தோறும் உட்கொள்வதன் மூலம் அவை நம் உடலுக்கு சக்தியைத் தருவதுடன் மட்டுமின்றி ஆரோக்கியத் துடன் இருக்கவும் துணை புரிகிறது. "புளி இல்லாத உணவு இல்லை" என்ற பழமொழிக்கேற்ப நம் முன்னோர்கள் இயற்கையாக நம் உடலில் உள்ள கழிவுகளை நீக்க புளியை உபயோகித்தனர். புளியை சமஸ்கிருதத்தில் ஆம்லீக என்றும், ஆங்கிலத்தில் Tamarind என்றும், இந்தியில் இம்லி என்றும், தெலுங்கில் சிந்தபண்டு என்றும் அழைக்கின்றனர். புளியின் அறிவியல் பெயர் டாமரிண்டஸ் இண்டிகா என்பதாகும். இது சிஸால்பினேசி என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது.

ப்ளோரைடு சதவீதம் அதிகமாக உள்ள நீரை உபயோகிப்பதன் மூலம் வரக்கூடிய பயங்கரமான வியாதிகளில் இருந்து விடுபட நாம் உட்கொள்ளும் உணவுகளில் புளியை உபயோகிக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். புளி எவ்வகையில் மருந்தாகப் பயன்படுகின்றது என்பதை அறிந்து கொள்வோம்.

### தேள், தேனீ மற்றும் புழுக்கடிகளுக்கு :

புளியை சிறிது நேரம் நீரில் நனைத்து தேள், தேனீ, குளவி போன்ற புழுக்கள் கடித்த இடத்தில் தடவினால் எரிச்சல், வலி, அரிப்பு, தடிப்புகள் போன்றவை குறையும்.

### கோடைகால தாகத்திற்கு :

நாள்தோறும் ஒரு முறை 100 மி.லி. நீரில் 10 கிராம் புளியை போட்டு ஒரு மணி நேரம் ஊற வைத்து, பிசைந்து, வடிகட்டி அந்த நீரில் ஏலக்காய் பொடியை போட்டு 1 டீஸ்பூன் வெல்லம் சேர்த்து குடிக்க வேண்டும்.

### புளி இரசத்தின் பயன்கள் :

புளியை வெண்ணீரில் போட்டு சிறிது நேரம் ஊற வைத்து, பின் மிக்ஸியில் போட்டு பேஸ்டாக அரைத்து பல வியாதிகளுக்கு உபயோகப்படுத்தலாம். அதைப் பற்றி இப்பொழுது காண்போம். 1. 3 மாதம் வரை ஒவ்வொரு மாத மும் மாதவிடாய் ஆன மூன்று நாட்கள் வெறும் வயிற்றில் சுண்டைக்காய் அளவு புளி பேஸ்ட், சிட்டிகை அளவு சுண்ணாம்பு கலந்து விழுங்கினால் மாதவிடாயின் போது ஏற்படும் வலி நீங்கும். 2.இந்த பேஸ்ட்டுடன் சிறிது உப்பு கலந்து நாக்கின் மீது தடவுவதன் மூலம் இருமல் குறையும். 3. இந்த பேஸ்ட்டில் பாதி வெல்லம், கால்பாகம் மஞ்சள் பொடி கலந்து இடுப்பு முழங்கால்கள் மேல் தடவி விட்டால் வலி, சுளுக்கு போன்றவை குறையும். 4.அவ்வாறே இந்த

பேஸ்ட்டில் தகுந்த அளவு எலுமிச்சை தேன் கலந்து முகத்தில் தடவி, ஒரு மணி நேரத்திற்கு பின் கழுவினால் கறுப்பு மச்சம் மாயமாகும்.

### மஞ்சள் காமாலை நீங்க :

இரவு நேரம் 60 மி.லி. நீரில் 10 கிராம் புளி, 2 கிராம் சுண்ணாம்பு கலந்து வடி கட்டி, காலை வெறும் வயிற்றில் அந்நீரை குடிக்க வேண்டும். மோர் போன்ற திரவப் பொருள்களை அதிக அளவு உட் கொள்ள வேண்டும்.

இதனுடன் பத்திய உணவுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் வாயில் நீர் ஊறுதல், வாந்தி வருதல் போன்ற உபாதைகள் தீர்ந்து நன்கு பசி எடுக்கும். மஞ்சள் காமாலையும் குறையும்.

### புளியங்கொட்டையினால் படர்தாமரை வியாதிக்கு மருந்து :

புளியங்கொட்டையை எலுமிச்சை பழ இரசத்துடன் அரைத்து படர்தாமரை வியாதி உள்ள இடத்தில் தடவி வந்தால் குணமாகும்.

புளியங்கொட்டையை ஒரு வாணலியில் போட்டு, நன்கு வறுத்து, நீரில் ஒரு நாள் முழுவதும் ஊறவைத்து, பின் மிருதுவாக பிசைந்தால் மேல் உள்ள தோல் நீங்கி விடும்.

உள்ளேயுள்ள பருப்பை நன்கு காய வைத்து மறுபடியும் நன்கு வறுத்து பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்த பொடியை ஆயுர் வேத மருந்துக் கடைகளில் குறைந்த விலையில் விற்கின்றனர்.

### வயிற்றுப் போக்கு குறைய :

25 கிராம் புளியங்கொட்டை பொடி, 25 கிராம் சீரகப் பொடி, 25 கிராம் சர்க்கரை ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் 3 வேளை 1–2 கிராம் பொடியை 50–100 மி.லி. நீரில் கலந்து குடித்தால் வயிற்றுப் போக்கு குறையும்.

### மலத்துவாரம், கர்ப்பப்பை இறக்கம் நீங்க :

நாள்தோறும் இரவு புளியங்கொட்டை பொடியில் தகுந்த அளவு நீர் சேர்த்து, பேஸ்ட் ஆக செய்து மலத்துவாரத்தின் மேல் தடவி கட்டு கட்டினால், மலத்துவார தசைகள் இறுக்கமுற்று மலத்துவார இறக்கம் குறையும். இம்மருந்தை பெண்களுக்கு கருப்பை இறக்கம் ஏற்படும் போதும் உபயோகிக்கலாம்.

### வெள்ளைப்படுதல் :

நாள்தோறும் காலை, மாலை உணவு உட்கொள்வதற்கு அரை மணி நேரம் முன்பாக 2–3 கிராம் புளியங்கொட்டைப் பொடியை 100 மி.லி. அரிசி கழுவிய நீரில் குடித்தால் பெண்களுக்கு வெள்ளைப்படுதல் நீங்கும்.

### முழங்கால் வலிக்கு :

100 கிராம் புளியங்கொட்டைப் பொடி, 100 கிராம் கற்கண்டுப் பொடி கலந்து வைத்துக் கொண்டு ஒன்று அல்லது இரண்டு முறை 2–3 கிராம் பொடியை 100 மி.லி. வெதுவெதுப்பான பாலில் கலந்து குடித்தால் முழங்கால் வலி குறையும்.

ஆயுர்வேதம் வளரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 37க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | நி | ன் | ற | வூ | ர் | யூ | றை | ந | ரு | 2 தி |
| ரு | மி | த | ப் | ச | த | 3 ர | | கா | ல | 4 கோ | |
| ப் | | | ணி | யா | ல் | க | ய | த் | 5 நி | | |
| பே | 6 பா | | வ | 7 த | கி | ங் | த | த் | 8 மு | | ம் |
| ர் | ஞ் | ன் | யா | சா | 9 ரா | ச | ந | ட | ன | ம் | ர |
| ந | ச | ப | தி | வ | மா | தி | 10 ந | | னி | த | பு |
| க | ரா | நா | ந் | தா | வ | 11 ஆ | ந் | | கி | வை | ண |
| ர் | த் | ம | 12 வி | ர | தா | | த | லா | 13 மோ | த் | ண் |
| | ர | த் | மா | ம் | ர | 14 பி | கோ | ப | | பா | க |
| 15 கு | ம் | 16 ப | கோ | ண | ம் | த | 17 ப | 18 சு | 19 பா | ஷ் | க் |
| 20 தை | ரி | ய | ல | ட் | சு | மி | ர் | | | சி | ரு |
| 21 தி | ரு | ம | ங் | கை | யா | ழ் | வா | ர் | | 22 வி | 23 தி |



# 2019 செப்டம்பர் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| | (யுரேனஸ்) | | ராகு |
| (நெப்ட்யூன்) | **செப்டம்பர் - 2019**<br>9 - சுக்ரன் - கன்னி<br>11 - புதன் - கன்னி<br>17 - சூரியன் - கன்னி<br>18 - சனி - வ.நி. | | |
| | | | சூரியன்<br>புதன்<br>சுக்ரன் |
| (ப்ளூட்டோ)<br>கேது<br>(சனி) | குரு | | சந்திரன் |

**மேஷம்**

குரு தன–குடும்ப ஸ்தானத்தை நோக்குவதால் குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். விருந்து விழா என்று சென்று வருவீர்கள். மனதில் உற்சாகம் பெருகும். தெய்வப் பணிகள் நிறைவேறும். பலவழிகளில் பணம் வந்து சேரும். அரசு சம்பந்தமான காரியங்கள் நிறைவேறும்.

**ரிஷபம்**

உங்கள் ராசிநாதன் சுக்ரன் புதனுடன் இணைந்து நான்கில் உலவிடுவது சிறப்பாகும். உங்கள் மதிப்பும் அந்தஸ்தும் உயரும். புதிய ஆடை அணிமணிகள், அலங்காரப் பொருட்கள், வாசனை திரவியங்களின் சேர்க்கைப் பெறுவீர்கள். பெண்களுக்கு உற்சாகமான போக்கு தென்படும்.

**மிதுனம்**

சனி, கேதுத் தவிர பொதுவாகவே மற்ற கிரகங்கள் நல்ல நிலையில் உலவுகின்றனர். அரசு சம்பந்தமான காரியங்கள் இப்போது நிறைவேறும். முக்கியஸ்தர்கள் உங்களுக்கு உதவுவார்கள். சொத்துக்களால் வருமானம் கிடைக்கும். உடன் பிறந்தவர்கள் பக்க பலமாக இருப்பார்கள்.

**கடகம்**

இரண்டாம் இடத்தில் சூரியன், செவ்வாய், புதன், சுக்ரன் உலவிடுவது சிறப்பாகும். அதனால் குடும்பத்தில் சுப காரியங்கள் நிகழும். பொருளாதார நிலை உயரும். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு கிடைக்கும். அரசு வழி எதிர்ப்பார்த்திருந்த காரியங்கள் சுமூகமான முடிவுக்கு வரும்.

**சிம்மம்**

ராசியில் உண்டாகி இருக்கும் கூட்டு கிரக யோகத்தால் எதிர்ப்புகளைக் கடந்து வாழ்வில் வெற்றி பெறுவீர்கள். அரசு சம்பந்தமான காரியங்கள் நிறைவேறும். தொலைதூரத் தொடர்பால் நலமும், நிர்வாகத் துறையினருக்கு வரவேற்பும் கூடும். புதிய தொழில் தொடங்கும் எண்ணம் மேலோங்கும்.

**கன்னி**

கலைகளில் ஆர்வம் கூடும். இசைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு வரவேற்பு கூடும். தொலை தூரத்திலிருந்து ஒரு நற்செய்தி கிடைக்கப் பெறுவீர்கள். நல்லவர்கள் உங்களுக்கு உதவி புரிவார்கள். மதச் சடங்குகளை முறைப்படி செய்வீர்கள். தந்தையாலும் பிள்ளைகளாலும் அனுகூலம் உண்டாகும்.

**துலாம்**

லாபஸ்தானத்தில் சேர்ந்திருக்கும் கிரக சேர்க்கை மிகவும் சிறப்பானது. அறிவாற்றலும் தோற்றப் பொலிவும் கூடும். கலைத்துறையினருக்கு வெற்றிகள் குவியும். எழுத்தாளர்கள், பத்திரிக்கையாளர்கள் கணிதம், ஏஜென்ஸி, தரகு போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றமான பாதை தென்படும்.

**விருச்சிகம்**

குருபலம் கூடி உள்ள நேரம். தொழில் வீடாகிய பத்தாம் இடத்தில் ஏற்பட்டுள்ள கூட்டு கிரக யோகத்தால் சொல்லாற்றலாலும், செயல் திறமையாலும் உங்கள் மதிப்பும் அந்தஸ்தும் உயரும். எடுத்த காரியங்கள் எல்லாவற்றிலும் வெற்றி பெறுவீர்கள். பிரபலங்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**தனுசு**

பாக்கியஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்ரன், புதன் ஆகியோர் உலவிடுவது மிகவும் சிறப்பாகும். இரண்டில் சனி, கேது உள்ளதால் குடும்ப உறுப்பினர்கள் எல்லோருடனும் அனுசரித்து செல்வது அவசியம். 17ஆம் தேதி சூரியன் பத்தாம் வீட்டிற்குச் செல்வதால் அரசுப் பணிகள் ஆக்கம் தரும்.

**மகரம்**

பாக்கியஸ்தானம் என்னும் ஒன்பதாமிடத்தில் சுக்ரனும் புதனும் ஒன்று கூடுகிறார்கள். பொது பணிகளில் ஆர்வம் கூடும். பண நடமாட்டம் திருப்தி தரும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். புனிதப் பயணம் மேற்கொள்ள வாய்ப்பு கூடி வரும். கொடுக்கல் வாங்கல் இனங்கள் லாபம் தரும்.

**கும்பம்**

ஏழிலும், பத்திலும் உலவிடும் கிரகங்கள் உங்கள் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் அதிகரிக்கச் செய்யும். பணப்பெருக்கம் அதிகரிக்கும். துணிச்சலான காரியங்களில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். மனதில் தெளிவும், தன்னம்பிக்கையும் உருவாகும்.

**மீனம்**

குருபகவான் ஒன்பதாமிடத்திலிருந்து ராசியை நோக்குகிறார். ஆறாமிடத்தில் செவ்வாயும், சூரியனும் உலவிடுவதால் எதிர்ப்புகளை துணிவோடு வெல்லும் ஆற்றல் உண்டாகும். கலைத்துறையினருக்கு வெற்றிகள் குவியும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி :
(பெரிய எழுத்துக்களில்) ________________

________________

________________

________________

மாவட்டம் & பின்கோடு எண் ________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஓ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்செண்டர்

### உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.

## ஆந்திர மாநில புதிய ஆளுநராக பொறுப்பேற்பதற்கு முந்தைய நாள் (23-07-2019) திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார், திருமலை ஸ்ரீவராஹ ஸ்வாமி மற்றும் திருவேங்கடமுடையானை தரிசித்த மேதகு ஆளுநர் திரு.பிஷ்வபூஷண் ஹரிசந்தன் அவர்கள்













தி.தி.தே. திருமலை சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்ட திரு. ஏ.வி. தர்மாரெட்டி அவர்களுக்கு 19-07-2019 அன்று திருமலை ஆலயத்தில் தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் (திருப்பதி) திரு.பி. பசந்த்குமார் ஐ.ஏ.எஸ். அவர்கள் பதவிப்பிரமாணம் செய்து வைத்தபோது...



தி.தி.தே. ஸ்ரீவேங்கடேஸ்வரா பக்தி சேனல் புதிய தலைவர் மற்றும் இயக்குநராக திரு.ப்ருத்விராஜ் பாலிரெட்டி அவர்கள் 28-07-2019 அன்று பதவி ஏற்றபோது...



SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by
Tirumala Tirupati Devasthanams
25-08-2019 Regd. with the Registrar of Newspapers under
"RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment
No.PMGK/RNP/WPP-04/2018-2020

07-10-2019
திங்கட்கிழமை
பகல் : திருத்தேர்